
# திருக்கோயில்

பிப்ரவரி 1983 விலை ரூ. 2-00






திருவரங்கம் அருள்மிகு அரங்கநாதசுவாமி திருக்கோயிலின் இராயகோபுரம் ஏழாம் நிலைத் துவக்க விழாவில், அறநிலைய அமைச்சர் மாண்புமிகு திரு இராம. வீரப்பன் அவர்கள், திருவரங்கம் தொகுதிச் சட்டமன்ற உறுப்பினர் திரு. சௌந்தரராஜன், M.L.A., ஸ்ரீமத் அகோபில மடம் ஜீயர் சுவாமிகள், திருச்சித் துணை ஆணையர் திரு. கே. சிதம்பரம், திருவரங்கம் கோயிற் செயல் அலுவலர் திரு. வி. கே. வேலுசாமி, கவிதாமணி திரு. அ. வெ. ரா. கிருஷ்ணசாமி ரெட்டியார் முதலிய பெருமக்கள் பலர் கலந்து கொண்டனர்.



முகப்பு

அருள்மிகு
பிரசன்ன வேங்கடாசலபதிப் பெருமாள்
திருக்கோயில்,
குணசீலம், முசிறி வட்டம்,
திருச்சி மாவட்டம்

# திருக்கோயில்

ஆசிரியர் : ந. ரா. முருகவேள், M.A., M.O.L.

| மாலை : 25 | திருவள்ளுவர் ஆண்டு 2014, துந்துபி ஆண்டு-மாசி & பங்குனி பிப்ரவரி 1983 ரூ. 2-00 | மணி : 5 |
|---|---|---|

## சந்தாதாரர்களுக்கு வேண்டுகோள்!

***திருக்கோயில்*** திங்கள் இதழின் சந்தாதாரர் களாகச் சேர விருப்பமுள்ளவர்கள்,

**ஆணையர் அவர்கள்,**
**அறநிலைய ஆட்சித்துறை,**
**சென்னை — 600 034**

என்ற முகவரிக்கு மணியார்டர் மூலம் பணம் அனுப்பிச் சந்தாதாரராகச் சேர்ந்து கொள்ளலாம்.

ஜனவரி முதல் டிசம்பர் வரையுள்ள காலம், சந்தா ஆண்டு எனக் கணக்கிடப்படும்.

தனிப்பட்ட சந்தாதாரர்கள் ஒவ்வொருவரும் நேரடியாக ஆணையர் அலுவலகத்திற்கே பணம் அனுப்புமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

நாளுக்கு நாள் உயர்ந்துவரும் தாள்விலை, அச்சகக் கட்டணம், அஞ்சல்தலைக் கட்டணம் காரணமாக, 1983 ஜனவரி முதல் ''திருக்கோயில்'' திங்கள் இதழின் ஆண்டுச்சந்தா உள்நாட்டிற்கு ரூ.15 லிருந்து ரூ.24 ஆகவும், இலங்கை மலேசியா முதலிய வெளிநாடுகளுக்கு ரூ.25-லிருந்து ரூ.36-ஆகவும் உயர்த்தப்பட்டுள்ளது.

**ஆதலின், திருக்கோயில் இதழின் ஆண்டுச் சந்தா 1983 ஜனவரி மாதம் முதல், பின்வருமாறு நிர்ணயிக்கப்படுகின்றது:**

| | | |
|---|---|---|
| **உள்நாடு** | ரூ. | 24.00 |
| **வெளிநாடு** | ரூ. | 36.00 |

பழைய சந்தாதாரர்கள், கடிதம் எழுதும் பொழுதும், பணம் அனுப்பும்பொழுதும், தங்கள் சந்தா எண்ணையும் தவறாமல் தெரிவித்து உதவினால்தான், உடனுக்குடன் ஆவன செய்ய வசதியாக இருக்கும். புதிய சந்தாதாரர்கள் பணம் அனுப்பும் பொழுது மணியார்டர் கூப்பனில், புதிய சந்தா என்பதைக் குறிப்பிடுமாறும், சரியான முழு முகவரியைப் பின்கோட் (Pin Code) எண்ணுடன் தெரிவிக்குமாறும், கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

வெளிநாட்டுச் சந்தாதாரர்கள் அவ்வப்போது தங்கள் சந்தாவைப் புதுப்பித்துக் கொள்ளக் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

## பொருளடக்கம்

திரு.வி.க.வும், மறைமலை அடிகளும்
—திரு வி. கலியாணசுந்தரனார்.

பன்னிரு திருமுறைப் பாடல் திரட்டு (உரையுடன்)
—திரு. ந. ரா. முருகவேள்.

திருவிடைமருதூர் மும்மணிக்கோவை
—ஆசிரியர்.

திரு.வி.க.வும், திருஞானசம்பந்தரும்
—திரு. வி. கலியாணசுந்தரனார்.

திருமந்திர யோகம்
—தவத்திரு சுத்தானந்த பாரதியார்.

கோச்செங்கட் சோழனின் கோணேசர் பெருங்கோயில்
—திரு டாக்டர் இரா. கலைக்கோவன்

சமயமும், விஞ்ஞானமும்
—திரு ந. ரா. முருகவேள்.

நாவுக்கரசர் நவிலும் ஞானம்
—திரு மா. சண்முகசுப்பிரமணியம், B.A., B.L.

பக்தியின் தத்துவம்
—திரு. பி.ப. அண்ணங்கராசாரிய சுவாமிகள்

இறைவியின் பெருமை
—கவிஞர் மனசை ப. கீரன், B.A., B.T.

தேவாரப் பாடல்பெற்ற சோழநாட்டுச் சிவத்தலங்கள்
—ஆசிரியர்

இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை வெளியீடு

# திரு. வி. க. வும், மறைமலை அடிகளும்

[‘செந்தமிழ்த் தென்றல்’ திரு.வி. கலியாண சுந்தரனார் அவர்கள் (26.8.82—17.9.1953), தமிழ்ப் புலமைத் துறையில் மட்டுமேயன்றி, வேறு எத்தனையோ பற்பல துறைகளில் ஈடுபட்டு, நாட்டுமக்களின் நலத்துக்காகப் பாடுபட்டு உழைத்த, ஓர் அரும்பெருஞ் சான்றோராவர்.

‘‘கடன்என்ப நல்லவை எல்லாம், கடனறிந்து
சான்றாண்மை மேற்கொள் பவர்க்கு’’

என்று திருவள்ளுவர் அருளிச் செய்தபடி, தமிழ் மொழி—சைவ வைணவ சமண பௌத்த கிறித்தவ இசுலாமிய சமயங்கள்-இந்திய விடுதலை இயக்கம்- தொழிலாளர் இயக்கம் - கலப்பு மணம்-விதவை மறுமணம்-உடனுண்ணல்-தீண்டாமை ஒழிப்பு-சமய சமுதாயச் சீர்திருத்த முற்போக்குப் பணிகள், முதலிய பலவேறு துறைகளிலும் ஈடுபட்டு, அயராது உழைத்து, ஒவ்வொரு துறையிலும் தோட்டி முதல் தொண்டைமான் வரையில், எல்லா நிலைகளிலும் உள்ள மக்கள் அனைவருடனும் கூடிக் கலந்து பழகி, ஐம்பது (50) ஆண்டுகளுக்கு மேலாகப் பணியாற்றும் அரிய பெரிய வாய்ப்பும், அருளியற் பேறும், கோடியில் ஒருவருக்கே கிடைத்தல் இயலும்.

அத்தகைய அரும்பெறல் வாய்ப்பினைத் தன்னலம் கருதாமல், ‘என்கடன் பணிசெய்து கிடப்பதே’ என்னும் உயரிய குறிக்கோள் ஒன்றே கொண்டு, நாட்டு மக்களின் நல்வாழ்க்கைக்காகவே பயன்படுத்திய தனிப் பெருமை, செந்தமிழ்ப் பெருஞ்சான்றோர் திரு.வி.க. அவர்களுக்கு உரியதாகும். அவர்தம் நூற்றாண்டு விழாவினை, நம் **தமிழக அரசு** அண்மையில் சில மாதங்களுக்கு முன்பு சிறப்புறக் கொண்டாடிப் போற்றியது. அதனையொட்டித் திரு.வி.க. தொடர்புடைய சில கட்டுரைகள், அவர்கள் எழுதியுள்ள கருத்துக்களையே தொகுத்துத் தொடுத்து, இங்கு வெளியிடப் பெறுகின்றன.

தமிழகப் புலமையுலக வானில், இவ்விருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் ஒப்புயர்வற்ற தமிழ்ச்சுடர் ஒளித் தாரகைகளாக விளங்கியவர்களுள், ‘செந்தமிழ்க் கடல்’ அருட்டிரு. (1876-1751) மறைமலை அடிகளார் அவர்களும், ‘செந்தமிழ்த் தென்றல்’ திரு.வி. கலியாண சுந்தரனார் அவர்களும், குறிப்பிடத்தக்க மிக்கபெருஞ்சிறப்புடையவர்கள் ஆவர். இருவரும் தமக்குள் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தவர்கள்! மறைமலை அடிகளார், ஆராய்ச்சிநெறிக் கதிர் விரிக்கும் புலமை நலஞ் சான்ற ஒரு பெரும் ஞானசூரியன்; திரு.வி.க. அன்பு அருள் ஒளிபரப்பி இன்பக் குளிர் நிலவு பொழியும் சந்திரன் எனலாம். அருட்டிரு மறைமலை அடிகளார் பற்றித் திரு.வி.க. அவர்கள் எழுதியுள்ள அரிய கருத்துக்கள், இக்கட்டுரையின்கண், சுருக்கமாகத் தொகுத்துத் தரப் பெறுகின்றன.

—ஆசிரியர்.]

‘‘மறைமலை யடிகள் யார்? சுவாமி வேதாசலம் அடிகள் கிறித்துவக் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராக இருந்தவர். அவரது பழைய பெயர், நாகை-வேதாசலம்பிள்ளை என்பது. அற்றை நக்கீரனாரும், பிற்றைச் சிவஞான முனிவரனாரும் ஒருருக் கொண்டு வேதாசலனார் ஆகப் போந்து, இற்றைத் தமிழ் வளர்க்கின்றார் என்று, யான் அவரைச் சொல்லாலும் எழுத்தாலும் போற்றுவது உண்டு. வேதாசலனார் தமிழ்-செந்தமிழ்-சங்கத்தமிழ்-என்னை அவ்வாறு சொல்லவும் எழுதவும் செய்தது. இந்நாளில் சங்கநூல்களின் சுவையைத் தமிழ் நாட்டுக்கு ஊட்டியபெருமை, வேதாசலனார்க்கு உண்டு என்று அறுதியிட்டுக் கூறுவேன். அவர் ஆங்கிலத்திலும் புலமை பெற்றவர்; வடமொழியும் தேர்ந்து தெளிந்தவர்.

ஈழக் கதிரைவேற் பிள்ளைக்கும், நாகை வேதாசலம் பிள்ளைக்கும், அடிக்கடி நிகழ்ந்த வாதப்போர், மிக இளமையில் இவருடன் கலந்து உறவாட என்னை விடாமல் தகைந்தது. பின்னே 1910ஆம் ஆண்டில், சிந்தாதிரிப் பேட்டையில், வேதாசலனாரின் அரிய சொல்லமிழ்தைப் பருகும் தவம் உடையவனானேன். அவரது தமிழ் உடலும், தமிழ் உரையும், தமிழ்க்குரலும், தமிழ்ப்பொருளும் என்னை அவர்தம் தோழன் ஆக்கின; தொண்டன் ஆக்கின.

வேதாசலம், மறைமலை அடிகள் ஆகிப்பல்லா வரத்தை உறைவிடமாகக் கொண்ட போது, அடிகள் ஒருநாள் இராயப்பேட்டை நண்பர்கள் சிலரை வரவழைத்தார்; பகலில் தமிழ் விருந்து அளித்தார்; மாலையில் திரிசூலம் கோயிலில் சிவவிருந்து அளித்தார். தமிழும் சிவமும் ஒன்றிய மறைமலைஅடிகளின் விருந்து மறக்கற்பாலதன்று.

முன்னாளில் மறைமலை அடிகள் அடிக்கடி இராயப்பேட்டை போதருவர்; 'குகானந்த நிலையத்தில்' தங்குவர். அடிகட்கு எல்லாப் பணிகளையும் யானே செய்ய முந்துவன். மற்றவரும் போட்டியிடுவர். இரவில் சங்கநூல்களில் எனக்கு உற்ற ஐயங்களை அடிகளிடம் வெளியிடுவேன். அடிகள் படுக்கையில் கிடந்து கொண்டே ஐயங்களைக் களைவர். வேறுபல தமிழ்ப் பேச்சுக்களும், ஆராய்ச்சிகளும் எங்களிடையே நிலவும்.

மறைமலை அடிகளுடன் யான் தூத்துக்குடிச் சைவசித்தாந்த சபைக்கு இரண்டுமுறை சென்றேன்; நாகை முதலிய சில இடங்களுக்கும் சென்றேன்; சொற்பொழிவுகள் நிகழ்த்தினேன். அந்நாளில் தமிழ் வானத்தில் ஒரு தூய திங்கள் என அடிகள் திகழ்ந்ததை யான் கண்டேன்.

வெசுலி கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர் பதவிக்கு, யான் முயன்ற வேளையில் தகுதித்தாள்* ஒன்று, மறைமலை அடிகளால் வழங்கப்பட்டது. அஃது இன்னும் என்னிடத்தில் இருக்கின்றது.

அடிகளாரால், 'திருமுருகன் அச்சகம்' என்ற ஒன்று அமைக்கப்பட்டது. அதைத் திறக்கும் தொண்டு எனக்குக் கிடைத்தது. அத் திறப்பு விழா சுருங்கிய முறையில் செவ்வனே நடைபெற்றது. 'செய்வன திருந்தச் செய்' என்னும் முதுமொழிக்கு அடிகளின் வாழ்க்கை ஓர் இலக்கியம்.

யான் கல்லூரி விடுத்து, அரசியலில் தலைப்பட்டதை, மறைமலை அடிகள் ஆதரித்தார் இல்லை; என்னைக் கடிந்தும் பேசினர். தமிழ்ப் புலவர்களில் என்னை நேரிற் கடிந்து பேசுவோர் உலகில் ஒருவர் இருக்கின்றார் எனில், அவர் மறைமலை அடிகளே ஆவர்.

என் பேச்சைக் குறித்து அடிகளிடத்தினின்றும் அடிக்கடி எச்சரிக்கை எழும். 'இரைந்தும் விரைந்தும் பேசுவது உமக்கு இயற்கையில் அமைந்துள்ளது. அதை ஓரளவிலேயே பயன்படுத்துதல் வேண்டும். இயற்கைச் சக்தியை அளவின்றிப் பயன்படுத்தினால், அஃது உடலுக்கு ஊறு செய்வதாகும்! என்று, அடிகள் அவ்வப்போது அறிவுறுத்துவர். எச்சரிக்கையும் அறிவுறுத்தலும் என் காதில் நுழையும்; ஆனால் என் மனத்தில் நுழைவதில்லை. அடிகளின் நன்மொழியை அலட்சியம் செய்யவேண்டும் என்பது எனது நோக்கம் அன்று. என் பிறவிக்கூறு, நன்மொழி மீதும் கவலை செலுத்த விடுவதில்லை. யான் பெற்ற இயற்கைச் சக்தியின் வரம்பு கடந்தே பேசினேன். விளைந்தது என்னை? எனது உடலின் வன்மையும், பேச்சின் வன்மையும் மென்மை ஆயின.

மறைமலை அடிகள், உடல் ஓம்புவதில் கண்ணும் கருத்தும் உடையவர். தமது நிலையம் போதருவோரை உடலோம்பலில் மனஞ் செலுத்துமாறு வலியுறுத்துவர்; எனக்கும் சொல்வர். அடிகளின் உடலோம்பும் முறைகளைக் கடைப்பிடிக்க யான் முயன்றேன். அம்முயற்சி சில மாத காலமாதல் இடையீடின்றி நிகழ்ந்ததா? இல்லை. சில வாரக் கணக்கிலேயே அது வீழ்ந்தது. என் வாழ்க்கை வானக் கப்பலில் பறப்பது. அப்பறவைக்கு நேரம் ஏது? ஓய்வு ஏது? ஒன்று மட்டும் நிலைத்தது, அஃது எது? அஃது 'எனிமா'. அதுவும் சென்னையிலேயே. வெளியூர் அதை நாடுவது இல்லை.

மறைமலை அடிகளிடத்தில், பலவித நல்லியல்புகள் உண்டு. அவைகளுள் சிறந்த ஒன்று இரக்கம்; சீவகாருண்யம். அடிகளின் இரக்கப் பண்பை விளக்குவதற்கு ஈண்டு ஒரு நிகழ்ச்சி குறித்தல் சாலும்.

இராமலிங்க சுவாமிகளை ஒட்டிக் கதிரைவேலருக்கும், வேதாசலனாருக்கும் பலதிற வாதங்கள் நடந்தன. இராமலிங்கசுவாமிகளின் பாடல்கள் மருட்பா என்பது கதிரைவேலனார் கருத்து; அருட்பாவே என்பது அடிகளாரின் கொள்கை. சிவனடியார் திருக்கூட்டங்கள் இரண்டாகப் பிரிந்தன. ஒருகூட்டம் கதிரைவேற்பிள்ளையை ஆதரித்தது; மற்றொன்று வேதாசலத்தை ஆதரித்தது. பின்னைய கூட்டம் கதிரைவேற் பிள்ளைக்குப் பலவித தீங்கு செய்ய முயன்றது. கதிரைவேலர் மீது கல்லெறிந்தது; அவரை இழித்துப் பழித்துத் துண்டுகள் வெளியிட்டது; அவரைப் போன்ற உருவம் செய்து, அதைப் பாடையில் இட்டுக்

---

FROM,  
**SWAMI VEDACHALAM,**  
*Formerly Lecturer in Tamil in the Madras Christian College,*  
*Now Master of the Sacred Order of Love, Pallavaram;*  
*and Editor of 'Jnanasagaram' and 'Oriental Mystic Mayna'.*

**Pallavaram,**  
28th March, 1916.

**For the last four or five years I have had an intimate acquaintance with Pandit T. V. KALYANA SUNDARA MUDALIAR of Royapettah and all along I was much pleased with his sweet manners, high thinking and sound scholarship in Tamil language and literature. His breadth of mind and great philanthropic spirit mark him out as a rare scholar in the class of modern Tamil Pandits. I am sure both by his example and precept he would prove himself to be a model Tamil teacher to the students of any College-class.**

**VEDACHALAM.**

கொளுத்தியது. இவைகளெல்லாம் போக, மற்றொரு கொடுமை நிகழ்த்த உறுதி கொண்டது. அஃது இராமலிங்க சுவாமிகள் கொள்கைக்கு முற்றிலும் மாறுபட்டது. அஃது என்ன? கொலை.

வழக்குக் காலத்தில் கதிரைவேற்பிள்ளை இரவு பத்து மணி வரை சிந்தாதிரிப்பேட்டையில் இருப்பர்; சில சமயம் பன்னிரண்டு மணி வரை இருப்பர். அதற்குமேல் புரசை நோக்குவர். ஒருநாள் அவரை வழியிலே கொலைசெய்ய ஏற்பாடு செய்யப்பட்டதாம். அச்செய்தி வேதாசலனார்க்கு எப்படியோ எட்டியது. வேதாசலனார் இரக்கம் உடையவர்; இராமலிங்க அடிகளின் அருள் நெறியில் நிற்பவர்; அவர் என் செய்தார்? யாழ்ப்பாணத்து மாணாக்கர் ஒருவர் வாயிலாக, இக் கொடுமைச் செய்தியைக் கதிரைவேற்பிள்ளைக்கு உடனே அறிவித்தார். அன்று கதிரைவேற்பிள்ளை தக்க காவலுடன் சென்றனர். கொலைஞர் கருத்து நிறைவேறவில்லை. இங்ஙனம், பகைமையும் நட்பாகக் கொண்டு ஒழுகும் பண்புடையாளராக விளங்கிய சிறப்பினர், அருட்டிரு மறைமலை அடிகளார்.

''அடிகளார் உறவு, எனக்கு இளமையிலேயே கிடைத்தது. அவ் உறவு, சங்க நூல்களை ஆராய்ச்சிக் கண்கொண்டு நோக்குமாறும், சித்தாந்த நூல்களை அறிவியற் கண்கொண்டு நோக்குமாறும், என்னை உந்தியது. இளமையில் எனது அறிவு விளக்கத்துக்கு ஒளி கான்றவர்கள் சிலர். அவருள் ஒருவர் மறைமலை அடிகள்!

மறைமலை ஒரு பெரும் அறிவுச் சுடர்: தமிழ்நிலவு; சைவ வான்; தமிழே சிவமாகவும், சிவமே தமிழாகவும் அடிகளுக்குத் தோன்றுகின்றன என்று யான் கருதுகின்றேன். இரண்டையும் ஒன்றாகக் கண்டவர் திருஞானசம்பந்தர். திருஞானசம்பந்தரிடத்து மறைமலை அடிகள் கொண்ட காதற்கு ஓர் அளவில்லை.

தென்னாடு பன்னெடுங் காலம் தன்னை மறந்து உறங்கியது. அவ்வுறக்கம் போக்கிய பெருமை மறைமலை அடிகளுக்கு உண்டு. அவர்தம் தமிழ்ப் புலமையும், வடமொழிப் புலமையும், ஆங்கிலப் புலமையும், ஆராய்ச்சியும், பேச்சும், எழுத்தும், தொண்டும், தென்னாட்டை விழிக்கச் செய்தன. தென்னாடு அடிகளால் விழிப்புற்றது என்று, மண்ணும் முழங்கும்; மரமும் முழங்கும்.

அடிகள் பேச்சு, பல பேச்சாளரைப் படைத்தது; எழுத்து, பல எழுத்தாளரை ஈன்றது; நூல், பல நூலாசிரியன்மாரை அளித்தது. ''அடிகளே தென்னாடு; தென்னாடே அடிகள்'' என்று கூறல் மிகையாகாது.

அடிகள் புகழ் வாழ்க! அவர்தம் நெறி வெல்க! வெல்க !!!

**—திரு. வி. க. வாழ்க்கைக் குறிப்பு.**

---

Particulars regarding the OWNERSHIP of "THIRUKKOIL" the monthly newspaper published as called for, by Rule 8 of the Registration of Newspapers (Central) Rules 1956.

FORM IV (See Rule 8)

| | | |
|---|---|---|
| 1. **Place of Publication** | .. | 119, Nungambakkam High Road, Madras-600 034. |
| 2. **Periodicity of Publication** | .. | Monthly |
| 3. **Printer's Name** | .. | Thiru M. N. Shanmugam, L. P. T., Asst. Works Manager. |
| **Nationality** | .. | Indian |
| **Address** | .. | Tamil Arasu Press, Government Estate, Madras-600002. |
| 4. **Publisher's Name** | .. | Thiru R. Shanmugasigamani, I.A.S., Commissioner. |
| **Nationality** | .. | Indian |
| **Address** | .. | H.R. & C. E. Admn. Department. |
| 5. **Editor's Name** | .. | Thiru N. R. Murugavell, M.A., M.O.L. |
| **Nationality** | .. | Indian |
| **Address** | .. | H.R.&C.E., Admn. Department, 119, Nungambakkam High Road, Madras-600034 |
| 6. **Name and Address of the individuals who own the Newspaper and partners or shareholders holding more than one percent of the total capital** | .. | Government Publication. |

I, R. Shanmugasigamani, Commissioner, H.R.&.C.E. Admn. Department, Madras-600 034, hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.

(Sd./)- R. Shanmugasigamani.
Publisher.

Dated : 27-4-1983.

---

# பன்னிரு திருமுறைப் பாடல் திரட்டு

## ( மூலமும் — பொழிப்புரையும் )

[ ந. ரா. முருகவேள், M.A., M.O.L. ]

## திருஞானசம்பந்தர்

(திருஞானசம்பந்த சுவாமிகள் அருளிய தேவாரம்)

### முதல் திருமுறை

திருச்சிற்றம்பலம்

**தலம் : திருப்பிரமபுரம் பண் : நட்டபாடை**

*தோடுடையசெவியன் விடையேறி*
*ஓர்தூவெண் மதிசூடிக்*
*காடுடையசுட லைப்பொடிபூசி*
*என்னுள்ளங்கவர்கள்வன்*
*ஏடுடையமல ரால்முனைநாள்*
*பணிந்தேத்தஅருள்செய்த*
*பீடுடையபிர மாபுரம்மேவிய*
*பெம்மான் இவன் அன்றே. (1)*

தோடு அணிந்த திருச் செவியை உடையவன்; எருதை ஊர்ந்து, ஒப்பற்ற தூய்மையுடைய வெண்மையான சந்திரனைத் தலையிற் சூடி, திருநீற்றை அணிந்து, என்னைத் தன் வயப்படுத்திக் கொண்டவன்; இதழ்களையுடைய மலர்களால் முற்காலத்து அருச்சித்து வழிபட்டதனால், இன்று எனக்கு அருள்செய்த பெருமையை உடையவன்; பிரமபுரம் என்னும் சீகாழியில், எழுந்தருளியிருக்கும் பெருமான்; இவனே எனக்கு ஞானப் பாலைத் தந்தான்.

**தலம்: திருச்சிராப்பள்ளி பண் : குறிஞ்சி**

*நன்றுடையானைத் தீயதில்லானை*
*நரைவெள்ளேறு*
*ஒன்றுடையானை உமையொருபாக*
*முடையானைச்*
*சென்றடையாத திருவுடையானைச்*
*சிராப்பள்ளிக்*
*குன்றுடையானைக் கூறஎன்னுள்ளங்*
*குளிருமே. (2)*

திருச்சிராப்பள்ளிக் குன்றின்மேல் உள்ள சிவபெருமான் நன்மையுடையவன்; தீமையில்லாதவன்; வெள்ளை ஏறு ஆகிய ஓர் எருதை ஊர்தியாக உடையவன்; உமாதேவியை ஒரு பாகத்திற் கொண்டிருப்பவன்; இயல்பாகவே திருவையுடையவன்; அவனுடைய திருப்பெயரைக் கூறித் துதிக்குந்தோறும், என்னுள்ளம் கவலைகள் நீங்கிக் களிப்பினாற் குளிர்ச்சி அடைகின்றது.

**தலம்: கோயில் (சிதம்பரம்) பண் : குறிஞ்சி**

*கற்றுங் கெரியோம்பிக் கலியை வாராமே*
*செற்றார் வாழ்தில்லைச் சிற்றம் பலம்மேய*
*முற்றா வெண்டிங்கள் முதல்வன் பாதமே*
*பற்றா நின்றாரைப் பற்றா பாவமே. (3)*

வேதாகமங்களைக் கற்றுணர்ந்து, ஆகவனீயம் தக்கிணாக்கினியம் காருகபத்தியம் என்னும் முத்தீயையும் வளர்த்து, கலியினது தீங்குகள் வராதபடி தடுப்பவர்களாகிய சிறந்த அந்தணர்கள் வாழ்கின்ற, தில்லையின்கண் சிற்றம்பலத்தில் விளங்குகின்றவன் - முதிராத வெண்பிறையைச் சூடிய தலைவன்- ஆகிய சிவபெருமானின் திருவடிகளையே துணையாகப் பற்றி நிற்பவரைப் பாவங்கள் பற்றமாட்டா.

**தலம் : கோயில் (சிதம்பரம்) பண் : குறிஞ்சி**

*செல்வ நெடுமாடஞ் சென்று சேணோங்கிச்*
*செல்வ மதிதோயச் செல்வம் உயர்கின்ற*
*செல்வர் வாழ்தில்லைச் சிற்றம் பலம்மேய*
*செல்வன் கழலேத்துஞ் செல்வஞ் செல்வமே. (4)*

செல்வ வளம் நிறைந்தமாட மாளிகைகள், விண்ணளவும் உயர்ந்து சென்று அழகிய சந்திரனைத் தழுவும்படி, பொருட்செல்வத்தால் நாடோறும் உயர்வு எய்துகின்ற அருட்செல்வர்களாகிய அந்தணர்கள் வாழ்கின்ற தில்லையின்கண், சிற்றம்பலத்திற் பொருந்தியுள்ள கருணைச் செல்வம் ஆகிய சிவபெருமானின் திருவடிகளைப் போற்றி வணங்குகின்ற, பண்பாடுடைமையாகிய செல்வமே, எல்லாச் செல்வங்களிலும் மேலான செல்வமாகும்.

தலம்: திருத்தோணிபுரம் பண்: பழந்தக்கராகம்

சிறையாரும் மடக்கிளியே யிங்கேவா
தேனொடுபால்
முறையாலே உணத்தருவன் மொய்பவளத்
தொடுதரளம்
துறையாருங் கடற்றோணி புரத்தீசன்
துளங்குமிளம்
பிறையாளன் திருநாமம் எனக்கொருகாற்
பேசாயே. (5)

இறக்கையையுடைய அழகிய இளங் கிளியே, இங்கே வருக! தேனுடன் பாலும் கலந்து முறைப்படி நீ உண்ணுவதற்குக் கொடுப்பேன்; பவளமும் முத்தும் திரண்டு வந்து துறையிற் குவிகின்ற கடலுக்குஅருகே யுள்ள தோணிபுரத்து இறைவன்; விளங்குகின்ற இளம்பிறையைச் சூடியவன்; அவனுடைய திருப்பெயரை ஒருமுறை சொல்லி என்னை மகிழ்விப்பாயாக!

இரண்டாம் திருமுறை

தலம்: திருஆலவாய் (மதுரை) பண்: காந்தாரம்

மந்திர மாவது நீறு
வானவர் மேலது நீறு
சுந்தர மாவது நீறு
துதிக்கப் படுவது நீறு
தந்திர மாவது நீறு
சமயத்தி லுள்ளது நீறு
செந்துவர் வாயுமை பங்கன்
திருஆல வாயான் திருநீறே. (6)

மந்திரமாக இருப்பதும், தேவர்கள் தம் திருமேனியில் அணிந்திருப்பதும் திருநீறே; அழகாவதும் திருநீறே; புகழ்ந்து போற்றப் படுவதும் திருநீறே; சமயங்கள்தோறும் உள்ளதாய்ப் பயன்தருவதும் திருநீறே; இத் தகைய தன்மை வாய்ந்தது, சிவந்த பவளம் போன்ற இதழ்களை உடைய உமாதேவியைத் தன் இடப்பாகத்தில் கொண்டிருப்பவனாய், திருவாலவாய் என்னும் மதுரையில் எழுந்தருளியுள்ள சிவபெருமானது, திருநீறே யாகும்.

தலம்: பொது பண்: பியந்தைக்காந்தாரம்

வேயுறு தோளிபங்கன் விடமுண்ட கண்டன்
மிகநல்ல வீணை தடவி
மாசறு திங்கள் கங்கை முடிமேல் அணிந்தென்
உளமே புகுந்த அதனால்
ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழன்
வெள்ளி சனிபாம் பிரண்டுமுடனே
ஆசறு நல்ல நல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே (7)

மூங்கிலைப் போன்ற தோளையுடைய உமாதேவியை ஒரு பாகத்திற் கொண்டவரும், ஆலகாலம் என்னும் நஞ்சையுண்ட கண்டத்தை உடையவருமான சிவபெருமான், மிகவும் நல்ல வீணையை மீட்டிக்கொண்டு, என் உள்ளத்திலே வந்து புகுந்தார். ஆதலால் சூரியன், சந்திரன், செவ்வாய், புதன், குரு, சுக்கிரன், சனி, இராகு, கேது என்னும் நவக்கிரகங்களும், அடியவர்களுக்கு எவ்வகையான இடையூறும் செய்யமாட்டா; நன்மையே செய்யும்.

தலம்: திருச்சாய்க்காடு பண்: சீகாமரம்

நீநாளும் நன்னெஞ்சே
நினைகண்டாய் யாரறிவார்
சாநாளும் வாழ்நாளுஞ்
சாய்க்காட்டெம் பெருமாற்கே
பூநாளுந் தலைசுமப்பப்
புகழ்நாமஞ் செவிகேட்ப
நாநாளும் நவின்றேத்தப்
பெறலாமே நல்வினையே (8)

நல்ல மனமே! தாம் சாகவுள்ள நாளையும், வாழ இருக்கும் நாளையும் ஆராய்ந்து அறியக் கூடியவர்கள் யார்? ஒருவரும் இலர். ஆதலின் திருச்சாய்க்காட்டில் உள்ள சிவபெருமானுக்கே, நாளும் பூவைத் தலையாற் சுமப்போம்; அவனுடைய புகழையும் திருப்பெயரையும் காதாற் கேட்போம்; நாவினால் நாள் தோறும் சொல்லித் துதிப்போம். இங்ஙனம் செய்தால் நல்வினைப்பேறு ஆகிய சிறந்த புண்ணியத்தினை நாம் பெறலாம். ஆதலின் நீ நாடோறும் இறைவனை நினைத்து வழிபடுவாயாக!

தலம்: திருநெல்வாயிலரத்துறை பண்: பியந்தைக்காந்தாரம்

எந்தை யீசனெம் பெருமா னேறமர்
கடவுளென் றேத்திச்
சிந்தை செய்பவர்க் கல்லாற் சென்றுகை
கூடுவ தன்றால்
கந்த மாமல ருந்திக் கடும்புனல்
நிவா மல்கு கரைமேல்
அந்தண் சோலை நெல்வாயி லரத்துறை
யடிகள்தம் அருளே. (9)

மணம்மிக்க சிறந்த மலர்களைக் கொழித்துக்கொண்டு, வேகமாக வரும் வெள்ளத்தையுடைய, நிவா நதியின் கரைமேல் உள்ள, அழகிய குளிர்ந்த சோலைகளையுடைய, திருநெல்வாயில் என்னும் தலத்தில், அரத்துறை என்னும் கோயிலில் உள்ள சிவபெருமானின் திருவருளானது, எங்கள் தந்தை - இறைவன் - எங்கள் தலைவன் - எருதை விரும்புகின்ற கடவுள் என்று துதித்து, நினைத்து வணங்குபவர்களுக்கேயன்றி, மற்றவர்களுக்குக் கிடைப்பது அன்று.

தலம்: திருவாஞ்சியம் பண்: இந்தளம்

மேவி லொன்றர் விரிவுற்ற
இரண்டினர் மூன்றுமாய்
நாவில்நாலர் உடல் அஞ்சினர்
ஆறர் ஏழோசையர்
தேவி லெட்டர்திரு வாஞ்சியம்
மேவிய செல்வனார்
பாவந் தீர்ப்பர்பழி போக்குவர்
தம்மடி யார்கட்கே. (10)

திருவாஞ்சியம் என்னும் சிறந்த தலத்திலுள்ள செல்வராகிய சிவபெருமான், தன்னை அன்பர்கள் விரும்பி வழிபடமுற்பட்டால், சிவம் என்னும் ஒப்பற்ற பரம்பொருளாக இருப்பார். அவரே பின்னர் சிவம் சக்தி என்று இரண்டாக விரிந்து நிற்பார். இலயம் போகம் அதிகாரம் என்னும் மூன்று நிலைகளிலும் விளங்குவார். நாக்கின்கண் இருக்கு எசுர் சாமம் அதர்வணம் என்னும் நான்கு வேதங்களாகத் திகழ்வார். அவற்றில் அஞ்செழுத்தின் பொருளாக இருந்து அருள் செய்வார். வேதங்களுக்குரிய சிக்கை கற்பம் வியாகரணம் நிருத்தம் சந்தோவிசிதி சோதிடம் என்னும் ஆறு அங்கங்களை அருளிச் செய்வார். குரல் துத்தம் கைக்கிளை உழை இளி விளரி தாரம் (சரிகமபதநி) என்னும் ஏழிசையாய் இசைப்பயனாய் இன்பம் தருவார். நிலம் நீர் தீ வளி விசும்பு நிலா பகலேரன் இயமானன் (ஆன்மா) என்னும் எட்டினுள்ளும் கலந்து, தெய்வ நலத்திற் சிறந்து அட்டமூர்த்தியாய் அமைவார். இத்தகைய திருவாஞ்சியப் பெருமான், தம்மை வணங்கும் அடியவர்களுக்குப் பாவங்களைத் தீர்த்தும், பழிகளைப் போக்கியும், இம்மை மறுமை நலங்களை விளைவிப்பார்.

## மூன்றாம் திருமுறை

**தலம் : பொது** **பண் : கௌசிகம்**

காதலாகிக் கசிந்துகண் ணீர்மல்கி
ஓது வார்தமை நன்னெறிக் குய்ப்பது
வேதம் நான்கினும் மெய்ப்பொரு ளாவது
நாதன் நாமம் நமச்சி வாயவே. (11)

அன்பு முதிர்ந்து மனம்நெகிழ்ந்து கண்களில் நீர்நிறைந்து பக்தியுடன் ஓதுபவர்களை, நல்ல நெறியாகிய வீடுபேற்று நெறியின்கண் செலுத்துவதும், நான்கு வேதங்களினுள்ளும் உண்மைப் பொருளாக விளங்குவதும், சிவபெருமானின் திருப்பெயராகிய நமச்சிவாய என்னும் திருவைந்தெழுத்தேயாகும்.

**தலம்: திருக்கழுமலம் (சீர்காழி)** **பண் : கொல்லி**

மண்ணில்நல்ல வண்ணம்
வாழலாம் வைகலும்
எண்ணில்நல்ல கதிக்கு
யாதுமோர் குறைவிலைக்
கண்ணில்நல் லஃதுறுங்
கழுமல வள்நகர்ப்
பெண்ணில்நல் லாளொடும்
பெருந்தகை இருந்ததே. (12)

கண்ணிற்கு இனிய நல்ல இயற்கைக் காட்சிகள் பெருகி நிற்கும் திருக்கழுமலம் ஆகிய வளம் நிறைந்த நகரின்கண், பெண்ணின் நல்லாள் ஆகிய உமாதேவியுடன் சிவபெருமான் ஆகிய பெருந்தகை எழுந்தருளி விளங்குகின்றார். ஆதலின் நாம் இவ்வுலகில் நல்லபடியாக இன்புற்று வாழலாம்; நாள்தோறும் எண்ணில்லாத நல்ல பேறுகளுக்கும் யாதொரு குறையும் இல்லை; நினைத்து விரும்பும் நலங்களையெல்லாம் குறையில்லாமல் நிரம்பப் பெறலாம்.

**தலம்: திருவாவடுதுறை** **பண் : காந்தாரபஞ்சமம்**

இடரினுந் தளரினும் எனதுறு நோய்
தொடரினும் உனகழல்தொழு தெழுவேன்
கடல்தனி லமுதொடு கலந்த நஞ்சை
மிடறினி லடக்கிய வேதியனே
இதுவோ எமையாளுமா றீவதொன் றெமக்
கில்லையேல்
அதுவோ வுனதின்னரு ளாவடுதுறை யரனே (13)

துன்புற்றாலும், தளர்ச்சியடைந்தாலும், என்னைப் பொருந்திய நோய் பெருகித் தொடர்ந்து வந்தாலும், உன் திருவடிகளில் வீழ்ந்து வணங்குவேன். திருப்பாற் கடலில் அமுதத்தோடு கலந்து வெளிப்பட்ட ஆலகாலம் என்னும் கொடியவிடத்தினைக் கழுத்தில் அடக்கி நிறுத்தியவனே! வேதங்களை அருளிச் செய்தவனே! எங்களை நீ ஆட்கொள்ளும் தன்மை இதுதானோ? எம்மை விரும்பி அடைந்தவர்களுக்கு யாம்கொடுக்க இயலுவது எம்மிடம் ஒன்றும் இல்லை என்றால், திருவாவடுதுறையில் உள்ள சிவபெருமானே! அதுதான் உன்னுடைய இனிய திருவருள் ஆகுமோ?

**தலம்: பொது** **பண் : கௌசிகம்**

வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்,
வீழ்க தண்புனல், வேந்தனும் ஓங்குக,
ஆழ்க தீயது; எல் லாம்அரன் நாமமே
சூழ்க; வையக மும்துயர் தீர்கவே. (14)

அந்தணர்கள் வாழ்க! தேவர்கள் வாழ்க! பசுக்கூட்டங்கள் வாழ்க! குளிர்ந்த மழை பொழிக! அரசனும் உயர்ச்சியுறுக! தீயது அழிக! உயிர்கள் எல்லாம் சிவபெருமானின் திருநாமம் ஆகிய திருவைந்தெழுத்தை ஓதி வளர்க! உலக மக்கள் இகத்திலும் பரத்திலும் துயர் நீங்கி இன்புற்று வாழ்க!

**தலம்: திருஆலவாய் (மதுரை)** **பண்: புறநீர்மை**

மங்கையர்க் கரசி வளவர்கோன் பாவை
வரிவளைக் கைம்மட மானி
பங்கயச் செல்வி பாண்டிமா தேவி
பணிசெய்து நாடொறும் பரவப்
பொங்கழ லுருவன் பூதநா யகன்நால்
வேதமும் பொருள்களும் அருளி
அங்கயற் கண்ணி தன்னொடும் அமர்ந்த
ஆலவாய் ஆவதும் இதுவே? (15)

மங்கையர்களுக்கெல்லாம் அரசி; சோழனுடைய அழகிய புதல்வி; வரிகள் பொருந்திய வளையல்களை அணிந்த திருக் கைகளையுடையவள்; இளமை மிக்கவள்; மானியார் என்னும் பெயரையுடையவள்; தாமரை மலரில் வாழ்கின்ற செல்வியராகிய கலைமகளும் திருமகளும் போன்றவள்; பாண்டிய மன்னனின் பட்டத்தரசி; இத்தகைய அம்மை திருப்பணிகள் செய்து நாள்தோறும் துதிக்க, பொங்குகின்ற நெருப்பு உருவினனும், உயிர்க் கூட்டங்களுக்கெல்லாம் தலைவனும் ஆகிய சிவபெருமான்,

நான்கு வேதங்களையும், அவற்றின் பொருள்களையும் அருளிச் செய்து, அங்கயற்கண்ணியாகிய மீனாட்சி அம்மையுடன் அமர்ந்திருக்கின்ற ஆலவாய் என்னும் திருக்கோயில் இதுதானோ?

## திருநாவுக்கரசர்

### நான்காம் திருமுறை

*(திருநாவுக்கரசு சுவாமிகள் அருளிய தேவாரம்)*

**தலம்: திருஅதிகை வீரட்டாளம் பண்: கொல்லி**

கூற்றாயின வாறு விலக்ககிலீர்
கொடுமைபல செய்தன நானறியேன்
ஏற்றாயடிக் கேயிர வும்பகலும்
பிரியாது வணங்குவ னெப்பொழுதும்
தோற்றாதென் வயிற்றி னகம்படியே
குடரோடு துடக்கி முடக்கியிட
ஆற்றேனடி யேனதி கைக்கெடில
வீரட்டா னத்துறை யம்மானே. (16)

கெடிலம் என்னும் நதியின் கரையிலுள்ள, திருவதிகை வீரட்டானம் என்னும் திருக்கோயிலில் எழுந்தருளியிருக்கின்ற, எம் தந்தையே! சூலை நோயானது கூற்றுவனைப் போல் வந்து என்னை வருத்துகின்ற நிலையை நீக்கியருளுகின்றில்லை. இதற்குக் காரணமாக முன்னே செய்த பல கொடிய பாவங்களை நான் அறியவில்லை. எனினும் எளியேனை அடிமையாக ஏற்றுக் கொண்டாய்; உம்முடைய திருவடியையே இரவும் பகலுமாகிய எக்காலத்திலும் பிரிவில்லாமல் யான் வணங்குகின்றேன். இன்ன தன்மையதென்று இச்சூலை நோயானது புலப்படாமல், என் வயிற்றின் உள்ளிடத்தே குடரோடு சுற்றி முறுக்குகின்றது. அடியேன் இந்நோயின் கொடுமையை இனிச் சிறிதும் தாங்கமாட்டேன்; என்னைக் காத்தருள்க!

**தலம்: கோயில் (சிதம்பரம்) திருவிருத்தம்**

குனித்த புருவமுங் கொவ்வைச்செவ்
வாயிற் குமிண்சிரிப்பும்
பனித்த சடையும் பவளம்போல்
மேனியிற் பால்வெண்ணீறும்
இனித்த முடைய எடுத்தபொற்
பாதமுங் காணப்பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டுவதே
இந்த மாநிலத்தே. (17)

சிவபெருமானின் வளைந்த புருவத்தையும், கொவ்வைக்கனி போன்ற சிவந்த திருவாயையும், அதன்கண் குமிழியிட்டுத் தோன்றுகின்ற அழகிய புன்முறுவலையும், குளிர்ச்சிமிக்க சடையையும், பவளம் போன்று சிவந்த திருமேனியையும், அத்திருமேனியிற் பூசப்பெற்றுள்ள பால் போன்ற வெண்மையான திருநீற்றையும், இனிய தன்மையுடைய 'குஞ்சிதபாதம்' ஆகிய ஆட எடுத்த பொன் போன்ற திருவடியையும், காணக்கூடிய பேறு கிடைக்குமாயின், இந்த இழிந்த மனிதப் பிறவியும்கூட, ஒருவகையில் இந்த நிலவுலகத்தில் விரும்பத்தக்கதேயாகும்.

**தலம்: திருக்கடவூர் திருநேரிசை**

பெரும்புலர் காலை மூழ்கிப்
பித்தற்குப் பத்த ராகி
அரும்பொடு மலர்கள்கொண் டாங்கு
ஆர்வத்தை யுள்ளே வைத்து
விரும்பிநல் விளக்குத் தூபம்
விதியினால் இடவல்லார்க்குக்
கரும்பினிற் கட்டிபோல்வார்
கடவூர்வீ ரட்டனாரே. (18)

வைகறையிலேயே துயில் எழுந்து நீராடி, பித்தன் ஆகிய சிவபெருமானிடத்தில் பக்தி உடையவர்களாய், நல்லமலர்களைக் கொண்டு, உள்ளத்தில் ஆர்வம் நிலைபெறச்செய்து, அன்பு மேலீட்டால் விருப்பம் கொண்டு, முறைப்படி நல்ல விளக்கும் நல்ல,தூபமும் இட்டு, வழிபாடு செய்யவல்ல அடியார்களுக்குத், திருக்கடவூர் வீரட்டம் என்னும் கோயிலில் உள்ள சிவபெருமான், கரும்பினில் கட்டி போல மிக்க இன்பத்தை விளைவிப்பார்.

**தலம்: திருவாரூர் பண்: காந்தாரம்**

மெய்யெலாம் வெண்ணீறு சண்ணித்த
மேனியான் தாள்தொ ழாதே
உய்யலா மென்றெண்ணி யுறிதூக்கி
யுழிதந்தென் னுள்ளம் விட்டுக்
கொய்யுலாம் மலர்ச்சோலைக் குயில்கூவ
மயிலாலும் ஆரூரரைக்
கையினால் தொழாதொழிந்து கனியிருக்கக்
காய்கவர்ந்த கள்வ னேனே. (19)

உடம்பு முழுவதும் வெண்ணீறு பூசிய திருமேனியை உடையவன், ஆகிய சிவபெருமானின் திருவடிகளைத் தொழாமலே, நாம் உய்ந்துவிடலாம் என்று எண்ணிக்கொண்டு, சமண சமயம் சார்ந்து உறியைத் தூக்கிக் கொண்டு, பல இடங்களுக்கும் சென்று அலைந்து திரிந்து, என்னுடைய உள்ளத்தின் தெளிவை இழந்தேன். கொய்வதற்கு இனிய மலர்களைக் கொண்ட சோலைகளில் குயில்கள் கூவ, மயில்கள் நடமாடுகின்ற திருவாரூரில் எழுந்தருளி விளங்கும் பெருமானைக் கையினால் தொழுது வணங்குதலைச் செய்யாமல், இனிய கனியிருக்கவும் இன்னாத காயைக் கவர்ந்து உண்கின்ற கள்வனைப்போன்றவன் ஆனேன்.

**தலம்: திருஅதிகை வீரட்டானம் திருநேரிசை**

முன்பெலாம் இளைய காலம் மூர்த்தியை
நினையா தோடிக்
கண்கண இருமி நாளுங் கருத்தழிந்து
அருத்தம் இன்றிப்
பின்பகல் உணங்க லட்டும் பேதைமார்
போன்றேன் உள்ளம்
அன்பனாய் வாழ மாட்டேன் அதிகைவீ
ரட்ட னீரே. (20)

முன்பெல்லாம் இளமைப் பருவத்தில் இருந்தேன்; அப்போது இறைவனை நினையாமல், இழிந்த உலக நுகர்ச்சிகளில் ஈடுபட்டு ஓடி உழன்றேன். அதன் பயனாக இருமல் நோயுற்றுக் கண்கண என்று இருமி வருந்துகின்றேன். காலமெல்லாம் மனம் கெட்டும், பொருள் இல்

லாமலும் துன்புறுகின்றேன். இப்போதுதான் என் பிழைகளை உணர்கின்றேன். உரிய காலத்தில் அல்லாமல், பொழுது சாயும் பிற்பகலில் சமையல் செய்யப் புகுகின்ற அறிவில்லாத பெண்களைப்போல நான் இருக்கின்றேன். திருவதிகை வீரட்டானத்தில் உள்ள பெருமானே! உள்ளத்தால் உமக்கு அன்புடையவனாய் வாழ முடியாமல் அந்தோ! நான் கெட்டொழிந்தேன்.

## ஐந்தாம் திருமுறை

### தனித் திருக்குறுந்தொகை

நமச்சி வாயவே ஞானமுங் கல்வியும்
நமச்சி வாயவே நானறி விச்சையும்
நமச்சி வாயவே நாநவின் றேத்துமே
நமச்சி வாயவே நன்னெறி காட்டுமே. (21)

நமச்சிவாய மந்திரமே ஞானத்தையும், கல்வியையும் தரும்; நான் அறிகின்ற பல்வேறு கலைகளும் ஆகும்; அத்தனையே என்னுடைய நாக்கானது இடைவிடாது ஓதித் துதிக்கும்; அதுவே எல்லோருக்கும் உய்யக்கூடிய நல்வழியைக் காட்டியுதவும்!

**தலம்: திருஇன்னம்பர் — திருக்குறுந்தொகை**

தொழுது தூமலர் தூவித் துதித்துநின்று
அழுது காமுற் றரற்றுகின் றாரையும்
பொழுது போக்கிப் புறக்கணிப் பாரையும்
எழுதுங் கீழ்க்கணக்கு இன்னம்பர் ஈசனே (22)

இன்னம்பர் என்னும் தலத்திலுள்ள சிவபெருமான், தன்னை வணங்கித் தூய மலர்களால் அருச்சித்துப் போற்றிப் புகழ்ந்து அன்பினால் அழுது நேசித்து அருளைப் பெறுவதற்காகக் கதறிப் புலம்புகின்றவர்களையும், வீணிற் காலங்கழித்து அருள் நெறிக்குப் புறம்பாக நடப்பவர்களையும், கீழ்க்கணக்கு என்னும் குறிப்பேட்டில் எழுதி வைக்கின்றார்.

**தலம்: திருக்கடம்பூர் — திருக்குறுந்தொகை**

நங்க டம்பனைப் பெற்றவள் பங்கினன்
தென்க டம்பைத் திருக்கரக் கோயிலான்
தன்க டன்னடி யேனையுந் தாங்குதல்
என்க டன்பணி செய்துகி டப்பதே. (23)

கடம்பமலர் மாலையை அணிகின்ற நம்முடைய முருகனைப், பெற்றெடுத்த தாயாகிய உமாதேவியைத், தனது திருமேனியின் ஒரு பங்கிலே வைத்திருப்பவனாகிய எம்பெருமான், சிறந்த கடம்பை என்னும் தலத்தில் உள்ள திருக்கோயிலின்கண் எழுந்தருளியுள்ளான். அவனது கடமை, ஒன்றுக்கும் பற்றாத அடியேனைத் தாங்கிக் காப்பாற்றியருளுவதாகும்; என்னுடைய கடமை அவனுக்குப் பணிவிடைகள் செய்துகொண்டு வேறு நினைவும் செயலும் இன்றி அவனையே பற்றாகக் கொண்டு இருத்தல் ஆகும்.

**தலம்: திருவிடைமருதூர் — திருக்குறுந்தொகை**

கனியி னுங்கட்டி பட்ட கரும்பினும்
பனிம லர்க்குழற் பாவைநல் லாரினும்
தனிமு டிகவித் தாளும் அரசினும்
இனியன் தன்னடைந் தார்க்கிடை மருதனே. (24)

திருவிடைமருதூரில் உள்ள சிவபெருமான், தன்னை அடைந்த அன்பர்களுக்கு, கனிவகைகளைக் காட்டிலும், கருப்பங்கட்டியைக் காட்டிலும், குளிர்ந்த மலர் சூடிய கூந்தலையுடைய பாவை போன்று அழகியராய் உள்ள இளநலம் மிக்க பெண்களைக் காட்டிலும், தனி ஆணை செலுத்தும் திறனுடையராய் முடிசூடி ஆளுகின்ற அரசாட்சியைக் காட்டிலும், மிகப்பெரிய இன்பத்தை வழங்கும் தன்மையுடையவன்.

**தலம்: திருஇன்னம்பர் — திருக்குறுந்தொகை**

என்னி லாரும் எனக்கினி யாரில்லை
என்னி லும்இனி யானொரு வன்னுளன்
என்னு ளேஉயிர்ப் பாய்ப்புறம் போந்துபுக்கு
என்னு ளேநிற்கும் இன்னம்பர் ஈசனே. (25)

என்னைவிட வேறு எவரும் எனக்கு இனியவர்கள் இல்லை. என்றாலும் என்னைக் காட்டிலும் எனக்கு இனியவன் ஒருவன் இருக்கின்றான். அவன் யார்? என்னில், என் உள்ளே இருந்து மூச்சாக வெளியே வந்தும், உள்ளே புகுந்தும், என் உள்ளத்தினுள்ளே தங்கியிருக்கின்ற 'இன்னம்பர்' என்னும் தலத்தில் உறையும் சிவபெருமானே ஆவன்.

## ஆறாம் திருமுறை

### தனித்திருத்தாண்டகம்

திருநாமம் அஞ்செழுத்துஞ் செப்பா ராகில்
  தீவண்ணர் திறமொருகால் பேசா ராகில்
ஒருகாலுந் திருக்கோயில் சூழா ராகில்
  உண்பதன்முன் மலர்பறித்திட் டுண்ணா ராகில்
அருநோய்கள் கெடவெண்ணீ றணியா ராகில்
  அளியற்றார் பிறந்தவா றேதோ வென்னில்
பெருநோய்கள் மிகநலியப் பெயர்த்துஞ் செத்துப்
  பிறப்பதற்கே தொழிலாகி இறக்கின் றாரே. (26)

நாம் இறைவனின் திருவைந்தெழுத்தை ஓத வேண்டும்; இறைவனின் புகழைப் பேச வேண்டும்; திருக்கோயிலை வலம்வந்து வணங்க வேண்டும்; உண்பதற்கு முன்பு இறைவனுக்குப் பூசை புரிய வேண்டும்; திருநீறு அணியவேண்டும்; அதனால் பல கொடிய நோய்கள் நீங்கும். இங்ஙனமெல்லாம் செய்யாதவர்கள் நோயுற்று வருந்துவர்; மாறி மாறிப் பிறந்தும் இறந்தும் உழன்று துன்புறுவர்.

**தலம்: திருப்புள்ளிருக்குவேளூர் (வைத்தீசுவரன் கோவில்) — திருத்தாண்டகம்**

பேரா யிரம்பரவி வானோ ரேத்தும்
  பெம்மானைப் பிரிவிலா அடியார்க் கென்றும்
வாராத செல்வம் வருவிப் பானை
  மந்திரமுந் தந்திரமும் மருந்து மாகித்
தீராநோய் தீர்த்தருள வல்லான் தன்னைத்
  திரிபுரங்கள் தீஎழத்திண் சிலைகைக் கொண்ட
போரானைப் புள்ளிருக்கு வேளூ ரானைப்
  போற்றாதே ஆற்றநாள் போக்கி னேனே. (27)

சிவபெருமான் பேராயிரம் உடையவன்; அவனைத் தேவர்கள் எல்லாரும் போற்றுகின்றனர்; அவன் தன் அடியார்களுக்கு எல்லாச் செல்வங்களையும் தருவித்துக் கொடுக்கின்றான். மந்திரம், தந்திரம், மருந்து என்னும் மூன்றாகவும் விளங்கித் தீராத நோய்களையெல்லாம் தீர்த்து அருள் புரிகின்ற வைத்தியநாதப் பெருமானாக விளங்குகின்றான். முப்புரங்களை எரிக்க மேருமலையை வளைத்து வில்லாகக் கொண்டவனும், புள்ளிருக்குவேளூர் என்னும் வைத்தீசுவரன் கோயிலில் எழுந்தருளியிருப்பவனுமாகிய, அவனைப் போற்றி வணங்காமல், யான் எவ்வளவோ காலத்தை வீணாக்கிவிட்டேன்.

**தலம் : கோயில் (சிதம்பரம்)** **பெரிய திருத்தாண்டகம்**

அரியானை அந்தணர்தம் சிந்தை யானை
அருமறையின் அகத்தானை அணுவை யார்க்கும்
தெரியாத தத்துவனைத் தேனைப் பாலைத்
திகழொளியைத் தேவர்கள்தங் கோனை மற்றைக்
கரியானை நான்முகனைக் கனலைக் காற்றைக்
கனைகடலைக் குலவரையைக் கலந்து நின்ற
பெரியானைப் பெரும்பற்றப் புலியூ ரானைப்
பேசாத நாளெல்லாம் பிறவா நாளே. (28)

புறக்கருவிகளாலும் உயிரறிவினாலும் அறிய முடியாதவனும்; அறவோர் நினைவில் தங்குபவனும்;வீடுபேற்றைக் கூறும் வேதத்தின் உள்ளீடானவனும்; சிறிய அணுவைப் போன்றவனும்; எத்தகையோராலும் அகப்படுத்து உணரலாகாதவனும்; தேனையும் பாலையும் ஒத்தவனும்; விளங்கும் அறிவு ஒளியானவனும்; வானோர்க்குத் தலைவனும், ஏனைக் காத்தலும் படைத்தலும் இயற்றும் திருமாலும், நான்முகனும் ஆனவனும் ; தீ, காற்று, ஒலிக்கும் கடல், குலமலைகள், யாவற்றுள்ளும் கலந்து நின்று அளவிடற்கரியவனும்; பெரும் பற்றப்புலியூர் என்னும் தில்லையுள் அருள் வழங்குபவனுமாகிய சிவபெருமானின் புகழைப் பேசாது ஒழிந்த நாட்களெல்லாம், பிறவிப் பயனின்றி ஒழிந்த நாட்களாகவே கருதப்படும்.

**மறுமாற்றத் திருத்தாண்டகம்**

நாமார்க்குங் குடியல்லோம் நமனை யஞ்சோம்
நரகத்தி லிடர்ப்படோம் நடலை யில்லோம்
ஏமாப்போம் பிணியறியோம் பணிவோமல்லோம்
இன்பமே எந்நாளுந் துன்ப மில்லை
தாமார்க்குங் குடியல்லாத் தன்மை யான
சங்கரன்நற் சங்கவெண் குழைஓர் காதிற்
கோமாற்கே நாமென்றும் மீளா ஆளாய்க்
கொய்ம்மலர்ச்சே வடியிணையே குறுகி னோமே.

நாம் யாருக்கும் அடிமை அல்ல; எமனுக்கும் கூடப் பயப்படமாட்டோம். நரகத்தில் துன்பப்படமாட்டோம்; எங்களிடம் வஞ்சகம் இல்லை; யாம் பாதுகாவலைப் பெற்றுள்ளோம்; பிறருக்குக் கட்டுப்படுதல் என்பதனை அறிய மாட்டோம்; அதிகாரத்திற்குத் தலைவணங்க மாட்டோம். இன்பத்திலேயே யாம் திளைத்திருப்போம். எந்த நாளிலும் எமக்குத் துன்பம் இல்லை. தாம் எவருக்கும் அடிமையாகாத இயல்பை உடையவரும், தம்மை அடைந்தவர்களுக்கு நன்மை செய்பவரும், நல்ல வெள்ளைச் சங்கினால் அமைந்த குழையை ஒரு காதில் அணிந்த பெருந்தலைவருமாகிய சிவபெருமானுக்கே, எக்காலத்திலும் மீளாத அடிமையாகி, அவருடைய மலர்போன்ற இரண்டு திருவடிகளை அடைந்துவிட்டோம்.

**தலம்: திருவாரூர்** **திருத்தாண்டகம்**

பற்றிநின்ற பாவங்கள் பாற்ற வேண்டில்
பரகதிக்குச் செல்வதொரு பரிசு வேண்டில்
சுற்றிநின்ற சூழ்வினைகள் வீழ்க்க வேண்டில்
சொல்லுகேன் கேள்நெஞ்சே துஞ்சா வண்ணம்
உற்றவரும் உறுதுணையும் நீயே யென்றும்
உன்னையல்லால் ஒருதெய்வம் உள்கே னென்றும்
புற்றரவக் கச்சார்த்த புனிதா வென்றும்
பொழில்ஆரூ ராவென்றே போற்று நில்லே. (30)

நாம், நம்மைப்பற்றியுள்ள பாவங்களை விலக்கிக் கொள்ள விரும்பினால், மேலான வீடுபேற்று நிலைக்குச் செல்லுகின்ற சிறப்பைவிரும்பினால், நம்மைச் சுற்றிக்கொண்டுள்ள, துன்பங்களை உண்டாக்கும் வழிவகைகளை ஆராய்ந்து கொண்டு இருக்கின்ற, கொடிய வினைகளை வீழ்த்தி வெற்றிகொள்ள விரும்பினால், நெஞ்சமே! நீ இறவாமல் இருக்கும் வழியைச் சொல்லுகின்றேன்; கேட்பாயாக! உறவினரும் துணைபுரியும் நண்பரும் நீதான் என்றும், உன்னைத் தவிர வேறு ஒரு தெய்வத்தையும் யான் நினைக்கமாட்டேன் என்றும், புற்றில் வாழும் பாம்பை இடுப்பிற் கச்சு எனும்படி கட்டிய புனிதனே என்றும், சோலைகள் மிக்க திருவாரூரில் வாழ்பவனே என்றும், சிவபிரானைப் போற்றித்தொழுது, அவர்தம் திருவருள் நெறியில் நின்று ஒழுகுவாயாக!

# சுந்தரர்

(சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருளிய தேவாரம்)

## ஏழாம் திருமுறை

**தலம் : திருவெண்ணெய் நல்லூர்** **பண்: இந்தளம்**

பித்தாபிறை சூடீபெரு மானே அரு ளாளா
எத்தால்மற வாதேநினைக் கின்றேன்
மனத் துன்னை
வைத்தாய்பெண்ணைத் தென்பால்
வெண்ணெய்நல்லூர் அருட் டுறையுள்
அத்தாஉனக் காளாய்இனி அல்லேன்
என லாமே. (31)

பித்தரே! இளம் சந்திரனைச் சடையிற் சூடியவரே! தலைவரே! அருளை ஆளுகின்றவரே! எத்தகைய காரணத்தாலும் உம்மை மறவாமல் நினைக்கின்றவனாகிய எனது மனத்தினிடத்தில் உம்மை எழுந்தருளச் செய்தவரே! பெண்ணை

யாற்றின் தென்கரையிலுள்ள திருவெண்ணெய் நல்லூரில் திருவருட்டுறை என்னும் கோயிலில் எழுந்தருளியிருக்கின்ற தந்தையே! உமக்கு முன்பே யான் அடிமைப்பட்டிருக்கவும், இப்பொழுது யான் அடிமையல்லேன் என்று கூறுதல் பொருந்துமோ?

தலம்: திருவாரூர் பண்: தக்கேசி

பொன்னும் மெய்ப்பொரு ளும்தரு வானைப்
போக முந்திரு வும்புணர்ப் பானைப்
பின்னை என்பிழை யைப் பொறுப் பானைப்
பிழையெ லாந்தவி ரப்பணிப் பானை
இன்ன தன்மையன் என்றறி யொண்ணு
எம்மா னைஎளி வந்த பிரானை
அன்னம்வை கும்வ யற்பழ னத்தணி
ஆரு ரானை மறக்கலு மாமே. (32)

இறைவன் இம்மைக்குரிய பொருட்செல்வத்தையும், மறுமைக்கு உரிய சிறந்த அருட்செல்வத்தையும் தருவான்; உலகியல் நுகர்ச்சிகளையும், வீடுபேற்று இன்பத்தையும் கூட்டுவிப்பான். இங்ஙனம் அடியவர்கள் எல்லார் திறத்திலும் செய்வது மட்டுமேயின்றி, அதற்குமேலும் என்னுடைய பிழைகளைப் பொறுத்தருள்வான். என்னுடைய பிழைகளை எல்லாம் தவிர்த்து நீங்கும்படி கட்டளையிடுவான்; இப்படிப்பட்ட இயல்பினைத்தான் உடையவன் என்று வரையறுத்து உணர்ந்துகொள்ள முடியாத எம்முடைய தலைவனுகிய அவன், மிகவும் எளியவனுய் வலிந்துவந்து எனக்குப் பேருதவிகள் புரிந்தான். அன்னங்கள் நிறைந்த வயல்களையும் நீர்த்திவலைகளையும் உடைய அழகிய அத்தகைய திருவாரூர்ப் பெருமானை, யான் மறக்கவும் முடியுமோ?

தலம்: திருப்புன்கூர் பண்: தக்கேசி

நற்ற மிழ்வல்ல ஞானசம் பந்தன்
நாவினுக் கரையன் நாளைப்போ வானும்
கற்ற சூதன்நற் சாக்கியன் சிலந்தி
கண்ணப் பன்கணம் புல்லன்என் றிவர்கள்
குற்றஞ் செய்யினுங் குணமெனக் கருதுங்
கொள்கைகண்டுநின் குரைகழ லடைந்தேன்
பொற்றி ரள்மணிக் கமலங்கள் மலரும்
பொய்கை சூழ்திருப் புன்கூ ருளானே. (33)

திருஞானசம்பந்தர் பதிகந்தோறும் தம்மைப் பெரிதும் புகழ்ந்துகொண்டார். திருநாவுக்கரசர் சமணசமயம் சார்ந்திருந்தார்; நந்தனர், நாளைப்போவேன் நாளைப்போவேன் என்று சொல்லிக்கொண்டிருந்தார்; மூர்க்கநாயனுர் சூதாடினுர்; சாக்கிய நாயனுர் கல்லால் எறிந்தார்; சிலந்திதிருவானைக்காவில் எச்சிலாகிய வாயின் நூலால் பந்தர் அமைத்தது. கண்ணப்பர் திருக்கோயிலிற் பல அநுசிதங்கள் செய்தார்; கணம்புல்லர் தம் திருமுடியால் விளக்கெரித்தார். திருப்புன்கூரில் உள்ள பெருமானே! இவர்கள் இக்குற்றங்களைச் செய்யினும், பொறுத்தருளிக் குணம் என்றே கொண்டருளும் நின் செயலைக் கண்டு, யான் நின் திருவடிகளை அடைந்தேன்; என்னுடைய குற்றங்களையும், தேவரீர் குணம் என்றே கொண்டு அருள்புரிதல் வேண்டும்.

தலம்: திருப்புன்கூர் பண்: தக்கேசி

அந்த ணாளன்உன் அடைக் கலம் புகுத
அவனைக் காப்பது காரண மாக
வந்த காலன்றன் ஆருயி ரதனை
வவ்வினுய்க்குன்றன் வண்மைகண் டடியேன்
எந்தை நீஎனை நமன்தமர் நலியில்
இவன்மற் றென்அடி யான்என விலக்கும்
சிந்தையால் வந்துன் திருவடி அடைந்தேன்
செழும்பொ ழில்திருப் புன்கூர் உளானே.

திருப்புன்கூரில் எழுந்தருளியுள்ள சிவ்பெருமானே! மார்க்கண்டேயனுகிய அந்தணச் சிறுவன் உன்பால் அடைக்கலம் புகுந்ததனுல், அவனைக் காத்தற் பொருட்டு, அவனது உயிரைக் கவரவந்த காலனின் அரிய உயிரைப் பற்றி ஈர்த்துக்கொண்ட நினது வலிமையை அறிந்து, என்னை எமதூதர்கள் வந்து துன்புறுத்துவார்களாயின், இவன்என்னுடைய அடியவன், இவனை விட்டு விடுங்கள் என்று கூறி, என் தந்தையாகிய நீ என்னைக் காப்பாற்றியருள்வாய் என்னும் கருத்தினுல், யான் நினது திருவடிகளைப் புகலிடமாக வந்து அடைந்துவிட்டேன்; என்னைக் காத்தருள்க!

தலம்: திருநொடித்தான்மலை பண்: பஞ்சமம்

இந்திரன் மால்பிரமன்
எழி லார்மிகு தேவரெல்லாம்
வந்தெதிர் கொள்ளஎன்னை
மத்த யானை யருள்புரிந்து
மந்திர மாமுனிவர் இவன்
ஆர் என எம்பெருமான்
நந்தமர் ஊரனென்றான்
நொடித் தான்மலை உத்தமனே. (35)

இந்திரன், திருமால், பிரமன், மற்றும் பெருமை நிறைந்து மிகுந்த தேவர்கள் எல்லோரும், என்னை எதிர்கொண்டு வந்து வரவேற்கும்படி, எனக்காக மதம் பொருந்திய வெள்ளை யானையை அனுப்பி அருள் செய்து, மந்திரங்களை ஓதுகின்ற சிறந்த முனிவர்கள் இவன் யார்? என்று வினவ, இவன் நம்முடைய நண்பனுகிய நம்பியாரூரன் என்று, நொடித்தான் மலை (கயிலாயமலை) யில் வாழ்கின்ற உத்தமனுகிய எம்பெருமான் திருவாய்மலர்ந்தருளினுன்.

## மாணிக்கவாசகர்

மாணிக்கவாசக சுவாமிகள் அருளிய திருவாசகம்-திருக்கோவையார்

எட்டாம் திருமுறை

யானே பொய் என் னெஞ்சும்
பொய்என் அன்பும்பொய்
ஆனல் வினையே னழுதால்
உன்னைப் பெறலாமே
தேனே யமுதே கரும்பின்
தெளிவே தித்திக்கும்
மானே யருளா யடியேன்
உனைவந் துறுமாறே. 36

யானும் பொய்யன்; என் நெஞ்சும் கூடப் பொய் நிறைந்தது; என்னுடைய அன்பும்

பொய்ம்மை (போலி)யானது. ஆனாலும் பாவியேனாகிய நான், என் பிழைகளையுணர்ந்து திருந்தி அழுதால் உன்னை அடைதல் இயலுமே; தேனும் அமுதமும் கருப்பஞ்சாற்றின் தெளிவும் ஆகிய அனைத்தினையும்விடத் தித்திக்கின்ற பெருமானே! அடியவனாகிய யான், உன்னை வந்து அடையும் நெறியினை எனக்கு அருளிச் செய்வாயாக!

பால்நினைந் தூட்டுந் தாயினுஞ் சாலப்
பரிந்துநீ பாவியே னுடைய
ஊனினை யுருக்கி யுள்ளொளி பெருக்கி
உலப்பிலா ஆனந்த மாய
தேனினைச் சொரிந்து புறம்புறந் திரிந்த
செல்வமே சிவபெரு மானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே 37

உலகில் நம்மிடம் அன்பு செலுத்தி நலம் புரிபவர்களில், தாயை விட மேலானவர் எவரும் இலர். அவள்தான் நமக்குப் பால் நினைந்து ஊட்டி நம்மைப் பாதுகாத்து வளர்க்கின்றாள். அத்தகைய தாயினும் மேலாக, நம்மிடம் சாலவும் பரிவுகாட்டித் தண்ணருள் புரிபவன் இறைவன். அவன் ஊனினை உருக்குகின்றான்; உள்ளொளியாகிய ஞானத்தைப் பெருக்குகின்றான்; அளவில்லாத ஆனந்தம் என்னும் தேனினைச் சொரிகின்றான்; நாம் செல்லுமிடமெல்லாம் நம்முடன் கூடவே புறம்புறம் வந்து திரிகின்றான். அவனை நான் சிக்கெனப் பிடித்துக் கொண்டேன். என்னைவிட்டு அவன் இனி எங்கே போகமுடியும்?

தந்ததுன் றன்னைக் கொண்டதென் றன்னைச்
சங்கரா ஆர்கொலோ சதுரர்?
அந்தமொன் றில்லா ஆனந்தம் பெற்றேன்.
யாதுநீ பெற்றதொன் றென்பால்?
சிந்தையே கோயில் கொண்டஎம் பெருமான்
திருப்பெருந் துறையுறை சிவனே
எந்தையே ஈசா உடலிடங் கொண்டாய்
யானிதற் கிலனோர்கைம் மாறே. 38.

இறைவன் தன்னை எனக்குத்தந்தான்; தான் என்னை எடுத்துக்கொண்டான். அவனால் யான் அளவில்லாத இன்பத்தைப் பெற்றேன்; அவன் என்பால் பெற்றது எதுவும் இல்லை. திருப்பெருந்துறையில் உறையும் சிவபெருமான் அடியவர்களின் உள்ளத்தினையும் கோயிலாகக் கொண்டவன்; இப்போது என் உடலையும் அவன் இடமாகக் கொண்டருளினான். இங்ஙனம் அருள் புரிந்த அப்பெருமானுக்கு யான்புரியும் கைம்மாறு யாதொன்றும் இல்லை.

மெய்தா னரும்பி விதிர்விதிர்த்
துன்விரை யார்கழற் கென்
கைதான் றலைவைத்துக் கண்ணீர்
ததும்பி வெதும்பி யுள்ளம்
பொய்தான் தவிர்ந்துன்னைப் போற்றி
சயசய போற்றி என்னுங்
கைதான் நெகிழ விடேன்; உடை
யாயென்னைக் கண்டு கொள்ளே 39

உடம்பு சிலிர்த்து, உணர்ச்சிப் பெருக்கத்தினால் நடுநடுங்கி, உன்னுடைய மணம் பொருந்திய மலர் போன்ற திருவடிகளுக்கு, என்னுடைய கைகளைத் தலைமேல் வைத்து, வணக்கம் செலுத்தி, கண்களில் நீர் ததும்பி, உள்ளம் வெதும்பி நின்று, பொய்ம்மைத் தன்மைகள் நீங்கி, உன்னைத் துதித்து 'வெல்க - வெல்க' 'வணக்கம்' என்று சொல்லி, நின்னை வழிபடுகிற நல்லொழுக்கத்தினை, யான் என்றும் தளரவிடமாட்டேன். என்னை அடிமையாக உடையவனே, என்னை நின் கடைக்கண்ணால் நோக்கிக் காத்தருள்க!

சிறைவான் புனற்றில்லைச் சிற்றம்பலத்தும்
என் சிந்தையுள்ளும்
உறைவான் உயர்மதிற் கூடலின்
ஆய்ந்தவொண் தீந்தமிழின்
துறைவாய் நுழைந்தனையோ? அன்றி
ஏழிசைச் சூழல்புக்கோ?
இறைவா தடவரைத் தோட்கு
என் கொலாம்புகுந் தெய்தியதே. 40

அணைகள் உள்ள மிக்க நீரையுடைய தில்லைச் சிற்றம்பலமாகிய நல்ல இடத்திலும், என்னுடைய நெஞ்சமாகிய தீய இடத்திலும், ஒரே தன்மையில் தங்குகின்ற சிவபெருமான், உயர்ந்த மதில்களையுடைய கூடலின்கண் (மதுரையில்) ஆராய்ந்த, ஒள்ளிய இனிய தமிழின் துறைகளிடத்து நுழைந்தனையோ? அல்லது ஏழிசைகளால் இயன்ற பண்ணும் பாடலும் முதலாயினவற்றில் ஈடுபட்டனையோ? ஒப்பற்ற தலைவனே! பெரியமலை போலும் நின்தோள்கள் மெலிவு அடையும்படி, நினக்கு நேர்ந்த களைப்புக்குக் காரணம் யாது?

## திருமாளிகைத் தேவர்

திருமாளிகைத்தேவர் முதலிய ஒன்பதின்மர் அருளிய
திருவிசைப்பா - திருப்பல்லாண்டு

### ஒன்பதாம் திருமுறை

கற்றவர் விழுங்குங் கற்பகக் கனியைக்
கரையிலாக் கருணைமா கடலை
மற்றவர் அறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்றஎஞ் சிவனைத்
திருவீழி மிழலைவீற் றிருந்த
கொற்றவன் தன்னைக் கண்டுகண் டுள்ளங்
குளிரஎன் கண்குளிர்ந் தனவே 41.

நல்லறிவு தரக்கூடிய நூல்களைக் கற்றவராகிய மெய்ஞ்ஞானிகள் அனுபவிக்கும்படியான பேரின்ப உணர்வாகிய, கற்பக மரத்தின் கனி போன்று விரும்பியவற்றைத் தருபவனை; கரை இல்லாத கருணை என்னும் பெருமை பொருந்திய கடல்போன்றவனை; அஞ்ஞானிகள் அறியாத மாணிக்கமலை போன்றவனை; அன்பால் நினைப்பவருடைய மனத்தின்கண் மாணிக்கச்சுடர் போன்று ஒளிவீசுபவனை; பகைவர்களாகிய திரிபுர அசுரர்களின் முப்புரங்களை அழித்த எங்கள் சிவபெருமானை; திருவீழிமிழலையின்கண் மேன்மையுற அமர்ந்தருளிய தலைவனாகிய

இறைவனை, எனது மனம் இன்பம் அடையுமாறு பலமுறை தரிசித்தது; எனது கண்களும் இன்பம் அடைந்தன.

தத்தையங் கனையார் தங்கள்மேல் வைத்த
தயாவைநூ ருயிரங் கூறிட்டு
அத்திலங் கொருகூ றுன்கண்வைத் தவருக்கு
அமருல களிக்கும்நின் பெருமை
பித்தனென் றொருகாற் பேசுவ ரேனும்
பிழைத்தவை பொறுத்தருள் செய்யும்;
கைத்தலம்அடியேன் சென்னிமேல் வைத்த கங்கை
கொண்டசோ ளேச்சரத் தானே. 42.

நாம் இறைவனிடத்தில் ஒரு சிறிதும் அன்பு செலுத்துவதில்லை. ஆனல் பெண்களிடத்திற் காமங் காரணமாக எவ்வளவோ அன்பு செலுத்தி, அவர்களின் காதலைப்பெறப் பல விதங்களில் பணிவிடைகள் புரிகின்ருேம். அங்ஙனம் பெண்கள்பால் நாம் செலுத்துகின்ற அன்பை, ஒரு நூறு ஆயிரம் (இலட்சம்) பாகமாகச் செய்து, அதில் ஒரு சிறு பகுதியை மட்டுமேனும், நாம் இறைவனிடம் செலுத்துவோமானல், அவன் நமக்குத் தேவருலகத்தையே அளித்தருள்வான்; புகழாவிட்டாலும் பித்தன் என்று ஒருமுறை இகழ்ந்தாலும்கூட, அதற்காக மகிழ்ந்து, கங்கை கொண்ட சோழபுரத்தில் உள்ள இறைவன், நம்முடைய பிழைகளையெல்லாம் பொறுத்து நமக்குப் பெரிதும் அருள்புரிவான்.

அற்புதத் தெய்வம் இதனின்மற் றுண்டோ?
அன்பொடு தன்னையஞ் செழுத்தின்
சொற்பதத் துள்வைத் துள்ளம்அள் ளூறுந்
தொண்டருக்கு எண்திசைக் கனகம்
பற்பதக் குவையும் பைம்பொன்மா ளிகையும்
பவளவா யவர்பணை முலையுங்
கற்பகப் பொழிலும் முழுதுமாம் கங்கை
கொண்டசோ ளேச்சரத் தானே. 43.

கங்கை கொண்ட சோளேச்சரம் என்னும் திருக்கோயிலில் எழுந்தருளியிருப்பவனே, அற்புதமான கடவுள். இக்கடவுளைக் காட்டிலும் வேறு ஒரு சிறந்த கடவுள் உண்டோ? இல்லை. அப்பெருமானை அன்புடன் திருவைந்தெழுத்தாகிய சொல்லின் இடத்திலே வைத்து, மனம் களித்துத் தியானிக்கின்ற மெய்யடியார்களுக்கு, எட்டுத்திசைகளிலும் உள்ள பொன்னினது பல வகைப்பட்ட செல்வக் குவியல்களும், புதிய உயர்ந்த பொன்னாலாகிய மாளிகைகளும், பவளம் போலும் இதழினையுடைய மகளிரின் பருத்த தனங்களும், கற்பகச்சோலையும், ஆகிய இத்தகைய எல்லா நலங்களும், முழுதாகக் கிடைக்கும்.

பாந்தள்பூ ணாரம், பரிகலங் கபாலம்,
பட்டவர்த் தனம்எரு(து), அன்பர்
வார்ந்தகண் அருவி மஞ்சன சாலை,
மலைமகள் மகிழ்பெருந் தேவி,
சாந்தமுந் திருநீறு, அருமறை கீதம்,
சடை, முடி; சாட்டியக் குடியார்
ஏந்தெழில் இதயம் கோயில்;மா ளிகையேழ்
இருக்கையு ளிருந்த ஈசனுக்கே. 44.

திருச்சாட்டியக்குடித் திருத்தலத்தில் விளங்கும் ஏழிருக்கை என்னும் திருக்கோயிலில் எழுந்தருளியுள்ள சிவபெருமானுக்கு, அணிகின்ற மாலை, பாம்பு; உண்ணும் பாத்திரம் பிரமனின் மண்டை ஓடு (கபாலம்); பட்டத்து யானை, காளைமாடு; திருமஞ்சனம் செய்யுமிடம் அன்பர்களின் கண்களில் பெருக்கெடுத்து ஓடுகின்ற பக்திக் கண்ணீர் ஆகிய அருவி; மகிழ்ச்சிக்குரிய பெரிய தேவி, மலையரசனின் மகளாகிய பார்வதியம்மை; அணிகின்ற சந்தனம் திருநீறு; அரிய வேதம் இன்னிசை; சடையே திருமுடி; அன்பர்களின் உயர்ந்த தூயமனமே கோயில்களில் உள்ள மூலத்தானம் (கருவறை) ஆகும்.

மன்னுக தில்லை, வளர்கநம்
பக்தர்கள், வஞ்சகர் போயகலப்,
பொன்னின்செய் மண்டபத்துள்ளே புகுந்து
புவனி யெல்லாம் விளங்க,
அன்னநடை மடவாள் உமைகோன்
அடியோ முக்கருள் புரிந்து,
பின்னைப்பிறவி யறுக்க நெறிதந்த
பித்தற்குப் பல்லாண்டு கூறுதுமே. 45.

தில்லை என்னும் சிவத்திருத்தலம், என்றும் நிலைபெற்று ஓங்குக. நம்மைச்சேர்ந்த பக்தர்களின் திருக்கூட்டம் மேன்மேலும் வளர்ந்து பெருகுக. அன்பு இல்லாத வஞ்சகர்கள் நம்மை விட்டு அகன்று ஒழிக. அன்னப்பறவை போன்ற நடையினையுடைய உமாதேவியாரின் கணவராகிய சிவபெருமான், பொன்னல் அமைக்கப்பெற்று இனிதாக உள்ள பொன்னம்பலமாகிய மண்டபத்தின் உள்ளே எழுந்தருளி, உலகமெல்லாம் இருள்நீங்கி ஒளி விளக்கம்பெற, அடியவர்களாகிய நமக்கு அருள்செய்து, இனிமேல் வரக்கடவதாகிய மறுபிறவி நமக்கு வராதபடி அறுக்கும் பொருட்டு, நமக்கு ஒரு நல்ல நெறியைத் தந்தருளினர். அந்தப் பித்தனுகிய சிவபெருமானுக்கு நாம் பல்லாண்டு கூறி, அவனை வாழ்த்துவோமாக!

## திருமூலநாயனார்

(திருமூலநாயனார் அருளிய திருமந்திரம்)

### பத்தாம் திருமுறை

ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்
நன்றே நினைமின் நமனில்லை நாணுமே
சென்றே புகுங்கதி யில்லைநுஞ் சித்தத்து
நின்றே நிலைபெற நீர்நினைந்து உய்மினே. 46.

மக்கள் அனைவருக்கும் குலம் ஒன்றேயாகும்; அவர்கள் வணங்கும் கடவுளும் ஒருவரே யாவர். இவ்வுண்மையை நன்ருக நினைந்து உணருங்கள்! உணர்ந்து ஒழுகினல், நேரும் தீங்கு எதுவும் இல்லாமற்போகும். பழி பாவங்களுக்கு அனைவரும் அஞ்சுதல் வேண்டும்: அங்ஙனம் அஞ்சி ஒழுகாமல், நாம் சென்று அடைவதற்குரிய நற்பேறு ஒன்றும் உண்டாகாது. இதனை உங்களுடைய மனத்தில் நீங்கள் அசைவற்று விளங்கி நிலைபெறும்படி நினைந்துணர்ந்து உய்தியை அடையுங்கள்.

அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவது ஆரும் அறிகிலார்
அன்பே சிவமாவது ஆரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந் தாரே. 47.

அறிவில்லாதவர்கள், அன்பும் சிவமும் தனித்தனியே வேருன இரண்டு பொருள்கள் என்று கூறுவார்கள். அன்பே சிவமாக விளங்குதலை எவரும் அறிந்துகொள்வதில்லை. அன்பே சிவமாக விளங்குதலை யாரேனும் அறிந்து கொள்வார்களாயின், அவர்கள் அன்பே சிவமாக அமர்ந்திருக்கும் நிலையைப் பெற்றவர்கள் ஆவர்.

உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம்
வள்ளற் பிரானுர்க்கு வாய்கோ புரவாசல்
தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கம்
கள்ளப் புலனைந்தும் காளா மணிவிளக்கே. 48.

மனித உடம்பு ஓர் ஆலயம். அதன்கண் உள்ள இருதயம், இறைவன் எழுந்தருளியுள்ள கருவறையாகிய பெரிய கோவில். வேண்டும் நலங்கள் பலவும் வழங்கி நம்மைப் பிரியாமல் இருந்து உதவுகின்ற அவ்விறைவனுக்கு நம்முடைய வாயே, கோபுர வாசல் என்று விளங்குகின்றது. இதனை மிகவும் தெளிவாக ஞானத்தால் உணர்ந்தவர்களுக்கு உயிர்தான் சிவலிங்கம்எனத் திகழ்கின்றது. வஞ்சத்தன்மையுடைய ஐந்து புலன்களும், உடம்பாகிய கோயிலில் உள்ள காளாமணி விளக்குகள் ஆகும்.

கங்காளன் பூசுங் கவசத் திருநீற்றை
மங்காமற் பூசி மகிழ்வீரே யாமாகில்
தங்கா வினைகளுஞ் சாருஞ் சிவகதி
சிங்கார மான திருவடி சேர்வீரே. 49.

வெண்தலைமாலை அணிந்தவன் (கங்காளன்) ஆகிய சிவபெருமான், பூசுகின்ற கவசம் போன்ற திருநீற்றை, ஒளிகுறையாமல் பூசி மகிழ்ச்சியுறுவீர்களேயாயின், பாவங்கள் யாவும் தங்க மாட்டா, சிவகதியாகிய வீடுபேறு எளிதிற் கிடைக்கும். அழகு மிகுந்த இறைவனின் திருவடியைச் சேரப் பெறுவீர்கள்.

இருமலும் சோகையும் ஈளையும் வெப்புந்
தருமஞ்செய் யாதவர் தம்பால தாகும்
உரும்இடி நாகம் உரோணி கழலை
தருமஞ்செய் வார்பக்கல் தாழகி லாவே. 50.

இருமல், சோகை (இரத்தமின்மை), கோழை, வெப்பம், மிக்க சுரம் முதலியகொடிய நோய்கள், தருமம் செய்யாதவர்களிடம் வந்து சேரும்; மின்னல் இடி பாம்பு முதலியவற்றால் ஏற்படும் தீங்குகளும், வயிற்று உளைச்சல் (உரோணி), வயிற்றுக் கட்டி (கழலை) முதலிய கொடிய நோய்களும், மற்றும் பலவகைத் துன்பங்களும், தருமம் செய்து கடவுளை வழிபடுபவர்களிடத்தில், ஒரு சிறிதும் நெருங்க மாட்டா.

## திருஆலவாயுடையார்

(திருஆலவாயுடையார் முதலிய பன்னிருவர் அருளியது)

### பதினொன்றாம் திருமுறை

மதிமலி புரிசை மாடக் கூடல்
பதிமிசை நிலவு பால்நிற வரிச்சிறகு
அன்னம் பயில்பொழில் ஆல வாயில்
மன்னிய சிவன்யான் மொழிதரு மாற்றம்,
பருவக் கொண்மூப் படியெனப் பாவலர்க்கு
ஒருமையின் உரிமையின் உதவி, ஒளிதிகழ்
குருமா மதிபுரை குலவிய குடைக்கீழ்ச்
செருமா உகைக்குஞ் சேரலன் காண்க,
பண்பால் யாழ்பயில் பாண பத்திரன்,
தன்போல் என்பால் அன்பன், தன்பால்
காண்பது கருதிப் போந்தனன்.
மாண்பொருள் கொடுத்து வரவிடுப் பதுவே. 51.

சந்திரன் தங்குகின்ற உயர்ந்த மதில்களையுடைய, மாட மாளிகைகள் நிறைந்த கூடலாகிய (மதுரை) நகரத்தின்கண் நிலவுகின்ற, பால் போன்ற வெண்ணிறச் சிறகுகளைக் கொண்ட அன்னப்பறவைகள் பழகுகின்ற, சோலைகளையுடைய ஆலவாய் என்னும் திருக்கோயிலில் நிலைபெற்றுத் தங்கியுள்ள சிவபெருமானாகிய யான், எழுதி விடுக்கும் கடிதம் இது.

பருவகாலத்து மேகத்திற்கு ஒப்பென்று சொல்லும்படி, பாவலர்க்கு ஒருப்பட்டமனத்துடனும், உரிமையுடனும், பற்பல பரிசில்களை வழங்கி உதவி புரிபவரும், ஒளியும் நிறமும் பொருந்திய முழுநிலாப் போன்ற சிறப்பு மிக்க வெண்கொற்றக் குடையின்கீழ் ஆட்சி புரிகின்றவரும், போரில் வல்ல குதிரையினைச் செலுத்துகின்ற அரசரும், ஆகிய சேரமான் பெருமாள். இதனைக் காண்க.

இதனைக் கொண்டுவரும் பாணபத்திரன், பண்புடன் முறையாக யாழ் பயில்பவன்; உன்னைப்போலவே என்னிடத்தில் மிக்க அன்பு உடையவன்; உன்னைக் காணவேண்டும் என்ற கருத்துடன் உன்பால் வருகின்றான்; மிகுதியான சிறந்த பொருளை இவனுக்குக் கொடுத்து, மீண்டும் இவனை இங்கு வந்து சேரும்படி அனுப்பிவிடுக!

சிந்தனை செய்ய மனம் அமைத்தேன்;
செப்ப நாஅமைத்தேன்;
வந்தனை செய்யத் தலையமைத்தேன்;
கைதொழ அமைத்தேன்;
பந்தனை செய்வதற்கு அன்பமைத்தேன்;
மெய் அரும்பவைத்தேன்;
வெந்தவெண் ணீறணி ஈசற்கு
இவையான் விதித்தனவே. 52.

திருநீற்றைத் திருமேனியில் அணிந்துள்ள தலைவனாகிய சிவபெருமானை, எஞ்ஞான்றும் நினைப்பதற்கென்றே, என் மனத்தையும், அவன் திருநாமங்களை உச்சரிப்பதற்கு என்றே என் நாவையும்; அவன் திருவடிகளை வணங்குவதற்கு என்றே என் தலையையும், அவனைத் தொழுவதற்கு என்றே என் கைகளையும், அவனை வயப்படுத்துவதற்கென்றே என் அன்

பினையும், அவன் அருளில் திளைத்துச் சிலிர்ப் பதற்கு என்றே என் மெய்யினையும், உரிமை யாக்கி அமைத்துவைத்தேன்.

பிறந்து மொழிபயின்ற
பின்னெல்லாம் காதல்
சிறந்துநின் சேவடியே
சேர்ந்தேன்—நிறந்திகழும்
மைஞ்ஞான்ற கண்டத்து
வானோர் பெருமானே
எஞ்ஞான்று தீர்ப்ப திடர்? 53

திருநீல கண்டத்தையுடையவனே! வானோர்க்கும் தலைவனாகிய சிவபெருமானே! நிலவுலகில் பிறந்து, மொழி பேசக் கற்றபிறகு, உள்ளத்தில் அன்புமிகுந்து, என்றும் நின்திருவடியையே இடைவிடாது பற்றி நின்றேன்; இருந்தும் என் துன்பங்கள் நீங்கவில்லை; என் துன்பங்களைத் தீர்த்தருள, நீ எப்பொழுது திருவுள்ளம் கொள்வாய்?

என்றும் அடியவர் உள்ளத் திருப்பன,
இவ்வுலகோர்
நன்று மலர்கொடு தூவித் துதிப்பன,
நல்லசங்கத்து
ஒன்றும் புலவர்கள் யாப்புக் குரியன,
ஒண்கலியைப்
பொன்றும் கவுணியன், சைவ சிகாமணி
பொன்னடியே 54.

வல்லமை சான்ற உலகியல் துன்பங்களை எல்லாம் திருவருளால் இல்லையாக்கிய கவுணியர் குலத்தில் தோன்றியவரும், சைவத்தின் தலைமணி போன்றவருமாகிய திருஞானசம்பந்தப் பிள்ளையாரின் பொன் போன்ற திருவடிகள், எக்காலத்தும் அடியவர்களின் உள்ளங்களில் நிலைபெற்றிருக்கும். இவ்வுலகத்தவரால் அன்றலர்ந்த மலர்கள் தூவித் துதிக்கப்படும்; நன்மை பொருந்திய தமிழ்ச் சங்கத்துள் இடம் பெற்ற புலவர்களது கவிதைப் பொருளுக்கு உரியனவாகும்.

இலைமாடு என்றிடர் பரியார், இந்திர
னேயொத் துறுகுறை வற்றாலும்,
நிலையா திச்செல்வ மெனவே கருதுவர்,
நீள்சென் மக்கடல் இடையிற்புக்கு
அலையார், சென்றரன் நெறியா குங்கரை
அண்ணப் பெறுவர்கள், வண்ணத்தின்
சிலைமா டந்திகழ் புகழ்ஆ மூர்உறை
திருநாவுக்கரசு என்போரே. 55.

அழகிய வலிமையான கற்களால் அமைந்த மாடமாளிகைகள் விளங்குகின்ற, புகழ்மிக்க திருவாமூர் என்னும் தலத்தில் உறைகின்ற, திருநாவுக்கரசரின் திருப்பெயரைச் சொல்லித் தியானிப்பவர்கள், செல்வம் இல்லையே என்று துன்பமுற்றுக் கவலைப்படமாட்டார்கள்; தேவேந்திரனைப் போன்று எல்லாச் செல்வங்களும் நிறைந்து தமக்கு எந்த ஒரு குறையும் இல்லாமல் இருப்பினும், இச்செல்வமானது நிலையில்லாதது என்று கருதி, அதில்எத்தகைய பற்றும் செருக்கும் இல்லாமல் இருப்பார்கள்; நீண்ட பிறவியாகிய கடலின்கண் அகப்பட்டுக் கொண்டு அதனால் அலைச்சலுற்று வருந்த மாட்டார்கள்; சிவபெருமானின் திருவருள் நெறியாகிய கரையினைச் சென்று அடைந்து, பேரின்பத்தில் திளைத்து வாழ்வார்கள்.

# சேக்கிழார்

*(சேக்கிழார் பெருமான் அருளிய பெரியபுராணம்)*

## பன்னிரண்டாம் திருமுறை

''மண்ணினிற் பிறந்தார் பெறும் பயன்
மதி சூடும்
அண்ணலார் அடியார் தமை
அமுது செய்வித்தல்,
கண்ணினால் அவர் நல்விழாப்
பொலிவுகண்டு ஆர்தல்,
உண்மை யாமெனில் உலகர்
முன்வருக'' என உரைப்பார். 56.

''உலகத்தில் மனிதராகப் பிறந்தவர்கள் பெறவேண்டிய பெரிய பயன், சந்திரனைச் சூடியுள்ள சிவபெருமானின் அடியவர்களுக்குத் திருவமுது செய்வித்து, அவர்கள் மகிழும்படி உபசரித்தல்; சிவபெருமானின் திருவிழாக்களையும் சிவனடியார்களின் திருவிழாக்களையும் கண்களாற்கண்டு இன்பம் அடைதல், ஆகிய இவைகள்தாம் என்பது, உண்மையாகுமானால், அஃது இவ்வுலக மக்களுக்கெல்லாம் தெளிவாக விளங்கும் பொருட்டு, அவர்கள் முன்னே உயிர் பெற்று முன்போல் அழகிய உருவங்கொண்டு வருவாயாக'' என்று திருஞானசம்பந்தர் பூம்பாவையைப் பதிகம் பாடி உயிர்ப்பித்தருளினார்.

''ஆலமே அமுதமாக உண்டு
வானவர்க்கு அளித்துக்
காலனை மார்க்கண்டர்க்காக் காய்ந்தனை;
அடியேற்கு இன்று
ஞாலம் நின் புகழே யாக வேண்டும்;
நான்மறைகள் ஏத்தும்
சீலமே ஆலவாயிற்
சிவபெருமானே'' என்றார். 57.

முன்பு கொடிய ஆலகாலம் என்னும் நஞ்சினையே அமுதம் ஆகும்படி உட்கொண்டு தேவர்களுக்கு அருள் செய்தாய்; மார்க்கண்டேயரின் பொருட்டு இயமன் மீது கோபங்கொண்டு அவனைக் காலால் எற்றினாய்; இங்ஙனம் அடியவர்களின் பொருட்டு அனுக்கிரகமும் நிக்கிரகமும் செய்தருளிய இறைவனே! நான்கு வேதங்களும் துதிக்கின்ற சிறப்புடையவனே! மதுரையில் திருவாலவாய் என்னும் கோயிலில் உள்ள சிவபெருமானே! உனது புகழே உலகமெல்லாம் பரவவேண்டும். அங்ஙனம் பரப்புவதற்கு எனக்கு நீ அருள் செய்யவேண்டும்.

''சென்ற காலத்தின் பழுதிலாத் திறமும்
இனியெதிர் காலத்தின் சிறப்பும்
இன்றெழுந் தருளப் பெற்ற பேறிதனுல்
எற்றைக்குந் திருவருளுடையோம்;
நன்றியில் நெறியில் அழுந்திய நாடும்
நற்றமிழ் வேந்தனும் உய்ந்து
வென்றிகொள் திருநீற்றொளியினில் விளங்கும்
மேன்மையும் படைத்தனம்'' என்பார். 58.

'' கழிந்துபோன பண்டைக்காலத்தின் குற்றம் இல்லாத தன்மையையும், இனிமேல் எதிர் காலத்தில் உண்டாகப் போகின்ற சிறப்பையும், இன்று தாங்கள் இம்மதுரை மாநகருக்கு எழுந்தருளி வரப்பெற்ற இந்தப் பெறலரும் பேற்றினால் நாங்கள் பெற்றவர்கள் ஆயினோம். இன் நாங்கள் எக்காலத்திலும் இறைவனது திருவருளை உடையவர்களாக விளங்குவோம்; அம்மட்டுமோ! தீயதாகிய புறச் சமய நெறியில் அழுந்திவிட்ட எங்கள் பாண்டியநாடும், எங்களுடைய நல்ல தமிழ் வேந்தனாகிய பாண்டியனும் உய்தியடைந்து, வெற்றி கொள்கின்ற திருநீற்றின் ஒளியினால் விளக்கம் அடைகின்ற மேன்மையினையும் பெற்று விட்டோம்'' என்று கூறினார்.

நன்மை பெருகு அருள் நெறியே
வந்தணைந்து நல்லூரில்
மன்னுதிருத் தொண்டனுர் வணங்கி
மகிழ்ந்தெழும் பொழுதில்
'உன்னு'டைய நினைப்பதனை முடிக்கின்றேம்'
என்றவர் தம்
சென்னிமிசைப் பாதமலர் சூட்டினன்,
சிவபெருமான். 59.

நன்மைகள் பெருகும்படி செய்கின்ற திருவருளின் நெறிப்படியே, திருநல்லூருக்குத் திருநாவுக்கரசராகிய திருத்தொண்டர் வந்தடைந்தார். அங்குள்ள பெருமானைத் தரையில் விழுந்து பணிந்து வணங்கி மகிழ்ந்து எழுந்தார். அங்ஙனம் அவர் எழுந்த சமயத்தில் ''உன்னுடைய விருப்பத்தினை முடிக்கின்றோம்'' என்று அருளிச்செய்து, திருச்சத்தி முற்றத்தில் அவர் வேண்டிக்கொண்டபடியே, திருநாவுக்கரசரின் தலைமீது சிவபெருமான் தன்னுடைய திருவடித்தாமரைகளை வைத்துச் சூட்டியருளினான்.

இறவாத இன்ப அன்பு வேண்டிப், பின்
வேண்டுகின்ருர்;
பிறவாமைவேண்டும்; மீண்டும்பிறப்புண்டேல்
உன்னை என்றும்
மறவாமை வேண்டும்; இன்னும் வேண்டும்;
நான் மகிழ்ந்துபாடி
அறவா நீ ஆடும் போதுஉன் அடியின்கீழ்
இருக்க; என்ருர். 60

புனிதவதியார் என்னும் காரைக்கால் அம்மையார் சிவபெருமானிடத்தில், அழிவில்லாது நிலைபெற்றுள்ளதும், இன்பத்தைத் தருவதுமாகிய பக்தியைத் தரும்படி விரும்பிக் கேட்டார். அம்மட்டில் அமையாமல் மேலும் கேட்கின்றார். 'பெருமானே! எனக்குப் பிறப்பில்லாத தன்மை வேண்டும்; ஒரு கால் மறுபடியும் யான் பிறக்க நேர்ந்தால், அப்பிறவிகளில் யான் உன்னை என்றும் மறவாமல் இருத்தல் வேண்டும்; இதன் மேலும், ஒன்று வேண்டும்! அறத்தின் வடிவமாக உள்ள இறைவனே! நீர்திருநடனம் செய்யும்போது, அதனைக் கண்டு மகிழ்ந்து பாடித் துதித்துக்கொண்டு யான், உம் திருவடிகளின் கீழ் எப்போதும் இருக்கவேண்டும்'' என்று கேட்டுக்கொண்டார்.

என்றும் இன்பம் பெருகும் இயல்பினுல்
ஒன்று காதலித்து உள்ளமும் ஓங்கிட
மன்று ளார் அடி யார் அவர் வான்புகழ்
நின்றது எங்கும் நிலவி உலகெலாம். 61.

எக்காலத்தும் எவ்விடத்தும் இன்பஉணர்வு பெருகச் செய்கின்ற இயல்புடையனவாகிய சரியை கிரியை யோகம் ஞானம் என்னும் சாதனங்களுடன், ஒப்பற்ற சிவபரம்பொருளையே காதலித்து வழிபட்டு, உயிர்கள் அனைத்தும் உய்திபெற்று ஓங்கும் வண்ணம் ,திருச்சிற்றம்பலவாணரதும், அவர்தம் அடியார்களதும் ஆகிய சிறந்த பெரும்புகழ், இந்நிலவுலகம் எங்கணும் பரந்து நன்கு நிலை பெற்று இருக்கின்றது.

# திருச்சிற்றம்பலம்

# (முற்றும்)

# திருவிடைமருதூர் மும்மணிக்கோவை

### முன்னுரை:

பட்டினத்தடிகளார், தம் வாழ்நாளின் பிற்பகுதியைத் திருவிடைமருதூர்க் கீழைக் கோபுர வாயிலில் தங்கியிருந்து கழித்தார். திருவிடைமருதூரில் எழுந்தருளியுள்ள மருத வாணர் என்னும் மகாலிங்கப் பெருமானின் திருவருளில், அவர் பெரிதும் திளைத்திருந்தார். அதன் பயனாகத் 'திருவிடைமருதூர் மும் மணிக்கோவை' என்னும் நூல் ஒன்றும், அவ ரால் இயற்றியருளப் பெற்றது. திருவிடை மருதூர் மும்மணிக்கோவை, இவர் தம்ஏனைய நூல்கள் போலவே, சொற் பொருட் சுவை நலங்கள் பெரிதும் அற்புதமாக அமைந்து திகழ் கின்றது.

### 1. அம்மையப்பர்:

அதன் முதற்பாடலில் திருவிடைமருதூர்ப் பெருமான் அம்மையப்பராக, ஆணும்பெண்ணு மாக அமைந்து விளங்கும் சிறப்பினை மிக விரிவாகப் பாடுகின்றார். ''இருவயின் உருவும் ஒரு வயிற்று ஆகி, வலப்பால் நாட்டம் இடப் பால்நோக்க, வாணுதல்பாகம் நாணுதல்செய்ய, வலப்பால் திருக்கரம் இடப்பால் வனமுலை தைவந்து வருட, மெய்ம்மயிர் பொடித் தாங்கு, உலகம் ஏழும் பன்முறை ஈன்று, மருது இடங் கொண்ட ஒரு தனிக் கடவுள்'' என்றுவரும் அழகிய வரிகள் பெருஞ்சுவை பயப்பனவாகும்.

### 2. மருதவாணர்:

மருதவாணரை வழிபட்டால், எல்லா நலங்களையும் அடையலாம் என்பதனைப் ''பொருளும் புலமும் புகழும் திறமும், அருளும் அறிவும் அனைத்தும் ஒருவருள் கருகா என்பு ஆர்க்கும் கறைமிடற்றாய்! தொல்லை மருதா! என்பார்க்கு வரும்'' என்ற பாடலில் அருளிச் செய்கின்றார். மருதவாணரைத் தாம் வழி படப்பெற்றதனால், தாம் பெற்ற பேற்றினைப் பின்வருமாறு கூறுகின்றார். ''வருந்தேன் இறந்தும் பிறந்தும்; மயக்கும் புலன்வழி போய்ப் பொருந்தேன்; நரகில் புகுகின்றிலேன்; புகழ் மாமருதின் பெருந்தேன் முகந்துகொண்டு உண்டு, பிறிது ஒன்றில் ஆசையின்றி இருந்தேன்; இனிச் சென்று இரவேன் ஒருவரை யாதொன் றுமே'' எனவரும் பாடல், இறைவழிபாட்டால் பெறத்தக்க இனிய பல பயன்களைத் தெளி வுறுத்துகின்றது.

### 3. மருத மாணிக்கத் தீங்கனி:

திருவிடைமருதூர்ப் பெருமானை ஒரு கனியாக உருவகம் செய்து, பட்டினத்தடி களார் பாடியிருக்கும் பாடல், மிகவும் இனிமை வாய்ந்து திகழ்கின்றது. ''நெஞ்சமாகிய கொல்லையில், ஆங்காங்குக் கிடக்கின்றவஞ்சம் ஆகிய கட்டையை வேருடன் அகழ்ந்து போக்கி, அதனால் உண்டாகிய குழியைத் தூர்த்து, கொல்லையைச் சமன் செய்து, அன்பாகிய பாத்தி அமைத்து, அதன்கண் உண்மை என் கிற எருவைப் பரப்பி, பக்தி என்கிற ஒப்பற்ற விதையை விதைத்து, நாள்தோறும் ஆர்வம் என்னும் நீரைப்பாய்ச்சி, ஐம்பொறிகளாகிய பட்டிமாடுகள் மேயாதபடி பாதுகாத்து, சாந்த மாகிய வேலியை அமைத்து, ஞானம் என்னும் பெருமுளை தோன்றி, கருணையாகிய தளிர் தளிர்க்க, காமம் குரோதம் முதலிய களைகளைப் பறித்து வளர்க்க, அதன்கண் கண்ணீர் அரும்ப வும், கடிமலர் மலரவும், அஞ்செழுத்து என் னும் அருங்காய் தோன்றியது. அது காளகண்ட மும், கண் ஒரு மூன்றும், தோள் ஒரு நான்கும், சுடர்முகம் ஐந்தும் கொண்டு, பலநிறம் தாங்கி, தவளத்திருநீறு பூசி, அறுசுவை தன்னிலும் சிறந்த உறுசுவை உடைத்தாய், காணினும் கேட்பினும் கருதினும் களிதரும் மருதமாணிக் கத் தீங்கனியை விளைவித்தது''.

### 4. காமக் காடும், மரணக் கனியும்

''இந்த மருத மாணிக்கத் தீங்கனியாகிய இறைவனின் திருவருளை, எம்மனோர்கள் இனி தாக அருந்திச் செம்மாந்து இருந்தனர். ஆனால் ஒரு சிலர் இங்ஙனம் செய்யாமல், மனமெனும் புனத்தை வறும்பாழ் ஆக்கினர். அவர்களின் மனப்புனத்தைக் காமக்காடு மூடியது. அக் காட்டில் ஐம்புல வேடர்கள் வழிப்பறி செய்து ஒழுகினர்; இன்பப் பேய்த்தேர் எட்டாது அகன்று ஓடியது; கல்லா உணர்வெனும் புல் வாய் மான் அலைந்து திரிந்தது. பேராசை என்னும் விதைகள் சிதறி, யான் என்னும் அகந்தையாகிய நச்சு மாமரம் நனிமிகமுளைத் தது. அந்த நச்சுமரம் பொய்ம்மை என்னும் சுவடுகள் பரப்பி வளர்ந்தது. பாவப் பல்தளை மேவி விரிந்தன. கொடுமை அரும்பியது. கடுமை மலர்ந்தது. துன்பப் பகையாய்த் தொங்கியது. அவைகள் மரணம் பழுத்து நரகிடை வீழ்ந் தன. இங்ஙனம் மக்களுட் பலர் தமக்கும் பிறர்க்கும் பயனின்றி, ஒரு சில காலம்வாழ்ந்து

இறந்தொழிகின்றனர்'' என்று, உலக மக்களின் பயனில் வாழ்க்கையினை நினைந்து இரங்கிப் பட்டினத்தடிகள் வருந்துகின்றார்.

## 5. நின்னைக் கண்டேன், என்னையும் கண்டேன்:

உலக மக்கள் 'நான்' 'நான்'என்று குறிப்பிட்டுக் கொள்கின்றனரே, அந்த 'நான்' என்பது யாது? அந்த நான் என்பதுதான், நம்முடைய உயிர் அல்லது ஆன்மா என்று பலரும் கூறுகின்றனர். ஆதலால் அந்த உயிர் அல்லது ஆன்மா என்பது என்ன? இந்த உடம்பா?இந்த உடம்பின் மேல் உள்ள மயிர்க்கூட்டமா? இம் மயிர்கள் பரவியுள்ள தோலா? தோலின்கண் தோன்றி மூடப்பெறுகின்ற புண்ணா? அப் புண்ணில் ஊறுகின்ற உதிரமா? உடலின் இடையிடை உள்ள எலும்பா? எலும்பில் உள்ள விழுதா? அதனுள் ஒழுகுகின்ற வழும்பா? அதனில் தோன்றி ஊறும்புழுக்களின்வரிசையா? மனத்தின் குவியலா? கட்டிய நரம்பின்கயிறா? உடம்பில் தோன்றி வருத்தும் நோயா? இவற்றுள் எது உயிர்? என்பது தெரியவில்லை. இன்னது யான் என்று அறியேன். என்னை ஏதினும் தேடினேன், யாதினும் காணேன்.

''காவிரியாறு சூழ்ந்த திருவிடைமருதூர்ப் பெருமானே; நின் தெய்வத் திருவருள்கைவந்து கிடைத்தது. அதனால் மாயப்படலம் கிழிந்தது. யான் ஞானநாட்டம் பெற்றேன். அந்த ஞானப் பார்வையால், யானும் நின் பெருந்தன்மையைக் கண்டேன். கண்டதும் என்னையும் கண்டேன், பிறரையும் கண்டேன். நின் னிலை அனைத்தையும் கண்டேன். நின்னைக் காணாத மாந்தர், தம்மையும் காணமாட்டாத தன்மையரே ஆவர்!'' என்னும் கருத்தமைந்த பாடல்,நம்மைத் தத்துவ ஆராய்ச்சி உலகிற்கு அழைத்துச் செல்கின்றது.''நாடியே என்போ நரம்புசீக் கோழையோ, தேடி எனை அறியேன்; தேர்ந்த வகை நாடி, அரன் தன்னாலே தம்மையும் கண்டு தனைக் காணார்,என்னாம், என்று அறிவார் இன்று'' எனவரும் சிவஞான போத வெண்பா, இப்பாடலின் அடிச்சுவட்டிலேயே தோன்றியது எனக் கொள்ளலாம்.

## 6 யார் குற்றம்?

திருவிடைமருதூர்ப் பெருமானை வழிபட்டு எல்லா நலங்களையும் பெற்று, மக்கள் இன்புற்று வாழலாம். அங்ஙனம் செய்யாமையால் பலர் பெரிதும் வருந்தி அலக்கண் உறுகின்றனர். மருதவாணப் பெருமானை வழிபட்டால், தேவர் உலகில் உள்ள காமதேனுவின் கன்றுபோலக் கவலையற்று இன்புற்று வாழலாம். அந்தோ அது செய்யாமையால் மக்கள் பலரும் வருந்தி வாழ்கின்றனரே. இதற்குக் காரணம் பாவிகளாகிய அவர்கள் செய்த பாவமே. அறுசுவை அடிசில் இருக்க அதனைப் புசியாமல், ஒருவன் வருந்தினால் அது அடிசிலின் குற்றமா? நல்ல தெளிந்த சுவையுள்ள நீர் ஒரு குடத்தில் நறுமணம் கமழ நிறைந்திருக்கவும், அதனைப் பருகி ஒருவன் தன் வேட்கையைத்தணித்துக் கொள்ளாவிட்டால், அது அந்நீரின் குற்றமன்று. அழகிய நறுமலர்கள் நிறைந்த பூஞ்சோலை அருகிலேயே அமைந்திருக்க, அதன் நிழலில் சென்று இன்புறாமல், ஒருவன் கடுவெயில் மணலில் நடந்து அலைந்து துன்புறுவானாயின், அஃது அந்தச் சோலை நிழலின் குற்றமாகுமோ?'' என்று பட்டினத்தடிகள்நம்மை நோக்கி வினவி, நம்மனோர்க்காகப் பெரிதும் இரங்கி வருந்தி ஏங்குகின்றார்.

## 7. ஐம்புல ஒறுப்பும், நுகர்வும்:

திருவிடைமருதூர் மும்மணிக்கோவையின் பிறிதொரு பாடலில், ''உலகத்தில் மனிதர்கள் பலர், மனைவியையும் குழந்தைகளையும் சுற்றத்தினரையும் பிரிந்து,காடும்மலையும்புகுந்து, வெய்யிலிலும், பனியிலும் அலைந்து, பஞ்சாக்கினி மத்தியில் நின்று தவம் கிடந்தும், சடையைப் புனைந்தும், தலையைப் பறித்தும், உடையைத் துறந்தும், பட்டினி கிடந்தும் காய் கிழங்கு சருகு நீர் காற்று என்பனவற்றை உண்டும், கல்லிலும் களரிலும் படுத்து உறங்கியும், இயல்பாகவே மெலிகின்ற உடம்பினை மேலும் மேலும் மெலிவித்து வருந்தி, மறுமையில் வீடு பேறு அடைவதற்காக, இம்மையில், தங்களைத் தாங்களே வருத்திக் கொள்வார்கள்.''

''ஆனால் மருதவாணரின் அடியவர்களாகிய நாங்களெல்லாம் எழுநிலை மாடத்திலும், நந்தவனத்திலும், தென்றல்வீசும் முன்றிலிலும், சித்திர மண்டபத்திலும், வாவிக் கரையிலும், மயில்கள் நடனமிடும் மலைப் பகுதிகளிலும், விரும்பிய இடங்களிலும், அழகிய பொற்கட்டில்களில் ஐவகை அமளிப் பள்ளிகளில், அழகிய பெண்களுடன் ஐந்து புலன்களும் ஆர நுகர்ந்து மைந்தரும் சுற்றமும் சூழ, வளம்மிக்கவாழ்க்கையில் மகிழ்ச்சியுடன் வாழ்கின்றோம்.இதற்குக் காரணம் மந்திர எழுத்தைந்தும் மறவாது வாயிடை நவின்று, சிந்தையைச் சிவபிரான் திருவருளில் செலுத்துவதேயாகும். இதனால் இம்மை வாழ்க்கை மட்டுமேயன்றி, மறுமை வாழ்க்கை இன்பமாகிய வீடுபேற்று இன்பத்தையும் நாங்கள் இழக்கவில்லை. வலிமையுள்ள ஒருவன் அல்லது வலிமை சிறிதும் இல்லாத மெலியவன் ஒருவன், ஆகிய இருவரில் எவனொருவன் தன் கையிலுள்ள கல்லை வானத்தை நோக்கி எறிந்தாலும், அது நிலத்தில் வந்து வீழ்தல் திண்ணமே யாகும். அது போல நின் திருவைந்தெழுத்தை ஓதுபவர்கள் யாவராயினும், அவர்கள் எல்லா நலங்களும் நிரம்பப்பெறுவர் என்பதில் ஐயமில்லை'' என்னும் கருத்தமைந்த பாடல், ''நாடுகளில் புக்குழன்றும் காடுகளில் சரித்தும், நாகமுழை புக்கிருந்தும், தாகமுதல் தவிர்ந்தும், நீடுபல காலங்கள் நித்தராய் இருந்தும், நின்மல ஞானத்தை இல்லார் நிகழ்ந்திடுவர் பிறப்பின்; ஏடு தரும் மலர்க்குழலார் முலைத்தலைக்கே, இடைக்கே, எறிவிழியின் படுகடைக்கே கிடந்தும், இறைஞானம் கூடுமவர் கூடரிய வீடும் கூடிக் குஞ்சித்த சேவடியும் கும்பிட்டே இருப்

பர்'' என்னும் சிவஞான சித்தியார் செய்யுளை நினைப்பிக்கின்றது.

## 8. கருச்சிறை புகாமற் காத்தருள்க:

''திருவிடைமருதூர்ப் பெருமானே! அடியேன் விண்ணப்பத்தை ஒரு முறை முனியாது கேட்டருள்க. நான் நின் திருவடிகளைப் பணியாத கல்மனக் கயவர்களுடன் நெடுநாள் பழகினேன். அதனால் ஏற்பட்ட கொடிய பாவங்கள் இழுத்துச் செல்ல, கருப்பாசயம் என்னும்இருள் நிறைந்த சிறையின் அறையில், குடல் என்னும் சங்கிலி பூட்டப்பட்டு, புழுக்கூடாகிய உடலின் மலத்தில் அழுந்தி, நெடுநாளாகக் கிடந்து வருகின்றேன். பலவகை நோய்கள் எனக்குத் தொல்லை தருகின்றன. தண்டலாளர்கள் மிண்டிவந்து அலைக்கழிக்கின்றனர். உதர நெருப்பில் • பதைபதைக்கின்றேன். வாதம் என்னும் சவுக்கால் மொத்துண்டு வருந்துகின்றேன். கிடக்கவும் நிற்கவும் நடக்கவும் இயலாமல், இடம் குறைந்த வாயிலில் முடங்கித் துன்புறுகின்றேன். பாவப் பகுதியில், தள்ளி ஏவற் கொடியோர் ஐவரை ஏவி, ஆசை என்ற விலங்கினுல் என்னையும்என்உடலையும் கட்டிப் போட்டு, துன்புறும்படி விடுத்துச் சென்றனர். இதனால் யான் வாடிக் கிடக்கின்றேன். வீடு நெறி காணேன். என்னை இச்சிறையிலிருந்து தப்புவித்து, யான் இனி ஒரு சிறையிலும் புகாதபடி காத்து அருள் செய்ய வேண்டும்'' என்று விண்ணப்பித்துக் கொள்ளுகின்றார். இத்தகைய விண்ணப்பத்தினை நாமும் இறைவன்பால் செய்து கொண்டு உய்ய முயலலாம்.

## 9. பெரிய அன்பின் வரகுண தேவர்:

உலக வரலாற்று நூல்களில், உரோம நாட்டு நீரோ (Nero), பிரெஞ்சுநாட்டு லூயி (Lous XIV), மங்கோலியத்துச் செங்கிஸ்கான் ( Chengiskhan ), துருக்கியத்துத் தாமர்லேன் ( Tamerlane ) முதலிய பற்பல தீய கொடுங்கோல் அரசர்களைப் பற்றிப் படிக்கின்றோம். ஆனால் தமிழ்நாட்டை ஆண்டு வந்த சேர சோழ பாண்டிய மன்னர்களுள் ஒருவரேனும், ஒரு சிறிதாவது நீதிநெறி தவறிய கொடுங்கோலர்களாக இருந்ததில்லை. அவர்கள் அனைவருமே அறநெறி வழுவாமல், அரசோச்சிச் செங்கோல் செலுத்தி வந்தனர். தமிழக வேந்தர்கள் அறிவு திரு ஆற்றல்களிற் சிறந்து விளங்கியதுடன், நீதி நேர்மை பக்தி ஒழுக்கம் முதலிய பண்பாட்டுத் துறைகளிலும், நிகரற்றுத் திகழ்ந்திருந்தனர்.

இத்தகைய தமிழ் வேந்தர்கள் பலருள், சடில பராந்தகன் நெடுஞ்சடையர் (கி. பி. 765-815) மிகவும் சிறப்பாகக் குறிப்பிடத் தக்கவராவார். புகழ்மிக்க வேள்விக்குடிச் செப்பேடுகளை வழங்கியவர் இவ்வேந்தரே யாவர். பல்லவர், சேரர், பல சிற்றரசர்கள் ஆகியோரைப் போரில் வென்று, புறங்கண்ட வீரப்பெருவேந்தராக, இவர் விளங்கியிருந்தார். பாண்டி நாடு, சோழ நாடு, கொங்குநாடு, தென்திருவிதாங்கூர்நாடு, தொண்டைநர்டு என்பவைகள் இவரது ஆட்சிக்கு உட்பட்டு அடங்கியிருந்தன. இத்தகைய சிறந்த பேரரசராகிய இவரை, தமிழக மக்கள் வரகுணபாண்டியர் என்று பெரிதும் போற்றி வந்தனர். சோழ நாட்டைத் தமது ஆட்சிக்குஉட்படுத்தி, இவர், தமது தலைநகரம் ஆகிய மதுரையிற்போல, சோழநாட்டுத் திருவிடைமருதூரிலும் ஒரு மாளிகை அமைத்துக்கொண்டு, சிலகாலம் தங்கியிருந்தார். திருவிடைமருதூர் மகாலிங்கப் பெருமானுக்குப் பல திருப்பணிகள் புரிந்தார். திருவிடைமருதூர்க் கோயிலின் மேற்குக் கோபுரமும், கொடுமுடிப் பிராகாரமும் பிறவும் இவரால் அமைக்கப்பட்டனவேயாகும். திருவிடைமருதூர்ப் பெருமான்பால் இவ்வரசர் கொண்டிருந்த அன்பின் திறம் எல்லையற்றது. இவ்வாறும் உண்டோ! என வியக்கத்தக்கது. அதனைப் பட்டினத் தடிகள், தாம் இயற்றியருளிய ''திருவிடைமருதூர் மும்மணிக்கோவை'' யில், பெரிதும் பாராட்டிப் பின்வருமாறு புகழ்ந்து போற்றியிருக்கின்றார்.

### பட்டினத்தார் பாராட்டிய வரகுண தேவர்:

(1) ஒரு நாள், கொடிய கள்வன் ஒருவனைத் தேடிப் பிடித்து, அவன்செய்த குற்றங்களுக்காகக் கடுந்தண்டனை தருதற்பொருட்டு, ஊர்க்காவலர்கள் அவனுடைய இரு கைகளிலும் விலங்கிட்டுப் பலவகைகளில் துன்புறுத்தி இழுத்துச் செல்லுதலையும், அக்கள்வன் நெற்றியில் திருநீறு அணிந்து பொலிதலையும் இவ்வரசர் கண்டார். உடனே இவருடைய உள்ளம் உருகிவிட்டது. ஊர்க் காவலர்களை அழைத்து, அக்கள்வனை மன்னித்துக் கட்டுக்களை அவிழ்ப்பித்து, இன்சொற்கள் கூறி விடுதலை செய்து அனுப்பி விட்டார்.

(2) மற்றொரு நாள், ஊரின் புறத்தே நரிகள் இரவில் ஊளையிட்டன. அவ்வொலியைக் கேட்ட இவர், தாம் வழிபடும் திருவாலவாய்ச் சோமசுந்தரப் பெருமானையும், திருவிடைமருதூர் மகாலிங்கப் பெருமானையுமே அந்நரிகள் அன்புடன் அழைத்துப் போற்றிப் பாடுகின்றன என்று, தம்முடைய மனநலத்தின் சால்பாற் கருதி மகிழ்ந்தார். இதனால் வேட்டைக்காரர்கள் அவைகளைப் பிடித்துக் கொல்வதற்காகக் கொண்டு வந்தபொழுது, அவற்றைக் கொல்ல மனம் வாராமல் ''இறைவனைப் பாடி வழிபட்ட இவற்றிற்கு ஓர் ஊறும் செய்தலாகாது'' என்று சொல்லி அவற்றிற்கு நல்லாடைகள் பலவற்றை முறைப்படி போர்த்திச் சிறப்புச் செய்து, காட்டிற்கே கொண்டு போய் விட்டுவிடும்படி செய்தருளினார்.

(3) ஒரு சமயம், மழைக் காலத்தில் திருவிடைமருதூர்த் திருக்குளத்தில் தவளைகள் மகிழ்ச்சி மேலீட்டாற் பேரொலி செய்தன. அது கேட்ட இவர் தவளைகள் இறைவனின் திருப்பெயர்களைக் கூறித் துதித்து வழிபடுகின்றன என்று தம்முடைய சிவபக்திச் சிறப்புக்கு ஏற்பக் கருதிக்கொண்டு, அத்தவளைகளைப் பாராட்டிப் பரிசு நல்கும் முறையில் நவமணி

களையும் பொற்காசுகளையும் அத்திருக்குளத்தில் வாரிவீசி மகிழ்ந்தார்.

(4) மற்றொரு சமயம், இவர் திருவிடைமருதூர்க் கோயிற்குச் சென்று வழிபட்டு வலம் வந்து கொண்டிருக்கும்போது, பிராகாரத்தில் உலரப் பரப்பியிருந்த கோயிலுக்குரிய எள்ளினைப் பணிவிடைக்காரன் ஒருவன் நிரம்ப எடுத்து வைத்துத் தின்று கொண்டிருந்ததைக் கண்டார். ''சிவாலயத்திற்குரிய இதனை நீ இங்ஙனம் திருடித் தின்னுதல் முறையா?'' என்று அவனை வினவினார். அகப்பட்டுக் கொண்ட அவன் தப்பித்துக் கொள்ளுவதற்கு வேறு வழியின்மையால் 'அரசர் பெரும; உண்ட கடனைத் தீர்த்தேயாதல் வேண்டும் என்று பெரியவர்கள் சொல்லப் பலகால் கேட்டிருக்கின்றேன். அதனால் இப்போது இந்த எள்ளினையுண்டால், மறபிறவியிலும் மகாலிங்கப் பெருமானுக்கு மீண்டும் பணிவிடை செய்யும் நற்பேறு வாய்க்கும் என்ற பெரு விருப்பத்தினாலேயே இங்ஙனம் செய்தேன்' என்று அரசரின் மனங்கொள்ளும்படி அஞ்சிப் பணிவுடன் கூறினான். அது கேட்டதும் அரசர் மகிழ்ந்தார். 'அவ்வாறாயின், எனக்கும் அதில் சிறிது கொடு' என்று கூறி, அப்பணி விடைக்காரனின் எச்சில் எள்ளினை வற்புறுத்தி வாங்கியுண்டு மகாலிங்கப் பெருமானுக்குப் பணிவிடைகள் செய்யும்பேறு மறுபிறவிகளிலும் தமக்கு மீள மீளக் கிடைத்து வருதல் வேண்டும் என விரும்பி வழிபட்டுச் சென்றார்.

(5) வேறொரு சமயம், திருவிடைமருதூர்க் கோயிலின் அருகில் புறத்தே ஓரிடத்தில் ஒரு மண்டையோடு விழுந்துகிடந்தது. அதனைக் கண்ணுற்றார் இவ்வரசர் பெருமான். ''இறந்து போயும்கூட, மகாலிங்கப் பெருமானைப் பிரிவதற்கு மனமின்றி இக்கோயில் அருகே வந்து விழுந்து கிடக்கின்ற நும் அன்பின் திறம் எத்தகையது!'' என்று வியந்து, இத்தகைய பேறு உம்மைப் போல எனக்கும் வாய்த்தல் வேண்டும் என்று விரும்பி, அத்தலையோட்டினைத் தம் தலையுறப் பணிந்து வணங்கி நின்றார்.

(6) பிறிதொரு சமயம், திருவிடைமருதூர்க் கோயிலுக்குச் சென்று வழிபட்டுவிட்டு, அடுத்துள்ள பிராகாரங்களை வலம் வந்து கொண்டிருந்தபொழுது, அங்கே ஓர் இடத்தில் நாயின் மலம் விழுந்து கிடக்கக் கண்டார். அதனை அன்பர்களில் ஒருவராவது கவனித்து அப்புறப்படுத்தித் துப்புரவு செய்யாதிருத்தல் கண்டு, தாமே சென்று அப்புறப்படுத்தித் துப்புரவு செய்து உள்ளம் பூரித்தார்.

(7) ஒருகால் இவ்வரசர் பெருந்தகை, திருவிடைமருதூர்த் திருவீதியை வலம் வரும்போது, வேப்ப மரங்கள் யாவும் நன்றாகப் பழுத்திருத்தலைக் கண்டார். சிவம் பழுத்த அவர்தம் திருவுள்ளத்திற்கு அவ்வேப்ப மரங்களின் பழங்கள் யாவும் சிவலிங்கம் போலக் காட்சியளித்தன. அதனால் அவர் உடனே அம்மரங்களுக்கு எல்லாம், அழகிய விதானம் கட்டுமாறு கட்டளையிட்டு, உவகை பூத்தார்.

(8) இவைகளையெல்லாம் காட்டிலும், இவர்தம் அன்பின் திறனையுணர்த்தும் அரியதொரு நிகழ்ச்சியும் உண்டு. சோழ அரசனின் மகள் ஒருத்தி, இவ்வரசரை மணந்து கொள்ள விரும்பினாள். இவரும் அவளைப் பாராமலே மணந்து கொள்ள இசைவு தெரிவித்திருந்தார். பின்னர் அவளை இவர் பார்க்க நேர்ந்தது. அவளுடைய ஒப்பற்ற பேரழகினைக் கண்டு வியந்தார். 'சிறந்த பொருள்கள் எதுவும் இறைவனுக்கே உரியது' என்று எண்ணி வழங்கி விடும் இயல்புடைய இவர், 'இவ்வளவு சிறந்த பேரழகுடைய இப்பெண்ணும் இறைவனுக்கே உரிமையாகத் தக்கவள்' என்று எண்ணி, அவளை அழைத்துக் கொண்டு சென்று மகாலிங்கப் பெருமான்பால் ஒப்படைத்து விட்டார் என்பது வரலாறு. இத்தகைய வரகுண தேவரின் இணையற்ற அன்பின் திறனைப் பட்டினத்தடிகளார் அருளிய திருவிடைமருதூர் மும்மணிக்கோவையின் வாயிலாகவே, நாம் தெரிந்து கொள்கின்றோம்.

முடிவுரை :

இதுபோன்ற எத்தனையோ பல சுவைமிகு செய்திகளையும், அரும்பெரும் கருத்துக்களையும் பட்டினத்தடிகளார், தாம் அருளிச் செய்த திருவிடைமருதூர் மும்மணிக்கோவையின்கண், கற்பவர் உள்ளங்களைக் கொள்ளைகொள்ளும் வகையில், சொற்பொருள் நலங்கள் துதையப் பாடியருளியிருக்கின்றார். அவைகள் அனைத்தையும் ஒவ்வொருவரும் பல்கால் பயின்று சுவைத்து மகிழ்தல் வேண்டுமென்றி, முற்ற முடிய எடுத்து மொழிதல் என்பது இயலாத தொன்றாகும். ''உணர்ச்சி வாயில் உணர்வோர் வலித்தே''.

---

## திரு.வி.கவின் சிறந்த அறிவுரை

''பழந்தமிழ் நூல்களை ஆராய்ந்தால், அவைகளில் இரண்டு செம்பொருள்கள் பொலிகின்றன. அவை இரண்டும் தமிழ்த் தாயின் நுரையீரல்கள். அவை என்ன? உங்களுக்கு யான் சொல்லவும் வேண்டுமோ? ஒன்று, புறம் முழங்கும் வீரம்; மற்றொன்று, அகம் ஒலிக்குங் காதல். தமிழ்க் காதல் வீரத்தை எழுப்பியே திரும். இந்நாளில் தமிழ்க் காதல் ஏட்டில் உறங்கிக் கிடக்கிறது; ஏட்டில் உள்ளதைக் காதல் காதல் என்று நெட்டுருச் செய்தால்விளையுமோ? காதல் இரத்தத்தில் ஊறல் வேண்டும். அப்பொழுதே அதிலிருந்து வீரம் எழும். 'நாமார்க்குங் குடியல்லோம் நமனை அஞ்சோம்' எனவும், 'ஈனர் கட்கெளியேனலேன் திருவாலவாய் அரன் நிற்கவே' எனவும் வரும் வீர மொழிகள், எங்கே இருந்து எழுந்தன? காதலிலிருந்தே எழுந்தன. அப்பரும் சம்பந்தரும் கடவுளிடத்தில் காதல் கொண்டனர். அக் காதலினின்றும் வீரம் கிளம்புதல் இயல்பே. பாரதியார் 'அச்சமில்லை அச்சமில்லை' என்று பாடினார். இது நாட்டுக் காதலினின்றும் பிறந்த வீரம். தோழர்களே! நீங்கள் புற நூல் படித்தவர்கள்; அக நூல் படித்தவர்கள்; தமிழ்க் காதல் கொள்ளுங்கள்; தமிழ் வீரம் தானே வீறும்''.

—திரு.வி.க. சொற்பொழிவு.

# திரு.வி.க.வும், திருஞானசம்பந்தரும்

''செந்தமிழ்த் தென்றல்''

## திரு. வி. கலியாணசுந்தரனார்

(வாழ்க்கைக் குறிப்புகள்)

'' திருப்பாதிரிப்புலியூரில் ஞானியார் சுவாமிகள் முயற்சியால், சைவசித்தாந்த மகா சமாசத்தின் சார்பில், 1929-ஆம் ஆண்டில், சைவர் மகாநாடொன்று கூடியது. அது மறைமலை அடிகள் தலைமையில் நடைபெற்றது. தென்னாட்டுச் சைவக் குழாங்கள் அம்மகாநாட்டில் மலிந்தன. மகாநாடு ஆறுநாள் சிறப்பாக நடந்தது. நிகழ்ச்சி முறைகள் பல, தென்னாட்டுச் சரித்திரத்தில் குறிக்கத்தக்கன. இறுதி நாள் மாலையில், திருஞானசம்பந்தரைப் பற்றி யான் பேசப் புகுந்தேன். கூட்டம் பெருகியது. பள்ளியில் இடம் போதவில்லை. பெருங்கூட்டம் வெளியே திரண்டது. யான் நீல வானத்தின் கீழ்ப் பேசலானேன்.

என் வாழ்நாளில் யான் பேசிய பேச்சுக்களில் நினைவூட்டிக் கொள்ளத்தக்கனவற்றுள், அன்றைய பாதிரிப்புலியூர்ப் பேச்சும்ஒன்று. என் பேச்சின் மாண்பை, இங்கே யான் எப்படிப் பேசுவேன்! தமிழ்க்குழவி - ஞானசம்பந்தம்- என் நாவில் நிலவியது; அமைதிக் கூட்டத்தில் பொலிந்தது; தலைமை வகித்த அடிகளிடம் தவழ்ந்தது. எல்லாம் ஞானசம்பந்தமாகவே திகழ்ந்தன. அடிகள் ஞானசம்பந்தரைத் தமது ஆருயிர்க் குருவாகக் கொண்டவர்; அவர் தமிழில் மூழ்கியவர். அத்தகைய உள்ளம் என் பேச்சில் எளிதில் திளைத்தது. அடிகள் கண்ணீர் மல்க எழுந்தார். முடிவுரை கூறினாரில்லை. மறைமலையின் மனம் என்மீது படிந்தது. என்னைப் புகழும் அளவில் முடிவுரை நின்றது. புகழ்ச்சி தெய்விகம் வரை சென்றது. அப்புகழுரையின் ஆவி, அணித்தே என் தலைமையில் காஞ்சியில் நடைபெற்ற, காஞ்சிபுரம், ஞானியார் அடிகள் சங்க ஆண்டு விழாவில், சங்கத்தார் எனக்களித்த நன்மொழித்தாளில் எதிரொலி புரிந்தது !

''.....அறிஞர்களால் தமிழ்க் கடலெனப் போற்றப்படும் மறைமலையடிகள் தலைமை பூண்ட, திருப்பாதிரிப்புலியூர்ச்சைவர் மகாநாட்டில், சென்ற ஞாயிறன்று, திருஞானசம்பந்தர் பெருமை பற்றி, ஒன்றரை மணி நேரம் வரை தாங்கள் நிகழ்த்திய, அறிவும் ஆற்றலும் உண்மையுஞ் செறிந்த விரிவுரையைக் கேட்ட அவ்வடிகளார் தாமே, தம்மையே தாம் மறந்தவர்களாகி, வியந்து மகிழ்ந்து உணர்ச்சிமேலிட்டு, ''நமது ஆண்டவன் ஆளுடைய பிள்ளையாரின் மூலமாகவே இறைவனைக் காணல் வேண்டும் என்ற உண்மையை, அறிவாலும் அனுபவத்தாலும் மிகத் திறம்பட அழகமையப் பொருத்திக் காட்டி, நம்மனைவர் நெஞ்சையெல்லாம் நீராய் உருக்கிய திருவாளர் - திரு. வி. கலியாண சுந்தர முதலியார்க்கு, நாம் இப்பிறவியில் மட்டுமேயல்லாமல், எப்பிறவியிலும் நன்றிக் கடப்பாடு உடையோமாய் இருத்தல் வேண்டும். திருஞான சம்பந்தர் வாயிலாகவே, கடவுட் காட்சி உண்மையை நம்மனோர் காண்டல் வேண்டும் என்று எடுத்துரைத்த இவ்வறிஞர் பெருந்தகையை, நாம் தெய்வமாகக் கொள்வோமாக!'' என்று மிகவும் பரவசப்பட்டுப் பாராட்டிப் புகழ்ந்து போற்றி உரைத்தார் என்றால், ஏழையேங்கள் தங்களை எம்மொழியினால் போற்றிப் புகழ்ந்துரைப்போம்?''

திருஞானசம்பந்தர், இற்றைக்குச்சற்றேறத்தாழ 1300 ஆண்டுகளுக்கு முன்பாகவே, ஒரு பெரும் தமிழ்இயக்கம் - 'திருநெறிய தமிழ் இயக்கம்'- தோற்றுவித்தவர் என்பதும்; மூலையிற் கிடந்த தமிழையும் சமயத்தையும் மக்கட் சமுதாய முற்றத்திற்கு வெளிக் கொணர்ந்து அறிமுகப்படுத்தி வைத்த சாலப்பெரியவர், தவத்தின் தலைவர் என்பதும் ; தமிழ்நாட்டின் மூலைமுடுக்கர்தோறும், எங்கணும் சென்று, பல்லாயிரக்கணக்கான மக்கள் தம்மைத் தொடர்ந்து, பின்பற்றி வர, நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பித் தமிழ் முழக்கம் செய்து, தமிழுக்கும் சமயத்திற்கும் சிறந்ததொரு புத்துயிர்ப்பும் மறுமலர்ச்சியும் ஏற்படுத்திய, ஆற்றல் சான்ற தமிழ்ப் பெரு வீரத் தலைவர் என்பதும்; அவர் பிற சமயத்தவர்கள் போல, பெண்மையையும் இயற்கையினையும் இகழ்ந்து புறக்கணிக்காமல், பெண்ணின் பெருமையும், இயற்கை எழில் இன்பமும் செழிக்கப் பெருந் தொண்டு புரிந்தவர் என்பதும்; அவர் சமண் சமயத்தை அழிக்கப் போந்தவரல்லர் என்பதும்; திகம்பர சமணத்தில் இடைநாளில் நுழைந்த சில மாசுகளைக் களைந்து தூய்மைப் படுத்துதற்பொருட்டே அவர் முயன்றனர் என்பதும்; அவர் அருளிய நெறி சுவேதாம்பர சமணக் கொள்கைக்குப் பெரிதும் அரண்செய்வ தென்பதும்; பழைய சமணமும் சைவமும் ஒன்றே என்பதும்; திருஞானசம்பந்தர் ஒரு

பெரும் சமுதாயப் புரட்சிச் சீர்திருத்த முற்போக்கு நெறித் தலைவர் என்பதும்; இன்ன பிறவும் எனது உரையில் விளக்கப்பட்டன. அவ் விளக்கம் இன்றைய சைவ உலகில் இனியதொரு நல்ல புரட்சி யுணர்வினை நிகழ்த்தி வருகின்றது.

ஞானசம்பந்தரை ''முத்தமிழ் விரகர்'' என்று நாம் போற்றுகிறோம்; போற்றும் அளவில் நின்றுவிடுகிறோம். அவரது முத்தமிழ், வாழ்க்கையில் முகிழ்க்குமாறு நாம் நடக்கின்றோமா? இல்லை என்றே சொல்வேன். புலவர்கள் சம்பந்தரின் தமிழை இயலளவில் நோக்கி விடுகிறார்கள்; இசைத் தமிழ் மீதும், நாடகத் தமிழ் மீதும் கவலை செலுத்துகிறார்களில்லை. இசையும் நாடகமும் ஞானசம்பந்தர் பாட்டிலுண்டா? என்று, சிலர் ஐயுறும் நிலையும் நேர்ந்துள்ளது.

ஞானசம்பந்தர் தமிழ்ப் பாடல்களெல்லாம், இறைவனைக் குறிக்கொண்டவை. அவரது தமிழ்ப்பாட்டு ஆகிய கோயிலில் நுழைந்து பார்த்தால், இறைவனின் மூன்று நிலைகள் இனிது விளங்கும். ஒன்று இறைவனது வாக்கு மனங் கடந்த நிலை; மற்றொன்று அவன் இயற்கையை உடலாகக் கொண்டநிலை; இன்னொன்று அவனது ஓவிய நிலை. சம்பந்தரின் திருப்பாட்டுக்களில் ஒவ்வொன்று காட்டுகின்றேன்:

'இன்னவுரு இன்னநிறம் என்றறிவ
தேல் அரிது; நீதிபலவும்
தன்னவுரு வாமென மிகுத்ததவன்'

இஃது இறைவனின் வாக்கு மனங் கடந்தநிலை.

'பண்ணும்பதம் ஏழும்பல வோசைத்தமி ழவையும்
உண்ணின்றதோர் சுவையும் உறுதாளத்தொலி
பலவும்
மண்ணும்புனல் உயிரும்வரு காற்றும்சுடர் மூன்றும்
விண்ணும் முழு தானானிடம் வீழிம்மிழ லையே'

இஃது இறைவனின் இயற்கை நிலை.

'பிறையும்புனலுஞ் சடைமேலுடையார்
பறைபோல் விழிகட்பேய்
உறையும்மயான மிடமாவுடையார்
உலகர்தலைமகன்
அறையும்மலர் கொண் டடியார் பரவி
ஆடல்பாடல்செய்
பறையுஞ்சங்கும் பலியும் ஓவாப்
பழனந கராரே'

இஃது இறைவனின் ஓவிய நிலை.

சம்பந்தர் பாடல்களிலுள்ள இம்மூன்று நிலைகளில் முதலாவது ஆங்கொன்று ஈங்கொன்றாயிருக்கும்; இரண்டாவது சிறிது பெருகியிருக்கும்; மூன்றாவது எங்கும் மலிந்திருக்கும். ஏன்? சம்பந்தர் காலநிலையும், அவர் உயிர்கள் மேல் கொண்ட கருணையும், அவரை அவ்வாறு ஓதச் செய்தன என்று எனக்குத் தோன்றுகிறது.

முதல் நிலையை உன்னிப் பார்ப்போம். ஏதேனும் நெஞ்சில் உறுகிறதா? நிறம் உரு இல்லாததை எப்படி நினைப்பது? நீதியை எப்படி நினைப்பது?

இரண்டாவது ஒருவாறு உள்ளத்தில் தங்கும்.

மூன்றாவதே உள்ளத்தில் நன்றாகப் படியும்.

மூன்றாவதை உள்ளம் நினைந்துநினைந்து பண்படப்பட இரண்டாவது தெளிவாகும். இரண்டாவதை உன்ன உன்ன அது முதலாவதை உணர்த்தும். அடிப்படை மூன்றாவதே. அதை விடுத்துமுதலாவதை நாடுவது, முடவன் கொம்புத் தேனுக்கு ஆசைப்பட்ட கதையாக முடியும்.

கங்கை மதிச் சடை முடியும், முக்கண்ணும், நீலகண்டமும், மான் மழுக்கையும், பாம்பணியும், எடுத்த பொற்பாதமும், ஊன்றிய பாதமும், எப்படி நெஞ்சிற் படியுமென்பதை விளக்க வேண்டுவதில்லை.

மனத்தில் நன்கு படியவல்ல ஓவியம் கல்லில் அமையும்; சொல்லில் அமையும்; மற்றுமொன்றிலும் அமையும். அஃது எது? அஃது ஆடல். அவ்வாடலுடன் பாடலுஞ் சேர்ந்தால் புலன்களில் சிவமன்றோ விளங்கும்? ஆடலும் பாடலும் மலியச் சம்பந்தர் இயல் அமைத்தமை சிந்திக்கத்தக்கது. அதனால்தான், சம்பந்தர் ''முத்தமிழ் விரகர்'' என்று போற்றப் பட்டார்! ஞானசம்பந்தரின் தமிழ் அமிழ்தைப் பருகுங்கள்!

அகன்அமர்ந்த அன்பினராய், அறுபகைசெற்று,
ஐம்புலனும் அடக்கி, ஞானம்
புகலுடையோர் தம்உள்ளப் புண்டரிகத்து
உள்ளிருக்கும் புராணர் கோயில்,
தகவுடைநீர் மணித்தலத்துச் சங்குள
வர்க்கம் திகழச் சலசத் தீயுள்,
மிகவுடைய புன்குமலர்ப் பொரி அட்ட,
மணஞ் செய்யும் மிழலை ஆமே!

ஏரிசையும் வடவாலின் கீழ்இருந்து, அங்கு
ஈர் இருவர்க்கு இரங்கி நின்று,
நேரியநான் மறைப் பொருளை உரைத்து, ஒளிசேர்
நெறியளித்தோன் நின்ற கோயில்,
பார்இசையும் பண்டிதர்கள் பன்னாளும்
பயின்று ஓதும் ஓசை கேட்டு,
வேரிமலி பொழிற்கிள்ளை வேதங்கள்
பொருள் சொல்லும் மிழலை ஆமே! (2)

உரைசேரும் எண்பத்து நான்கு நூறு
ஆயிரமாம் யோனி பேதம்,
நிரைசேரப் படைத்து, அவற்றின் உயிர்க்குயிராய்
அங்கங்கே நின்றான் கோயில்;
வரை சேரும் முகில் முழவ, மயில்கள் பல
நடம் ஆட, வண்டு பாட,
விரைசேர்பொன் இதழிதர, மென்காந்தள்
கைஏற்கும் மிழலை ஆமே! (3)

புலன் ஐந்தும் பொறிகலங்கி, நெறிமயங்கி,
அறிவு அழிந்திட்டு, ஐம்மேல் உந்தி,
அலமந்த போது ஆக, அஞ்சேல் என்று
அருள்செய்வான் அமரும் கோயில்,
வலம்வந்த மடவார்கள் நடமாட,
முழவு அதிர, மழை என்று அஞ்சிச்
சிலமந்தி அலமந்து மரம் ஏறி,
முகில் பார்க்கும் திருவை யாறே! (4)

—திருஞானசம்பந்தர்—தேவாரம்.

(முற்றொடர்ச்சி)

# திருமந்திர யோகம்

'கவியோகி' 'மகரிஷி'

தவத்திரு சுத்தானந்த பாரதியார் அவர்கள், சிவகங்கை

சிவ ஞானநிலை, மிக்க நல்லது. நானே கடவுள், என் காலில் எல்லாரும் விழுவதே கதிமோட்சம் என்பது நல்லதன்று. பசு-பதி வணக்கமே செய்க.

தானென்றிவ னென்றி ரண்டாகும் தத்துவம்
தானென்ற வனென்றி ரண்டுந் தனற் கண்டு
தானென்ற பூவை அவனடி சாத்தினால்,
நானன்றவ னென்கை நல்லதொன் றன்றே

மனவழி திரிவதை மாற்றி, வைத்தது வைத்தபடி உள்ளே கலையிலிருந்து நிச்சய ஞானத்தால் சிவனைச் சிவமாக்கி அச்சங் கெடுத்து, ஆண்டு கொள்பவன் ஞானகுருபர னான பரமனே. காணாக்காட்சி, கேளாக்கேள்வி, கோணாப் போகம், கூடாக்கூட்டம், நாணாத நாணம், நாதாந்த போதம் எல்லாம் காணாய் என்று குருபரன் நன்கு காட்டுகிறான். நான் என்று அகங்கரிக்கும் என்னை, அவன் சிவன் முன் நாணிக் குனியச் செய்கிறான். மன மௌனம் வந்த நிலையிலேதான் இந்த முத்தி யும் சித்தியும் கைகூடும். அப்போதே ஐம் மொழி, ஐங்கருமம், எல்லாம் விளங்கும். இந் நிலை பெறத் துறவு அவசியம் வேண்டும்.

துறவிக்குச் சிறந்த உதாரணம் சிவபெரு மானே. அவன் எல்லா உயிர்களுக்கும் அறந் தரும் இறைவன்; அருளாளன்; எல்லா இன்பங் களும் தருபவன்; உலகெல்லாம் அவன் உறை யுள்; அவன் பிறப்பிறப்பற்ற நித்தியன்; பந்த மற்ற அனாதிமுத்தன். இவ்வளவு பெருமை யுள்ள அவன் காட்டகம் உறைகிறான்; பிச்சை யுண்கிறான்; அவன் பெண்ணை வெறுக்க வில்லை; மங்கைபாகனாக விளங்குகிறான்; அவன் சிவகாமிநேசன்; ஆனால் காமியல்லன், காமாரி. காமனை எரித்த நெற்றிக்கண்ணன். தன்னையே நம்பி அனைத்தையுந் துறந்தவரை அவன் பிறவி தவிர்க்கிறான்; அவன் அன்பர் பித்தன். அவன் பிறப்பிலி, யாரும் இலாதான், அவன் உறைவது காட்டகம், உண்பதுபிச்சை;

துறவனும் கண்டீர், துறந்தவர் தம்மைப்
பிறவி யறுத்திடும் பித்தன் கண்டீரே

இறப்பும் பிறப்பும் இருமையும் நீங்கிய துறவியான சோதி சிவனை மறவாது நினைத்து வழுத்துவாருக்கு துறவு நிலையை அவனே காட்டுவான். துறவு என்பது எளிதன்று. மொட்டை போட்டுக் காவியணிந்து கப்பறை தாங்கி பிச்சையெடுப்பவரெல்லாம் துறவி களல்லர். பிறப்பிறப்பென்னும் பெரும் வினைச் சுமையால் ஆன்மா தன்னையும் இறைவனை யும் மறந்து ஆணவம் கன்மம் மாயையாகிய மலவிருளிற் புதைந்து திணறுகிறது. அந்த இருள் நீங்க, மனமாயம் மறைந்து, சிவனருள் சேரும் பருவத்திலேதான் துறவு கைகூடும்; அத் துறவால் சிவஜோதிச் சுடரொளி துலங்கும்.

பிறந்தும் இறந்தும் பல் பேதைமையாலே
மறந்தும் மலஇருள் நீங்க மறைந்து
சிறந்த சிவனருள் சேர்பரு வத்துத்
துறந்த வுயிர்க்குச் சுடரொளி யாமே

துறவுநெறி மிகக் கடினமானது; அதில் நெருஞ்சில் முட்களுண்டு. நெறி வழுவினால் முள் தைக்கும். நெறி வழுவாது நடந்தாலே முள்ளைத் தப்பலாம்.

நெறிவழு வாதியங்க வல்லார்க்கு
நெறியில் நெருஞ்சில் முட்பாய கிலாவே

காமப்புலி மனிதனைத் துரத்திப் பிடிக் கிறது; பெண்ணாசை மனதைப் பேய்போலப் பற்றுகிறது. உழவன் உழுகிறான்; வானம் வழங்குகிறது; உழவுச் சேற்றில் குவளை பூக் கிறது. அதை உழவன் உழத்தியர் கண்போலும் என்று மயங்கி உழுவதை விட்டுவிடுகிறான். அதுபோல் துறவி மனத்தை அன்புறுதியால் ஞான உழவு செய்யும்போது காமம் மலர்கிறது; பெண்ணிடம் மனம் செல்கிறது; பிறகுதவத்தை விட்டுவிடுகிறான்.

உழவன் உழஉழ வானம் வழங்க
உழவன் உழவினிற் பூத்த குவளை
உழவன் உழத்தியர் கண்ணொக்கும் என்றிட்டு
உழவன் அதனை உழவொழிந் தானே

காமம், வெகுளி, மயக்கம், உலகாசை எல்லாம் முற்றும் துறந்தவர்க்கே இறைவன் இன்ப நிலையருள்வான். மனப்பாம்பு ஐந்து புலன்களான படமெடுத்துத் தனுகரண புவன போகமான முட்புதரில், பொருந்தி, ஆண் பெண்ணாகிய இரண்டு உடல்களால் காம விளையாட்டுச் செய்கிறது. காமம் வெகுளி மயக்கங்களைத் தவத்தினால் வெல்ல வேண் டும். தவம் என்பது புலன் மன அடக்கமே. மனம் ஒடுங்கிய இதயநிலை பெற்ற உத்தமர் உள்ளம் எதற்கும்எமனுக்கும் நடுங்குவதில்லை. என்றும் சிவசேதனத்தில் வாழும் அதற்கு நமனும் இல்லை, இடும்பையுமில்லை; இரவு பகலுமில்லை; இருவிகாரமும் இல்லை; இருவி காரப் பயனும் இல்லை-பற்று விட்டவர் நடு நிலையில் உள்ளபடி இருப்பார்.

ஒடுங்கி நிலைபெற்ற உத்தமர் உள்ளம்
நடுங்குவ தில்லை நமனு மங்கில்லை
இடும்பை யுமில்லை இராப் பகலில்லை
படும் பயனல்லை பற்றுவிட் டோர்க்கே

திருவருள் பெற்றவருக்கே தவத்தின் இயல்பு தெரியும். துறவி தவசி என்று சிலர் பகட்டு வேடம் போட்டு, மக்களிடம் பிச்சை வாங்கித் தாமே மேலோர் எனச் சிறப்பாகப் பேசிக் கொண்டு, தமது சுகபோகங்களுக்கு வேண்டிய செல்வம் பெறுவார்கள். இவர்கள் தவப் பயன் பெறார். மறவாத அன்புடனும் உறுதியுடனும், மாதவம் செய்பவரே பிறவிப் பிணியொழியும் பெரும் பயனைப் பெறுவர்; மற்றவர் பிறப்பின் வகையறியார்; வினைப் பிறவியில் உழல்வார். ஒரே உறுதியாயிருந்து வருந்தித் தவம் செய்யும் பெருந்தன்மையாள ரைப் பேதிக்கவும் சோதிக்கவும், இந்திராதி தேவர் வந்தாலும் நடவாது. அத்தவசிகளிடம் சிவன் இருக்கிறான். அவர் சிந்தை, திருந்தி மாயவலைப்படாது அருள்வழியே நிற்கும். சிவ பெருமான் உயிர்க்குயிராய்க் கரந்திருந்தாலும், உணர்வாக வெளிப்படுகிறான்; கண்ணுக்குத் தோன்றாமல் அன்பருக்குத் தோன்றாத்துணை யாக நிற்கிறான். அவன் பரந்த சடையன். பசும் பொன் நிறத்தன், வெண்மதியன்; அவன் விரைந்து தொழப்படும் விமலன்; மற்றோரெல் லாம் தொழுவோர், அவன் ஒருவனே தொழப் படுவோன்.

உலகில் அரசரும் அமைச்சரும் யானைப் படை குதிரைப் படைகளுடன் பகையெழுப் பிப் போர் செய்தனர். அதனால் எத்தனை யோ அரசர் பட்டொழிந்தனர். இந்த மண் ணாசையை வெறுத்து, ஞானத்தில் அமைதியா யிருந்த தவத்தினரே அமைதி சேர்ந்தார். சாத் திரம் படிப்பதால் தவம் வராது; உள்ளடங்கித் தன்னைப் பார்ப்பதே, பசுமரத்தாணிபோல் ஏகாக்கரப்பட்டிருத்தலே பிறவியை விரட்டி யடிக்கும் தவமாகும்.

சாத்திரம் ஓதும் சதுர்களைவிட்டு நீர்,
மாத்திரைப்போது மறித்துள்ளே நோக்குமின்
பார்த்தவப் பார்வை பசுமரத் தாணிபோல்
ஆர்த்த பிறவி அகலவிட் டோடுமே

ஞான சமாதி கூடி நிலைத்தலே சன் மார்க்கம்; அந்நிலை வருமட்டும் தவம் வேண் டும். உடலில் சுத்தான்ம நிலையமான தன் னிடம் இறைவனைக் கண்டு சமாதி கூடினால் ஓத வேண்டா. உயிர்க்குயிரான இறைவனுள் உற்றுச் சமாதியில் நிலைத்தால் வேறு விருப்பம் வேண்டா. சாதலும் வேண்டா, சூட்சுமமும் உள்ளடங்கி ஊன்றிய சமாதியே. அது கைகூடி னால் காயசுத்தி, நாடிசுத்தி, சத்தங்கேட்டல், முறையிட்டுக் கத்துதல், சித்த சோதனம்— இவை தேவையில்லை. மனம் அமைதியாகிப் பற்றற்றுக் கருத்தூன்றிச் சமாதியில் லயித்தால் போதும். பண்டை வினையின் விளைவே என்று அறிபவர் வினைப் பிறவி தீர, மெய்த்தவம் செய்வார், மெய்யுரை சொல்வார், மெய்யறஞ் செய்வார் - அவர்கள் விண்ணிலும் மண்ணிலும் மிக்கவரர்வார். தவஞ் செய்தே மூலாதி முனிவர் சிவகதி சேர்ந்தார். மனதிடை நின்ற மதிவாள் உருவி, பந்ததொந்தமான இரு விகாரங்களைச் சிதைத்து, ஐம்புலன்களும் உலக விவகாரங் களிற் போகாமல் தடுத்தால், தவத்தினால் ஆறு முகமாக ஒளிரும் தன் சுத்தான்ம ஜோதியைக் காணலாம். உயிரொத்து நெருங்கி நிற்கும் இறைவனை இசைப்பதும், பணிந்து வணங்குவ தும் பக்தியைப் பெருக்கும். முனியொழுக்கம் முத்தி தரும்; சாத்வீகமான செயலே தவத்தைத் தரும். இலையும் பூவும் அர்ச்சனை செய்து மலரைக் கண்ணில் ஒற்றிக் கொண்டும், அன்புக் கண்ணீர் காணேன். மூளையறிவால் எழுதிய நூலைக் கண்டு உள்ளம் தளர்ந்தேன். என் சிரத்தில் தியானத்தால் தொட்டுக் கண்டபிறகே தவத்தைக் கண்டேன். ஒரு மனத்துடன் தவ சாதனம்செய்தவருக்கே இறைவன் அருளுவான். ஒருவன் தாகம்தணிய ஆற்றை நோக்கினான்; அங்கே முதலை வாயைப் பிளந்து கொண்டி ருந்தது; அதற்குப் பயந்து திரும்பினான், இங்கே ஒரு கரடி எதிர்ப்பட்டது. அவனது நிலை எப்படியிருக்கும்? அதுபோலவே நன் னூல்களை அறியாது, நோற்றுத் தவஞ்செய் யாமல், சும்மா சோற்றாண்டிகளாகத் திரிந்து ஆத்மதாகம் தீர நினைப்பவர் செயலுமாம். அவர்களை உலக மாயம் இருபுறமும் சூழும்.

ஆற்றில் கிடந்த முதலைகண்டஞ்சிப் போய்
ஈற்றுக் கரடிப் கெதிர்ப்பட்ட தன்னொக்கும்
நோற்றுத் தவஞ்செய்யார் நூலறி யாதவர்
சோற்றுக்கு நின்று சுழல்கின்ற வாறே!

சிவானந்த முனிவர் உறவால் சாதனம் செய்து, சித்தம் சிவமாதலே தவசித்தியாகும். இறைவனருள் இருந்தால் தவம் பலிக்கும். நல்ல செல்வம் ஞானம் பெருந்தன்மை பெரிய தெய்வநிலை எல்லாங் கைகூடும். அருட்சித்தி பெற்ற பரம ஞானிகள் அறம் பாவம் என்ற இருதளைகளையும் அறுத்து, இறைவன் இருக் கும் இதய வீட்டிலே அவனுடன் கலந்திருப் பார்கள். சிவனருளாலே சிலர் தேவராவார். சிலர் தெய்வம் போல்வார். சிவனருளால் வினைநீங்கும்; சிவனருள் எய்தினால் சிவ போக பதவி கிடைக்கும்.

புண்ணியன் எந்தை புனிதன் இணையடி
நண்ணி விளக்கென ஞானம் விளைந்தது;
மண்ணவ ராவதும் வானவ ராவதும்
அண்ணல் இறைவன் அருள்பெற்ற போதே

தேகம் ஒரு தேர். மனம் அதன் பாகன்; அவன் கை சேர்க்கவே மாயத்தேர் ஏறி ஆன்மா மயங்குகிறது; மயக்கப் பொருளை உணர்ந்து விலக்கி பவநேயமின்றிச் சிவநேயத்தில் முன் னேறி சுத்த நிமலனருள் பெற்றால், ஞானிகள் கூட்டத்தில் சேரலாம்; சீவன் சிவன் மயமாக லாம். இவன் அவனாகலாம்.

காயத்தேரேறி மனப் பாகன் கைகூட்ட
மாயத் தேரேறி மயங்கும் அவையுணர்
நேயத் தேரேறி நிமலன் அருள்பெற்றால்
ஆயத் தேரேறி அவ னிவனாமே!

ஆன்மா மாயவுலகப் பொருளைக் காட்டி மனதையே பற்றினால் மாசுறும்; சிவநேயமே பற்றினால் தேசுறும், சிவமயமாகும்.

**...தொடரும்.**

# கோச்செங்கட் சோழனின் கோணேசர் பெருங்கோயில்

திரு. டாக்டர் இரா. கலைக்கோவன், திருச்சி.

சங்க காலந்தொட்டே கட்டடக்கலையில் தமிழகம் சிறப்புற்று விளங்கியது. இதற்கு ஏராளமான சான்றுகளைச் சங்க இலக்கியங்களில் பரக்கக் காணலாம். நெடுநெல்வாடையைச் 'சிற்பப்பாட்டு' என்றே அழைக்கும்படி அந்நூலில் கட்டடக்கலை நுணுக்கங்களும், சிற்பக்கலை விளக்கங்களும் நிறைந்திருக்கின்றன. தேர் போன்ற அமைப்பிலும், வேறுசில எளிய அமைப்பு முறைகளிலும் கோயில்கள் கட்டப்பட்டு வந்த முறையை மாற்றிக் கோயிற் கட்டடக்கலையில் ஒரு புதுமையான மாறுலைத் தோற்றுவித்த பெருவேந்தன் கி.பி.ஐந்தாம் நூற்றாண்டில் வாழ்ந்ததாகக் கருதப்படும் கோச்செங்கட்சோழனாவான். இம்மன்னன் எடுப்பித்ததாகத் திருமங்கையாழ்வாரால் கூறப்படும் எழுபது மாடக்கோயில்களுள் இன்று எஞ்சி நிற்பவை வெகு சிலவே. அவற்றுள் ஒன்றுதான் அருள்மிகு கோணேசர் பெருங்கோயில். இக்கோயில் கும்பகோணத்திலிருந்து சுமார் பதினைந்து கிலோ மீட்டர் தொலைவில் கும்பகோணம், திருவாரூர்ப் பெருவழியில் நன்னிலம் வட்டத்திலுள்ள குடவாசல் என்னும் குடவாயிலில் அமைந்துள்ளது. இக்கோயிலின் இறைவனைச் சம்பந்தர் இரண்டு பதிகங்களால் பாடியுள்ளார். அவற்றுள்,

''திகழும்திரு மாலொடு நான்முகனும்
புகழ்பெரு மான்அடி யார்புகல
மகிழும்பெரு மான்குட வாயில்மன்னி
நிகழும்பெருங் கோயில் நிலா யவனே''

என்ற பதிகத்தில் இக்கோயில் இறைவனைப் பெருங்கோயில் உறைபவனாகக் காட்டுகிறார். அப்பர் அடிகளும் தன் திருத்தாண்டகத்தில் 'மாடம் நீடு குடவாயில் 'என்றே இக்கோயிலைக் குறிப்பிடுகிறார். இக்கோயில் அவர்கள் காலத்தில் இருந்தே மாடக்கோயில் அமைப்பு உடையதாய் இலங்கி வருகிறதென்பதற்கு இவையே தக்க சான்றுகளாகும். இக்கோயில் சம்பந்தர் காலத்தில் சீரும் சிறப்புடன் விளங்கியதென்பதற்கு,

''வரையார் மதில் சூழ்குட வாயின்மன்னும்
வரையார் பெருங் கோயின் மகிழ்ந்தவனே''

என்ற வரிகள் எடுத்துக்காட்டாகும்.

நன்னிலம் மதுவனேசுவரர் மாடக்கோயிலைப் போன்ற ஒருநிலைக்கோபுரமே நுழைவாயிலாய் அமைந்துள்ளது. இதனுள் நுழைந்ததும் இடதுபக்கத்தில் இறைவியின் தனிக் கோயில் தரைமட்டக் கோயிலாய் அமைந்துள்ளது. முன்மண்டபத்தில் சோமாற்கந்தர் செப்புத்திருமேனியராய்க் காணப்படுகிறார். உள் மண்டபத்து வாயிலைக் காவற்பெண்டுகள் காவல் செய்கின்றனர். உள்மண்டபத்துள் ஆடவல்லானும், சிவகாமி அன்னையும் காட்சி தருகின்றனர். கருவறையில் இறைவி மூலவராயும் கருவறைக்கு முன்னுள்ள நடையில் செப்புத் திருமேனியராயும் காட்சி தருகிறார். பெரிய நாயகி என்று மக்களால் போற்றி வணங்கப்படும் அன்னையுயின் அருட்கோலம் அழகு மயமானது. இக்கோயிலின் விமானம் சிற்ப வேலைப்பாடுகள் பொருந்திய மூன்றுதள விமானமாகும்.

இறைவியின் கோயிலுக்கு எதிரில் வாகனங்களுக்கான மேடை மண்டபம் ஒன்றும், திருமண மண்டபமொன்றும் உள்ளன.

இறைவன் கோயிலை அடைய இன்னொரு நுழைவாயில், முதல் வாயிலின் எதிரில் அமைந்துள்ளது. இது மூன்றுநிலைக் கோபுர வாயிலாகும். இவ்வாயில் வழி உள்நுழைந்ததும் வெளித் திருச்சுற்று அமைந்துள்ளது. இடப்புறத்தில் கிழக்கு நோக்கிய நிலையில் முருகன், இடும்பன், கலைமகள், யானைத் திருமகள் முதலிய தெய்வங்களுக்கான சுற்றாலைக் கோயில்கள் உள்ளன. வடமேற்கு மூலையில் முருகனுக்கென்று தனக்கோயில் சிறப்புற அமைந்துள்ளது. அருணகிரிநாதரால் பாடப்பெற்ற இத்திருமுருகன்ன் கோயிலுக்கு அருகில் முருகனின் செப்புத் திருமேனிக்கென்று ஒரு சிறு மண்டபம் அமைந்துள்ளது.

வடக்குத் திருச்சுற்றில் இக்கோயிலின் தலமரமான வேர்ப்பலாவும், அதையடுத்து வாழைமரமும் உள்ளன. வடகிழக்கு மூலையில் மதிலையொட்டி ஒன்பான் கோள்களுக்கான திருவுள்ளும், மாடக்கோயிலை ஒட்டிச் சண்டேசுவரர் திருமுன்னும் உள்ளன. கிழக்குத் திருச்சுற்றில் எழுவர் நங்கையர் சிற்பங்கள் தனித் தனியே ,வரிசையாக அமைக்கப்பட்ட நிலையில் காணப்படுகின்றன. இவற்றின் சிற்ப அமைதியைக் கொண்டு, இவை சோழர் காலத்தைச் சார்ந்தவை என்று கருதப்படுகின்றது. தெற்குப் புறத்தில் மாடக் கோயிலின் புறச்சுவரில் கல்வெட்டொன்று காணப்படுகிறது. இதையடுத்துள்ள தெய்வப்புரையில் தென்திசைக் கடவுள் அருள்செய்கிறார். தென்மேற்கு மூலையில் பிள்ளையாருக்கான சுற்றாலைக் கோயிலும், நால்வருக்கான மண்டபமும் காணப்படுகிறது.

மாடக்கோயில் மூன்றுதள அமைப்புடையது. முதல்தளத்தில் ஆடல் வல்லானுக்கான திருமுன் தெற்குப் பார்த்த நிலையில், இரண்டாம் தளத்திற்குச் செல்லும் படிக்கட்டுகளுக்கு அருகில் அமைந்துள்ளது. இங்குள்ள இறைவன் இறைவியின் செப்புத்திருமேனிகள் அழகின் சிகரம். மிகுந்த கலையுணர்வுடனும், அக்கறையுடனும் வளர்க்கப்பட்டிருக்கும் இத்திருமேனிகள் காண்போரைக் கருத்திழக்க வைக்க வல்லன. இறைவனின் திருமேனியின் தாமரைத் தளத்திற்குக் கீழே உள்ள தளத்தில் கி.பி.பத்தாம் நூற்றாண்டு எழுத்தமைதி கொண்ட தமிழ் எழுத்துக்கள் பொறிக்கப்பட்டுள்ளன.

இதைக் குடவாயில் பாலசுப்பிரமணியம் என்னும் ஆய்வாளர் முதன்முதலில் கண்டுபிடித்தார். இதில் 'களக் காடுடையார் மாலைதாழ் மார்பன்' என்று பொறிக்கப்பட்டுள்ளது. களக்காட்டைச் சேர்ந்த மாலைதாழ் மார்பன் என்பவரால், இத்திருமேனி வடிக்கப்பட்டுக் கோயிலுக்குக் கொடையாகத் தரப்பட்டிருக்கலாம் என்று கருதப்படுகிறது. இப்படிமத்தின் பின்னாலும் பிற்காலத்தைச் சேர்ந்த எழுத்துக்கள் காணப்படுகின்றன.

மாடக்கோயிலுக்கான படிக்கட்டுகள் தென்மேற்கு மூலையில் அமைந்துள்ளன. இரண்டு அடுக்குகளாக மொத்தம் பதினெட்டு படிகள் அமைந்துள்ளன. மேலே ஏறிச் சென்றதும் கோயிலின் உள்திருச்சுற்றுள் நுழையலாம். இரண்டாம் தளமான இதில் இறைவன் எழுந்தருளியிருக்கும் கருவறை மேற்கு நோக்கி அமைந்துள்ளது. மேற்குப்புறத்தில் ஒருவாயிலும் தெற்கில் ஒரு வாயிலும் உள்ளன. மேற்கு வாயிலுக்கு இடப்புறத்திலுள்ள உள்திருச்சுற்றில் வடமேற்குமூலையில், கீழ்த்தள ஆடல்வல்லான் திருமுன்னின் செவ்வக விமானம் அமைந்துள்ளது.

மேற்கு நுழைவாயிலில் நுழைந்ததும் முன் மண்டபமும் அதையடுத்து உள்மண்டபமும் உள்ளன. உள்மண்டப வாயிலை வாயிற்காப்போர் காவல் செய்கின்றனர். கருவறையில் இறைவன் இலிங்கத் திருமேனியராய் ஆவுடையார் மீது எழுந்தருளியுள்ளார். விமானம் நிறைந்த வேலைப்பாடுகளுடன் அழகுபட அமைந்துள்ளது. விமானத்தின் தென்புறத்திலுள்ள இரண்டாம் தளத்தில் கற்பிக்கும் நிலையிலும், கிரீவத்தில் வீணையேந்தியவராயும் ஆலமர் அண்ணல் காட்சி தருகிறார். மேற்குப் புறத்தில் திருமாலும், வடக்குப்புறத்தில் நான்முகனும் காட்சி தருகின்றனர். கருவறையின் புறச்சுவர்களில் உள்ள தெய்வப் புரைகளில் தெற்கில் மட்டும் தென்திசைக் கடவுள் காணப்படுகிறார். ஏனைய புரைகள் வெறுமையாக உள்ளன.

இக்கோயிலில் காணப்படும் கல்வெட்டுக்களில் மாடக்கோயிலின் முதல் தளத்தின் தென்புறத்தில் காணப்படும் கல்வெட்டே, இக்கோயிலைப் பற்றிப் பேசும் ஒரே கல்வெட்டாகும். இக்கல்வெட்டு மூன்றாம் குலோத்துங்க சோழனின் பதினைந்தாவது ஆட்சியாண்டில் பொறிக்கப்பட்டுள்ளது. இக்கோயிலின் பெரிய நாச்சியாருக்கு நகைகள் செய்வதற்காகக் குற்றாலம் உடையான் திருச்சிற்றம்பலம் உடையார் எனப்படும் காரானை விழுப்பரையர் என்பவர் பத்து கழஞ்சு பொன் அளித்த செய்தியைத் தரும் இக்கல்வெட்டில், இறைவன் குடவாயில் உடையார் என்று அழைக்கப்படுகிறார். கோயில் பெருந்திருக்கோயில் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இக்கோயிலின் மேற்குப்புற வாயிலில் பிற்காலக் கல்வெட்டொன்று காணப்படுகிறது. இது, செவ்வப்ப நாயக்கர், வையப்ப நாயக்கர் என்பவர்கள் இக்கோயிலில் உள்ள பெரிய நாச்சியாருக்கு நகைகளுக்காகவும், திருவிழாவுக்காகவும் நிலமளித்த செய்தியைத் தருகிறது. இதுபோலவே, இரண்டாம் கோபுரத்தின் தாங்கு தளத்தில் இன்னொரு கல்வெட்டு காணப்படுகிறது. விசயநகர வேந்தனான அச்சுததேவ மகாராயர் காலத்தில் செவ்வப்ப நாயக்கர் இக்கோயில் தம்பிரானார்கட்கு நந்தவனம் வைத்த செய்தி அரைகுறையாகத் தெரிகிறது. இக்கல்வெட்டுக்களைப் பற்றிக் குறிப்பிடும்போது குடவாயில் பாலசுப்பிரமணியன், இக்கல்வெட்டுக்கள் உள்ள கற்கள், பிறிதொரு இடத்தில் இருந்த ,இடிந்த கோயிலொன்றின் கற்களாகும் என்றும், அவற்றை எடுத்து வந்து இக்கோபுரத்தின் தாங்கு தளம் கட்டப்பட்டிருத்தல் வேண்டுமென்றும் கூறுகிறார். இதே குடவாயிலில் இருந்த சமணர் பள்ளியிலிருந்தே இக்கற்கள் கொணரப்பட்டிருக்கலாம் என்பதையும், பல கல்வெட்டுச் செய்திகளைப் படியெடுத்து இணைத்துப் பார்த்ததன் மூலம் அவர் நிறுவ முயன்றுள்ளார். இதை ஏற்றுக் கொள்வது கடினமில்லை. ஏனெனில், இதுபோல் பல கோயில்களில் நடந்திருப்பது கண்கூடு. செந்தலைக் கோயிலில் நியமத்தைச் சேர்ந்த மாகாளத்துப் பிடாரிகோயில் தூண்கள் உள்ளன. திருச்சி காட்டழகிய சிங்கர் கோயிலில் தரையில் பரப்பப்பட்டிருக்கும் கற்களில் பல கல்வெட்டுச் செய்திகள் உள்ளன. இவை திருவரங்கம் கோவிலையடுத்த இடிந்த மண்டபமொன்றின் கற்கள். எனவே, குடவாயில் கோணேசர் ஆலயத்துக் கோபுரக் கட்டுமானத்தில் அவ்வூரைச் சேர்ந்த இடிந்த சமணப் பள்ளியின் கற்களைப் பின்னால் வந்த மன்னர்கள் பயன்படுத்தியிருப்பதில் வியப்போ, விந்தையோ இருக்க முடியாது.

இத்திருக்கோயிலின் சிவாச்சாரியார், ஞானஸ்கந்த குருக்கள் மிகவும் அருமையானவர். அன்பும், பண்பும் நிறைந்தவர். வருபவர்களைச் சிறக்க வரவேற்றுக் கோயில் பற்றிய முழு வரலாறும் சொல்லி மகிழ்விக்கும் இவரது அருங்குணம் போற்றற்குரியது.

கோச்செங்கட்சோழனால் செங்கல் கட்டடமாக எழுப்பப்பட்ட இக்கோயில் பிற்காலத்தில் சோழர்களால் கருங்கல் திருப்பணியாய் மாற்றியமைக்கப்பட்டுள்ளது. ஒரு காலத்தில் இங்கு இருந்த சமணர் பள்ளிக்கு முதற் குலோத்துங்கன், மூன்றாம் குலோத்துங்கன், மூன்றாம் இராசராசன் முதலியோர் கொடைகள் தந்த செய்திகளைக் கல்வெட்டுக்களின் மூலமாகத்தான் கண்டறிந்ததாகப் பாலசுப்பிரமணியன் குறிப்பிடுகிறார்.

அமணர் பள்ளிக்கே முதற்குலோத்துங்கன் உதவியிருக்கும் போது இக்கோயிலை வாளாவிட்டிருப்பான் என்பது பொருத்தமாகாது. எனவே, இக்கோயிலுக்கு முதற் குலோத்துங்கன் காலத்தில் திருப்பணி நடந்திருக்கலாம் என்று துணியலாம். பின்னால் வந்த சோழமன்னர்களும் இக்கோயிலுக்கு உதவியிருக்கின்றனர். நாயக்கர்களும் இக்கோயிலைப் பாதுகாத்துள்ளனர். இத்தகு சிறப்புக்குரிய இக்கோயில் மாடக்கோயில்களுள் தனித்தன்மையுடையதாகும். மேற்கு நோக்கிய நிலையில் இறைவன் அருள்புரியும் மாடக்கோயில் இது ஒன்றுதான் எனில் அது மிகையாகாது.

***

# சமயமும், விஞ்ஞானமும்....

[ ந. ரா. முருகவேள், M.A., M.O.L. ]

சமயத்திற்கும் விஞ்ஞானத்திற்கும் ஏதோ முரண்பாடு இருப்பதுபோல, நம்மிற் பலர் நினைப்பதும் பேசுவதும் உண்டு. விஞ்ஞானம் வளர வளர, சமயமும் சமய நம்பிக்கைகளும் தாமே மறைந்துவிடும் என்றும், ஒரு சிலர் வலியுறுத்திக் கூறுவர். சமயவுணர்வும் நம்பிக்கையும் உடையவர்களைப் பிற்போக்காளர்கள் - குருட்டு நம்பிக்கை கொண்டவர்கள்-எனக் குறிப்பிட்டுச் சிலர் ஏளனமும் செய்யாநிற்பர். மற்றும் சிலர், தமக்குச் சமயஉணர்வும் நம்பிக்கையும் இல்லை என்று சொல்லிக் கொள்ளுதலை, முற்போக்கு நெறியாகவும், நாகரிகப் பாங்காகவும், கடைப்பிடித்தொழுகுதலையும் நாம் காண்கின்றோம்.

ஆனால் உண்மையிலேயே ஆராய்ந்து பார்த்தால், விஞ்ஞானத்திற்கும் சமயத்திற்கும்- அறிவியலுக்கும் அருளியலுக்கும்-இடையே எத்தகைய முரண்பாடும் இருப்பதாகத் தெரியவில்லை. உண்மையிற் சமயமும் விஞ்ஞானமும் தமக்குள் எவ்வகையிலும் மாறுபட்டன அல்ல. விஞ்ஞானம் ஐம்புலன்களுக்குள் அகப்படும் புறப்பொருள்களையும், பருப்பொருள்களையும் ( Phenomena ) மட்டுமே, ஆராய்ந்தறிய முயலுகின்றது; சமயமோ ஐம்புலன்களுக்கு எட்டாமல் அப்பாற்பட்டு விளங்கும் அகப்பொருள்களையும், நுண்பொருள்களையும் ( Noumena ) ஆழ்ந்துணர்ந்து அநுபவிக்க வழிவகுக்கின்றது. இவ்வாற்றால் இரண்டினுடைய எல்லையும், குறிக்கோளும், செயல் முறைகளும், தனித்தனியாக விளங்குதல் காணலாம். ஆதலின் இவையிரண்டிற்கும் எத்தகைய போட்டியோ, பூசலோ, முரண்பாடோ, ஏற்படக் காரணமே இல்லை.

'எங்கே விஞ்ஞானம் செயலிழந்து முடிவுற்று நிற்கின்றதோ, அங்கேயிருந்துதான் சமயம் தொடங்குகிறது' 1. விஞ்ஞானம் என்பது வளர்ந்து கொண்டிருக்கும் ஒரு கலையே; அஃது இன்னும் குழவிப் பருவத்திலேயேஇருந்து வருகின்றது. அதன் வளர்ச்சி முறையிலும், ஆராய்ச்சி நெறியிலும், எத்தனையோ இடையீடுகளும் மாறுபாடுகளும் நேரலாம். ஆதலின் விஞ்ஞானம் சமயத்துக்கு முரண்பட்டதென்று நாம் முடிவு கட்டிவிடுதல் பொருத்தம் ஆகாது. மேலும் 'விஞ்ஞானம் என்பது இயற்கைப் பொருள்களின் இயல்புகளை விளக்கக்கூடுமேயன்றி, அதன் காரணங்களையும் அடிப்படைகளையும் விளக்க வல்லதன்று' 2. விஞ்ஞானம் எனப்படுவது வெறும் அறிவே; ஆனால் சமயமோ, அதன் பயனாகிய சிறந்த அநுபவமாக அமைவது. எனவே சமயமும் விஞ்ஞானமும் தம்முள் ஒன்றை யொன்று தழுவிப் பிணைந்து நிறைவுறுவனவேயன்றி, முரண்படுவன அல்ல என்றுணரலாம். 3

''சமயம் கலவாத விஞ்ஞானம் முடத்தன்மையுடையது; விஞ்ஞானம் கலவாத சமயம் குருட்டுத் தன்மை வாய்ந்தது'' 4 என்பர், ஆல்பெர்ட் ஐன்ஸ்டைன்! ''சமயத்தோடு இயைபில்லாத விஞ்ஞானம் அகந்தைமிக்கது; விஞ்ஞா

---

(1) " Where science ends, there religion begins."

(2) " Science cannot tell the ultimate 'Why' of things and events. Hydrogen and Oxygen combine to form water, but why should they? We all know Newton's Law of inverse square. Science does not tell us why it cannot be the Law of inverse cubes. Natural laws are what they are, but why they are not something else, science does not say."

—*W. C. Dampier Whetham*

(3) " Increasing number of important physicists, astro-physicists, mathematicians, and biologists are now of the opinion that science and religion are not only not at all inimical to each other, but constitute only in their intimate inter-relation a complete picture of the world"

—*Rene Fulop Miller.*

(4) " Religion without science is lame; science without religion is blind ; —*Dr. Albert Einstein.*

னத்தோடு சேராத சமயம் மூடநம்பிக்கை பொருந்தியது'' 5 என்பர், பேரறிஞர் இராதா கிருஷ்ணன்! ''வெறும் அரைகுறை அறிவே நாத்திகம் பேசும்; ஆழ்ந்து நிறைவுற்ற அறிவோ சமய வுணர்வில் தலைப்பட்டுத் தழைத்து நிற்கும்'' 5 எனக் கட்டுரைக்கின்றார், பிரான்சிஸ் பேக்கன்!

''விஞ்ஞானி என்பவன் நாத்திகனாக இருத்தல் இயலாது. இயற்கைப் பொருள்களை ஆராய, ஆராய இறைவனின் அருமை பெருமை கள்விஞ்ஞானிக்குத்தான் நன்கினிது விளங்கும்'' என்பது, விஞ்ஞானப் பேரறிஞர் ஆகிய ஐன்ஸ்டைனின் கூற்று. முதலிற் கடவுளுணர்ச்சி இல்லாமல் இருந்த விஞ்ஞானிகளிற் பலர், பின்னர் நாளடைவில் கடவுளுணர்ச்சி உடையவர்களாக மாறியிருக்கின்றனர்?

விஞ்ஞானத்தின் போக்கு இப்பொழுதெல்லாம் ஒரு திருப்பம் அடைந்து, சமயத்தை நோக்கித் தழுவி இணைய முற்பட்டு வருகின்றது. இதனை ரெனிஃபுலாப் மில்லர் 7 என்னும் அறிஞர், பின்வருமாறு நீதிமன்றத்தின் உருவக முறையில் அழகுற விளக்குகின்றார்.

''அறிவுக்கும் (Reason) நம்பிக்கைக்கும் (Faith), விஞ்ஞானத்திற்கும் சமயத்திற்கும், இடையே ஒரு வழக்கீடு ஏற்பட்டு நிலவி வந்தது. அறிவு வாதியாக அமைய, நம்பிக்கையே பிரதிவாதியாக இருந்தது. அறிவுநலனும் பரந்த மனப்பான்மையும் கொண்ட ஆண் பெண் இருபாலாரும் அடங்கிய நடுவு நிலைக்குழுவினர் அதனை ஆராய்ந்தனர். மில்லிக்கன், எட்டிங்டன், ஜீன்ஸ், வொயிட்ஹெட், ஹால்டேன் போன்ற பேரறிஞர்கள் சான்று கூறினர். அச்சான்றுரைகளை அடிப்படையாகக் கொண்டு பிரதிவாதியாகிய நம்பிக்கையின்மீது கொணரப்பெற்ற வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது. ஆனால் வாதியாகிய அறிவுதான் 'புரட்சிகரமான பிற்போக்கு மனப்பான்மை கொண்டுள்ள உண்மையான குற்றவாளி' என்ற ஐறவு நேர்ந்துளது. ஆயினும் தன் குற்றத்தை யுணர்ந்துகொண்டு, மெய்யாகவே திருந்திவிடக் கூடிய நிலையில் மாறிவருவதனால், அறிவு ஆகிய புதிய பிரதிவாதியின்மீது, அக்குற்றம் வலியுறுத்தப்படாமல் பரிவு காட்டப்பெறுகின்றது'', என்று அவர் எழுதுகின்றார்.

விஞ்ஞானப் பேரறிஞர்களுள் ஒருவராகிய மார்க்கோனி என்பவர், ''தாம் காலை மாலை வேளைகளில் செய்யும் செபமும் பிரார்த்தனையும் எங்கேயோ பரமண்டலத்திலுள்ள பரம பிதாவுக்கு எங்ஙனம் கேட்டல் இயலும்?'' என்று தமக்குச் சிறு வயதில் இருந்த ஐயப்பாடு, கம்பியில்லாத் தந்தியைத் தாம் கண்டுபிடிக்க முடிந்ததன் வாயிலாகத் தீர்ந்துவிட்டது என்றும்; அன்பர்கள் செய்யும் வேண்டுகோள்களையெல்லாம் உலகம் எங்கணும் பரவி விரவி நிற்கும் இறைவன் செவிமடுத்து மனமிரங்கி அருள்புரிகின்றான் என்பது முற்றிலும் உண்மையே'' என்றும், குறிப்பிட்டிருக்கிறார்.

இந்நாளைய அறிவியலறிஞர்கள் பலர் ஆராய்ந்துவரும் தெளிவுக் காட்சி (Clairvoyance), தெளிவுக் கேள்வி (Clairaudience) தொலைவிலுணர்தல் ( Telepathy ) மறைபொருளாராய்ச்சி (Occultism), ஆவியுலக ஆராய்ச்சி ( Spirit-world ) முதலிய அறிவியற் கலைகள் அனைத்தும், சமயமும் விஞ்ஞானமும் ஒன்றையொன்று தழுவிப் பிணைந்து வளர முற்படும் காலம் தொலைவில் இல்லை என்று அறிவுறுத்துகின்றன.

''விஞ்ஞானிகளிற் பலர், இன்று சமயவுணர்வும் நம்பிக்கையும் கொள்ளத் தலைப்பட்டுள்ளனர். விஞ்ஞானம் உலகாயத நிலையில் இருப்பதாக இன்றும் பேசி வருதல் பொருந்தாது. இந்நாளைய விஞ்ஞானிகள்மெய்ஞ்ஞானிகளோடு சேர்ந்து, இறைவனை இயற்கையின் மூலம் உணர்ந்து துதித்துப் பரவி வழிபடுகின்றனர்'' என்று, மில்லிகன் என்னும் விஞ்ஞானி சொல்லுகின்றார்'' (8).

இதுகாறும் கூறியவாற்றால், உண்மைச் சமயமும், உண்மை விஞ்ஞானமும் தமக்குள் ஒருபோதும் மாறுபடுவன அல்ல என்னும் உண்மையைச் செவ்விதின் உணர்ந்து கொண்டு, நாம் அவ்விரண்டையும் நலமுறப் போற்றி ஒழுகி, உய்ய முயலுவோமாக!

---

(5) " Religion without science is superstition ; science without religion is arrogance.

—*Dr. S. Radhakrishnan.*

6. " Even the skeptic Heine wrote in a postscript to his Romanzero : Yes, I have returned to God. I am the prodigal son : I was overcome by heavenly nostalgia. There is after all a divine spark in every numan soul."

7. " It the present time things are taking a decidedly different turn. The odds are clearly against reason. More and more often the witnesses called in from the laboratories and studies of exact science turn evidence for the defence and materialsm is told a great many unpleasant things by its own experts and authorities.

The jury, composed of intelligent and liberal modern men and women, bases its verdict on the views expressed by the witnesses Milikan, Eddington, Jeans, Whitehead, Haldane. The case against faith is dismissed.

Reason, the original plaintiff, is now suspected of being really the one that is guilty of reactionary backwardness but the case is not pressed for it seems that the new defendant is honestly desirous of mending his ways."

—*Rene Fulop Miller,*

The saints that Moved the World

(8) 'Is there anyone Who still talks about the materialism of science ? Rather does the scientist joint with the psalmist of thousands of years ago in reverently proclaiming, 'the Heavens declare the glory of God and Firmament showeth His Handiwork.'

—*Robert Andrews, Millikan*

# நாவுக்கரசர் நவிலும் ஞானம்...

திரு மா. சண்முகசுப்பிரமணியம், B.A., B.L.,

ஆராய்ச்சிப் பேராசிரியர், தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகம்.

## முன்னுரை

சமயம் என்பது சாத்திர ஞானம் அன்று; அது வாழும் முறையாகும், வாழ்க்கை நெறியாகும் என்று, உண்மையினை ஓயாது உரைத்தவர் சுவாமி விவேகானந்தர். இவ்வுலகில் நாம் வாழ்வாங்கு வாழ்வதற்கு வழிகாட்டும் நெறியாகச் சமயம் இல்லையேல், சமயத்தால் மக்கள் எய்தும் பயன் ஏதும் இல்லை என்றுதான் கூறவேண்டும்.

கண்களுக்குத் தெரியாத, கருத்துக்கும் எட்டாத கடவுளைப் பற்றிக் கணக்கற்ற நூல்கள் எழுதப்பெற்றாலும், தத்துவங்கள் பேசப்பட்டாலும், மனித இனம் அதனால் பயன்பெற்றுப் பண்படைந்துள்ளதா என்றால், அதற்கான விடை மனிதகுலத்திற்குப் பெருமை சேர்ப்பதாக இல்லை. மனிதனின் அறிவு வளர்ந்துள்ளது. ஆனால், ஆன்மீகம் வளரவில்லை. அவனது விஞ்ஞான அறிவு ஓங்கியுள்ளது, ஆனால் மெய்ஞ்ஞான உணர்வு ஓங்கவில்லை. மனிதனைக் கண்டு மனிதன் அஞ்சுகிறான்! ஒரு நாட்டினரைக் கண்டு மற்றோர் நாட்டினர் அஞ்சுகின்றனர். அச்சமும் ஐயுறவும் மனித இனத்தை அலைக்கழிக்கின்றன, ஆட்டிப்படைக்கின்றன!

மனிதனால் படைக்கப்பட்ட ஏவுகணைகள் அவனை நோக்கி எள்ளி நகையாடுகின்றன; அழிவாற்றல் மிக்க ஆயுதங்கள் அவனை அலறச் செய்கின்றன. ஏன் இந்த அவலநிலை? உண்மையான ஆன்மீகம் மனிதன் உள்ளத்தில் பதியவில்லை. ஆன்மீகமும் அன்பு நெறியும் இரண்டல்ல என்பதை அவன் ஐயமற உணரவில்லை. அன்பு நெறியே அச்சத்தைப் போக்குவது என்ற அடிப்படை உண்மை, மனித மனத்தில் மாறாது நிற்கவில்லை.

நம் தனிப்பட்ட வாழ்க்கையை எடுத்துக் கொள்வோம். அதில்தான் எத்தனை இன்னல்கள், எத்தனை ஏமாற்றங்கள்! ஆசைதான் எவ்வளவு? ஆசை நிறைவேறாதோ என்ற அச்சந்தான் எவ்வளவு? கவலை என்றால் ஒன்றா, இரண்டா? எண்ணற்ற கவலைகள் நம் இதயத்தை அரிக்கின்றனவே! ''துன்பக் கடலிடை தோணித் தொழில் பூண்டு'' நாம் வாழ்கின்றோம் என்கிறார் நாவுக்கரசர். நம்மை ''இன்பக்கரை முகந்து ஏற்றும் திறத்தனன்'' இறைவன்தான் என்கிறார்.

துன்பத்தை ஒழித்து இன்பத்தை எய்துவதற்கு ஏற்ற உத்தியானது பக்தி நெறியே யாகும் என்பதை உணர்த்துகின்றன சைவமும் வைணவமும். நாயன்மார்களும் ஆழ்வார்களும் அருளியுள்ள திருமுறைகளும் திவ்வியப்பிரபந்தங்களும் பக்திநெறியின் பாங்கினையே பகர்கின்றன. இறைவனை இதயத்திலே எய்திஇடையறாத இன்பத்தில் திளைக்கும் ஏற்றமிகு நெறியை எளிய இனிய தமிழில் நமக்கு ஓதுகின்றனர் ஒப்பற்ற அம் மெய்ஞ்ஞானிகள். பக்தி நெறியிலே நாம் பரமனைப் பற்றிய ஞானத்தை மட்டுமே பெறுவதில்லை. இறைவனோடு நாம் இசைகின்றோம், இணையில்லாத இன்பத்தை எய்துகின்றோம். மனத்தில் மாசு மறைகின்றது, மன்னிய வினைகள் ஒழிகின்றன. இறைவன் நமக்கு அன்பன் ஆகின்றான், ஆசான் ஆகின்றான், இன்பன் ஆகின்றான், இனிய நண்பன் ஆகின்றான். ஆசை அறுகின்றது, அச்சம் அகலகின்றது. இனிப் பிறவாத நெறிகண்டு இப் பிறவிப் பயனை நாம் எய்துகின்றோம்.

''சமயம் என்பது புறச் சடங்குகளைக் கொண்டது அன்று, வழக்கமாக நாம் குறிப்பிடும் சமயம் அன்று. நான் ''சமயம்'' என்று கூறுவது அனைத்துச் சமயங்களுக்கும் அடிப்படையாக அமைவதாகும். இறைவனோடு நம்மை நேரடியாக இணைப்பதாகும்'' என்கிறார் காந்தியடிகள். இறைவனோடு நேரடியாக நம்மை இணைப்பதே பக்தி நெறியாகும். இப் பக்தி நெறியின் பயனாக, உண்மையிலேயே நம் உள்ளம் இறைவனை உணர்கின்றது, அவனோடு உறவாடுகின்றது! இறைமை என்பது ஏதோ ஒரு தத்துவம் அன்று; அது உண்மைப் பொருள், உறுதிப்பொருள் என்பதை நாம் ஐயத்திற்கிடமின்றி அறுதியாக உணர்கின்

றோம்! இந்த உணர்வு உதித்த பின் வேறென்ன நமக்கு வேண்டும்? இறைமையோடு இசைந்து நாம் வாழ்வதால் எய்தும் ஏற்றத்தை என் னென்று சொல்வது?

ஒப்பற்ற இவ்வுயர் நலன்களை எய்து வதற்கென்று, நாம் காட்டிற்குச் செல்லவேண் டாம், கடுந்தவம் புரியவேண்டாம்; உண் மையை உணர்ந்தால் போதும், உள்ளம் உருகி நின்றால் போதும் என்கின்றனர் பக்திநெறி பரவும் பரமஞானிகள். துன்பம் இன்றி, துயரம் இன்றி இன்பமாக நாம் வாழ வேண்டுமா? எளி தான வழி இதுவே! இரவும் பகலும் இறை வனை இதயத்திற்கொண்டால், அவன் நம் அன்பனாகின்றான், அல்லல் தீர்க்கின்றான் என்பது அப்பரடிகளின் அருள்வாக்கு.

துன்பம் இன்றித் துயர் இன்றி என்றும்நீர்
இன்பம் வேண்டில் இராப்பகல் ஏத்துமின்,
என்பொன் ஈசன் இறைவன்என்று உள்ளுவார்க்கு
அன்பன் ஆயிடும் ஆனைக்கா அண்ணலே

இன்பத்தை நாடி நாம் எத்தனையோ முயற்சிகளில் ஈடுபடுகின்றோம். ஆனால், இறுதி யில் நாம் எய்துவதோ துன்பம்! இன்ப நாட் டமே இடர்களை விளைப்பதென்றால், இன் பத்தை எய்துவதுதான் எப்படி என்று நினைந்து நம் இயதம் இடிந்து போகின்றது! என்றும் மாறா இன்பத்தை எங்கும் காண இயலாமல் நைந்து நிற்கும் நாமெல்லாம் நலம் பெற்று உய்ய வேண்டுமென நாவுக்கரசரின் நல்வாக்கு ஒலிக்கின்றது! ''இடர்களைக் கழிக்க வேண்டில் இறைவனை ஏத்துமின்னோ!'' என்றும், ''அல் லலைக் கடக்க வேண்டில் அரனையே நினை மின்கள்'' என்றும் ஓங்கி ஒலிக்கின்றது அந்த ஒப்பற்ற ஞானஒலி. இறைமை ஞானத்தை இனிய தமிழில் எடுத்து ஓதி நம்மையெல்லாம் இன்ப நிலைக்கு இட்டுச் செல்கின்றன,அப்பரடி களின் அமுதப் பாடல்கள். ''பன்னிய நூல் தமிழ்மாலை பாடுவித்து என் சிந்தை மயக் கறுத்த திருவருளினான்'' என்று இறைவனை இறைவனை ஏத்துகின்றார் அடிகள்.

பன்னிய நூல் தமிழ்மாலையினைப் பாடு வித்தவன் இறைவன். எனவே, நாவுக்கரசர் நவிலும் இறைமை ஞானம் இறைவனால் இயம் பப்பெறும் இணையற்ற ஞானமாகும்! இறை வன் அருளும் அந்த ஈடற்ற ஞானத்தை, பக்தி நெறி என்ற பரம ஞானத்தை, அப்பரடிகளின் அருந்தமிழ்ப் பாடல்களில் காணுவோம், நம் வாழ்வைப் பேணுவோம்.

## உணர்வு என்னும் ஊர்வது உடையாய்

சிவமான இறைவனைப் பல உருவங்களில் நாம் வணங்குகிறோம். பல்வேறு திருவுருவங் களுக்கும் வெவ்வேறு வாகனங்களையும் படைக் கிறோம்? கந்தனுக்கு வாகனம் மயில், கண்ண னுக்கு வாகனம் கருடன், பிரமனுக்கு வாகனம் அன்னம், சிவனுக்கு வாகனம் காளை. எந்நாட் டவர்க்கும் உரிய இறைவனுக்கு வாகனம் எது?

''உரியாய் உலகினுக்கெல்லாம்போற்றி;
உணர்வு என்னும் ஊர்வது உடையாய் போற்றி''

உலகனைத்திற்கும் உரியவனான இறைவனுக்கு நம் உள்ளத்து உணர்வே ஊர்தியாக உள்ளது என்று பாடுகின்றார் ஞானி நாவுக்கரசர். நம் உள்ளத்து உணர்விலே ஊர்ந்து வருகின்றான் உலக நாயகன். இறைமை ஞானத்திற்கு அடிப் படையான உண்மை இது என்பதை நாம் சிறிது சிந்தித்தால் காணலாம்.

## இயற்கையோடு இசைந்த அனுபவம்

இவ்வுலகத்தில் பிறந்து வளரும் நாம் நம்மைச்சுற்றியுள்ள உலகப் பொருள்களையும் இயற்கை நிகழ்வுகளையும் பார்க்கிறோம். ஓங்கி உயர்ந்த மலைகள், அடர்ந்து வளர்ந்த காடுகள், நீண்டு பெருகும் நதிகள் என எத்தனையோ இயற்கைப் பொருள்களை நாம் காணுகின் றோம். பரந்த கடல், விரிந்த வானம், வானிலே உதித்து மறையும் கதிரவன் ,வளர்ந்து தேயும் சந்திரன், இரவில் மின்னுகின்ற எண்ணற்ற விண்மீன்கள் இவையெல்லாம் நம்மை வியப் பிலே ஆழ்த்துகின்றன. காலம் தவறாமல் சூரி யன் உதிப்பதும் மறைவதும் ,பருவகாலங்கள் முறைப்படி வருவதும் போவதும், இன்னும் எத்தனையோ இயற்கை நிகழ்வுகள் ஒழுங்கு தவறாமல் நடப்பதும் நம் சிந்தனையைக் கிளறு கின்றன.

உலகில் வாழும் பிற உயிரினங்கள் எவை யும் இதைப் பற்றிச் சிந்திப்பதில்லை. பசிக்கும் பொழுது, அவை இரை தேடுகின்றன, உண் கின்றன, காலப் போக்கில் அவை மடிந்து மறை கின்றன. உணவு தேடுதல், இனப்பெருக்கம் இவை இரண்டுமே அவற்றின் தொழில்கள். இயற்கை நிகழ்வுகளை ஓர்ந்து பார்ப்பதற்கான பகுத்தறிவு அவற்றுக்கு இல்லை. ஆனால் மக்க ளாகிய நாமோ பிற உயிரினங்களில் இருந்து எவ்வளவோ வேறுபட்டுள்ளோம். ஆறறிவு படைத்துள்ளோம். பகுத்தறியும் திறனான ஆறாவது அறிவையும் நாம் பெற்றிருப்பதால் தான் உலகப்படைப்புக்களிலே நாம் உயர்ந்து விளங்குகின்றோம்.

எனவே, இயற்கையினைக் காணும் நம் மனத்திலே வினாக்கள் எழுகின்றன.இயற்கைப் பொருள்களெல்லாம் எவ்வாறு தோன்றின? அவை எவ்வாறு இயங்குகின்றன? இயற்கை நிகழ்வுகளின் ஒழுங்கமைதியினைக் காக்கும் ஆற்றல் எது? இப்படியாகப் பல வினாக்கள் நம் மனத்திலே எழுகின்றன. இவ் வினாக்க ளுக்கு விடை காண முயல்வதுதான், நம் மனித இனத்தின் மாண்பு ஆகின்றது. ஆனால், இவ் வினாக்களுக்கான விடை எளிதிலே நமக்குக் கிடைப்பதில்லை. நம்அறிவின் ஆற்றல்கொண்டு நாம் எவ்வளவோ ஆழ்ந்து சிந்திக்கின்றோம். நம் அறிவுக்கு எதுவுமே புலப்படவில்லை. எது வும் தெரியவில்லை என்பதால் அதுபற்றிய சிந் தனையை விட்டுவிட முடிகின்றதா? முடிவ தில்லை.

நாம் மீண்டும் மீண்டும் சிந்தனை செய்கின்றோம். அறிவு அத்தனையும் கொண்டு சிந்திக்கின்றோம். ஆனாலும் பயன் ஏதும் இல்லை. நமக்கு எதுவுமே புலப்படவில்லை. புரியாத புதிராகவே இயற்கை இலங்குகிறது. முடிவில் நம் அறிவு அடங்குகிறது. சிந்தனை ஓய்கின்றது. அறிவின் இயக்கம் அடங்கிய நிலையில் நம் உள்ளத்தில் ஓர் அமைதி பிறக்கின்றது! அமைதியாக உள்ளத்தோடு இயற்கையினை நாம் மீண்டும் நோக்கி உணர்கின்றோம். உதய ஞாயிற்றின் ஒப்பற்ற காட்சி, அந்தி வானத்தின் அற்புதமான அழகு, இரவு வானத்தில் இலங்கும் எண்ணற்ற சுடர்கள், இவ்வாறான இயற்கையின் எழில் தோற்றங்கள் நம் இதயத்தை ஈர்க்கின்றன.

நம் இதயம் இயற்கையோடு இசைகின்றது. இயற்கையோடு இசைந்த நம் இதயத்தில் ஏதோ ஓர் ஒளிக்கீற்று மின்னுகிறது. எட்டாத வானத்தில் இரவு நேரத்தில் எழிலுடன் மின்னும் எண்ணற்ற விண்மீன்களில் நம் இதயம் ஏதோ ஒன்றை உணர்கின்றது. ஓடும் நீரின் ஒலியும், பாடும் பறவைப் பண்ணும் நம் உள்ளத்தை உருக்குகின்றன, உணர்வொன்றை எழுப்புகின்றன. சின்னஞ்சிறு மலர்களில் தான் எத்தனை எத்தனை வடிவங்கள், எத்தனை எத்தனை வண்ணங்கள். இத்தகைய எழில் மலர்களை நுகரும் நம் இதயத்தில் ஏதோ ஓர் உணர்வு உதிக்கின்றது. இவ்வாறு, இயற்கையோடு இழைந்துநிற்கும் நம் இதயத்தில் எழுகின்றதே ஓர் உணர்வு, அது என்ன உணர்வு?

இயற்கைப் பொருள்களில் எல்லாம் இலங்கும் ஏதோ ஒன்று உள்ளது என்ற உணர்வுதான் அது. இயற்கையின் இயக்கங்களுக்கு மூலமாக ஏதோ ஒன்று இயங்குகின்றது என்ற உணர்வு தான் அது. அண்டங்களையெல்லாம் ஆட்டி வைக்கும் ஆற்றல் ஒன்று உள்ளது என்ற உணர்வுதான் அது. இவ்வாறு, இயற்கையோடு இசைந்து நிற்கும் இதயம், இயற்கை அனைத்தையும் இயக்கும் ஆற்றல் ஒன்று உள்ளது என்று உணர்கின்றதே, அந்த உணர்வைத்தான் ''மெய்யுணர்வு'' என்கின்றனர் சான்றோர். மனித மனத்திற்கு மாண்பு சேர்ப்பது இந்த மெய்யுணர்வேயாகும். இந்த மெய்யுணர்வினையே இறையுணர்வு என்பர் ஞானிகள்.

## ஐயுணர்வும் மெய்யுணர்வும்

மெய் வாய் கண் மூக்கு செவி என்ற ஐம்புலன்களின் வழியாகவே நாம் இவ்வுலகத்து இயற்கையினை நுகர்கின்றோம். மனம், சுவை ஒளி, ஊறு, ஓசை என்பன ஐம்புல உணர்வுகள். இவ்வைந்து வகையான உணர்வுகளாகத்தான் இயற்கைப் பொருள்களையும் காட்சிகளையும் நாம் அனுபவிக்க முடிகின்றது. இவ்வாறு அனுபவிப்பதன் பயன் என்ன? இயற்கையனைத்திற்கும் அப்பால் ஏதோ ஓர் ஆற்றல் இயங்குகிறது என்ற மெய்யுணர்வினைப் பெறுவதுதான் அதன் பயனாகிறது. எனவே ஐயுணர்வுகளை நாம் பெற்றதன் பயன் மெய்யுணர்வினை எய்துவதே என்கிறார் திருவள்ளுவர்.

ஐயுணர்வு எய்தியக் கண்ணும் பயமின்றே
மெய்யுணர்வு இல்லா தவர்க்கு

ஐம்புல உணர்வுகளால் இயற்கையின் எழில்களைத் துய்த்து, அவற்றில் மறைந்து இலங்கும் இறைமையினை நாம் உணர்கின்றோம். இந்த மெய்யுணர்வு பெறுவதற்கான சாதனங்களாகவே நம் ஐம்புல உணர்வுகள் இருக்கின்றன. எனவே, மெய்யுணர்வினை நாம் பெறவில்லை எனில் நமக்கு ஐயுணர்வுகள் இருந்தும் பயனில்லை என்ற இறைமை ஞானத்தை உணர்த்துகின்றார் வள்ளுவர். மனிதர்களாகப் பிறந்த நாம் ஐயுணர்வு பெற்றதே மெய்யுணர்வு எய்துவதற்குத்தான் என்ற பேருண்மையினைத் தெளிவாக நமக்குப் போதிக்கின்றது, திருக்குறள்.

## அறிவும், உணர்வும்

இதனை மெய்யுணர்வு என்று குறிப்பிடாமல் மெய்யுணர்வு என்று கூறுவதன் காரணத்தை நாம் புரிந்து கொள்ளவேண்டும். ஒன்றை அறிவது வேறு, அதை உணர்வது வேறு. தேனை ஒருவர் சுவைத்துப் பார்த்துவிட்டு அது இனிப்பாக இருக்கிறது என்றார். அந்த இனிப்புச் சுவை எவ்வாறு இருக்கிறது என்பதை அவர் மற்றொருவருக்கு அறிவிக்க முடியுமா? முடியாது. அவரவர் தேனைச் சுவைத்துப் பார்த்தால்தான் அந்த இனிப்புச் சுவையினை உணர்தல் இயலும். மலர்களில் இருந்து தேனை எவ்வாறு தேனீக்கள் சேகரிக்கின்றன; தேன் கூடுகளில் இருந்து தேனை எவ்வாறு நாம் வடித்து எடுக்கிறோம். தேனில் அடங்கியுள்ள ஊட்டச் சத்துக்கள் எவை என்பன பற்றி ஒருவர் மற்றொருவருக்கு அறிவிக்கலாம். ஆனால், அதன் சுவையினை அவரவர் தாமே சுவைத்துப் பார்த்துத்தான் உணரவேண்டியிருக்கிறது. ஒரு பொருள்பற்றி ஒருவர் பிறரிடமிருந்து தெரிந்து கொள்வதை அறிதல் என்கிறோம். அப்பொருளை அவரவர் நேரடியாக அனுபவிப்பதை உணர்தல் என்கிறோம்.

எனவேதான், உலகத்து இயற்கையினை ஓர்ந்து ஓர்ந்து நம் உள்ளத்தில் உணரும் உண்மையினை மெய்யுணர்வு என்று சிறப்பித்துக் கூறுகின்றனர். இயற்கைப் பொருள்களிலும் இயக்கங்களிலும் இணைந்து நிற்கும் மெய்ப்பொருளை நாம் ஓர்ந்து உணர்வது மெய்யுணர்வு எனப்படுகிறது. இந்த மெய்யுணர்வினை நாம் ஒவ்வொருவரும் எய்துகின்றோம். இயற்கையோடு இசைந்து நிற்கும் நம் உள்ளத்தில் உதிக்கும் இந்த மெய்யுணர்வுதான் ஆன்மீக அனுபவம் மலர்வதற்கு அடிப்படை ஆகின்றது. இவ்வாறு இறைமை என்ற பேருண்மை நம் உள்ளத்து உணர்வாகவே நம்மிடம் உதிக்கின்றது. இந்த உண்மையினை நமக்குப் புகட்டும் வகையில்தான், இறைவன் நம் உணர்வை ஊர்தியாகக் கொண்டு ஊர்ந்து வருகின்றான் என்கிறார் நாவுக்கரசர்.

நம் உள்ளத்தில் திடீரென உதித்துவிடுவ தில்லை இந்த மெய்யுணர்வு என்ற இறை யுணர்வு. நாம் இயற்கையினை ஓர்ந்து காணும் பொழுது மெல்ல மெல்ல உள்ளத்தில் உதிக்கின் றது அந்தப் பேருணர்வு. எனவேதான் அவ் வுணர்வு ஊர்ந்து வருகிறது என்று கூறுகின்றார் அடிகள். ''உணர்வு என்னும் ஊர்வது உடை யாய் போற்றி'' என்பதில்தான் எத்தகைய ஞானம் அடங்கியுள்ளது.

## உணர்வெனும் பெருமையான்

சுவையினை நாவினால், ஒலியினைக் காது களால், காட்சியினைக் கண்களால் நம் உள்ளம் உணர்கின்றது. ஆனால் இயற்கையோடு ஒன்றி நிற்கும் நம் உள்ளம் நேரடி யாகவே இறை வனை உணர்கின்றது. புலன்களின் உதவியின்றி உள்ளமே ஒன்றை உணர்வது என்றால், அந்த ஒன்றைவிட உண்மையானது வேறு என்ன இருக்க முடியும்? காதால் உணர்வதை ஒலி என் கிறோம்; கண்ணால் உணர்வதைக் காட்சி என் கிறோம்; மூக்கால் உணர்வதை மணம் என் கிறோம். புலன்களின் உதவியின்றி உள்ளமே நேரடியாக உணர்வதை எவ்வாறு குறிப்பிடு வது, அதனை உணர்வு என்றே குறிப்பிடுகின்ற னர். எனவே உள்ளத்தால் நேரடியாக உணரப் படும் இறைவனை உணர்வே என்றுபோட்ற்றிகி குறிப்பது இறைவனின் தனிப் பெருமையைக் காட்டுகிறது. ஆதலால், உணர்வு என்று அழைக் கப்பெறும் தனிப்பெருமை உடையவன் இறை வன் என்கிறார் நாவுக்கரசர். ''உள்குவார் உள் ளத்தான் உணர்வெனும் பெருமையானை', (தேவாரம்-பொது)

## விஞ்ஞானி கூறும் மெய்ஞ்ஞானம்

இருபதாம் நூற்றாண்டு அறிவியல் மேதை களில் தலைசிறந்த ஆல்பெர்ட் ஐன்ஸ்டின் ( **Albert Einstien** ) என்ற சிந்தனையாளரும் இதனையே கூறுகின்றார்: ''புரியாத புதிராக ஒன்றை உணருகின்றோமே அதுதான் அழகு மிக்க அனுபவமாகும். இந்த அற்புதத்தினைக் கண்டு ஆச்சரியத்தில் திளைக்கும் அனுபவத் தைப் பெறாதவன் உயிரோடு வாழ்ந்தாலும் உயிரற்றவனேயாகின்றான். கண்கள் இருந்தும் காணாத குருடனாகின்றான். வாழ்வின் புதி ரைப் புரிய முற்படும் பொழுது ஓர் அச்சம் எழு கின்றது. அதனுடைன் சேர்ந்து சமய உணர்வும் தோன்றுகிறது. நம்மால் அணுகி அறிந்து கொள்ள முடியாத ஒன்று உண்மை யில் இருக் கிறது; உன்னதமான ஞானமாகவும் ஒளிமிக்க அழகுடையதாகவும் ஏதோ ஒன்று இருக்கிறது. என்று மட்டுமே தெரிந்துகொள்ளுகிறோம். இந்த ஞானந்தான், இந்த உணர்வு தான், சம யத்தின் சாரமாகும். இதுவே சமயத்தின் சாரம் என்று கொண்டால், அழுத்தமான சமயதாதி களில் நானும் ஒருவன்'' * இவ்வாறு கூறுகின் றார் அறிவியல் மேதை ஆல்பர்ட் ஐன்ஸ்டின்.

''புலன்களுக்கு எட்டாதது பிரமம். சொற் களுக்கு அது அப்பாற்பட்டது. அந்த உண்மை யினை ஓர்ந்து உணரமட்டுமே முடியும்'' என் பது கதோபநிடதம். பிரமத்தை பிரக்ஞானம் என்கிறது ஐத்திரேய உபநிடதம், ''பிரக்ஞானம் பிரமம்'' என்பது உபநிடத வாக்கு. ''உடை யாய் போற்றி, உணர்வே போற்றி'' (போற்றித் திருவகவல்) என்று பாடுகின்றார் மாணிக்க வாசகர். ''உள்ளத் தினுள்ளே உணரும் ஒரு வனை'' என்பார் திருமூலர். ''தோய்விலன் புலனைத்துக்கும் சொலப்படான் உணர்வின் மூர்த்தி'' என்று இறைவனைப் போற்றுகின் றார் நம்மாழ்வார்.

பக்தி நெறி பரவும் சைவமும் வைணவ மும் இறைமையுணர்வினை எடுத்து ஓதுவதில் எள்ளளவும் வேறுபடுவதில்லை என்ற உண்மை யினையும் நாம் அறிந்து கொள்ளுகிறோம். அப் பரடிகளின் அருட்பாடல்கள் பலவற்றிலும் இந்த உண்மை இழைந்து இலங்குகிறது: ''உற்றிருந்த உணர்வெலாம் ஆனாய் நீயே'', ''நிணமுடை நெஞ்சியுனுள்ளால் நினைக்குமா நினைக்கின்றார்க்கு, உணர்வினோ டிருப்பர் போலும் ஒட்றியூர் உடைய பேகாவே'', ''ஊன மதுவெல்லாம் ஒழித்தான் தன்னை, உணர்வாகி அடியேனது உள்ளே நின்ற, தேனமுதைத் தென்கூடல் திருவாலவாய்ச் சிவனடியே சிந்திக் கப் பெற்றேன் நானே''.

ஒன்றி நிற்கும் நம் உள்ளத்தில் உணர்வு என்ற ஒளியாய் உதிக்கின்றது இறைமறை என் இணையற்ற ஞானத்தை உறுதிபட உணர்த்து கிறது இந்த இன்தமிழ்ப் பாடல்!

**வெள்ளத்தார் விஞ்சையார்கள் விரும்பவே**
**வெள்ளத்தைச் சடை வைத்த விகிர்தனார்**
**கள்ளத்தைக் கழியம்மனம் ஒன்றி நின்று**
**உள்ளத்தில் ஒளியைக் கண்டது உள்ளமே.**

ஒன்றி நிற்கும் உள்ளத்தில் உணர்வாய் ஒளிர்கின்றது ஒண்பொருள் என்ற ஒப்பற்ற உண்மையினை உணர்த்தும் அப்பரடிகளின் அருள்வாக்கில் அலர்ந்துள்ள அரிய இறைமை ஞானத்தை இன்னும் காணுவோம்.

—(தொடரும்)

---

* "The most beautiful thing we can experience is the mysterious... He to whom this emotion is a stranger, who can no longer pause to wonder and stand rapt in awe, is as good as dead; his eyes are closed. The insight into the mystery of life, coupled though it be with fear, has also given rise to religion. To know that what is impenetrable to us really exists, manifest in itself as the highest wisdom and the most radiant beauty which our dull faculties can comprehend only in their most primitive forms......this knowledge, this feeling, is at the centre of true religiousness. In this sense, and in this sense only, I belong to the ranks of devoutly religious men."

—*Albert Einstein in "I believe"....*

# பக்தியின் தத்துவம்


'மகாவித்வான்'-'மகாமகிமோபாத்தியாய'-'பத்மவிபூஷண்'

திரு பி. ப. அண்ணங்கராசாரிய சுவாமிகள்,

காஞ்சிபுரம்.


உலகில்காணும் மகான்களை நாம் இரண்டு வகுப்பில் சேர்த்துப் பேசுகின்றோம். சிலரை மகாஞானிகள், மகாபண்டிதர்கள் என்று வழங்குகிறோம். சிலரை மகாபக்தர்களென்று புகழ்கிறோம். பாண்டித்தியமும் பரமபக்தியும் ஒரே நபரிடத்தில் ஒன்று சேர்ந்திருக்க முடியாத தன்மைகளல்ல. இருளும் ஒளியும் ஒன்று சேர்ந்திருக்க மாட்டாதவை யென்பது போல, இந்த ஞானபக்திகளும் ஒன்று சேர்ந்திருக்க மாட்டாதவை் என்பதில்லை. நம்முடைய பூர்வாசாரியர்களும் மற்றும்பல பெரியார்களும், ஞான பக்தி விரக்தி நிதிகளாயிருந்தவர்களே. ஆனால் இக்காலத்தில் இவற்றை நாம் ஒரே இடத்தில் காண்பது அரிதேயாகின்றது. ஞானமுள்ள இடத்தில் பக்தியையும் அனுஷ்டானத்தையும் காண முடிகிறதில்லை. இவை காணுமிடங்களில் ஞானத்தைக் காண்பது அரிதாகின்றது.

உலகில் ஞாதாக்களுக்குக் கௌரவம் அதிகமா? பக்திமான்களுக்குக் கௌரவம் அதிகமா? என்று நாம் பார்த்தால், உண்மையில் பக்திமான்களுக்குத் தான் கௌரவம் அதிகமாக இருக்கவேண்டும்; ஆனால் ஞாதாக்களுக்கே அதிகமான கௌரவம் ஆங்காங்கு செய்யக் காண்கிறோம். இதற்குக் காரணமென்னவென்றால், இவர்கள்போலிப் பக்தர்களா? உண்மைப் பக்தர்களா? என்று யதார்த்தமாகக் கண்டுபிடிக்க முடிகிறதில்லை. வித்வான்களென்ற வகுப்பிலும் உண்மை வித்வான்கள், போலி வித்வான்கள் என்கிற வேற்றுமையிருந்தாலும், வாயிலிருந்து வெளிவரும் பேச்சுக்களைக் கொண்டு இன்னார் உண்மைப்பண்டிதர், இன்னார் போலிப் பண்டிதர் என்று தெரிந்து கொள்ள முடிகிறது. ஆனால் பக்திமான்களை இங்ஙனே தெரிந்து கொள்வது, முடியாத காரியமாக இருக்கின்றது.

பக்தனென்று வெளிக்குக் காட்டிக் கொள்ளக்கூடிய வேஷ பூஷணங்களைத் தரித்துக் கொள்வது, அனைவர்க்கும் எளிதாகின்றது. உள்ளங்கனிந்த உண்மையான பக்தி பிறப்பது மிகவும் அரிதாயிருக்கின்றது. பன்னிரண்டு திருமண் காப்புகளை அழகாயும் பிரகாசமாயும் தரித்துத் திருமணித் தாழ்வடம் திருப்பவித்திரம் முதலியன பூண்டு கொண்டு, பாகவதோத்தமனென்று உலகமடங்கலும் உகந்து கொள்ளும்படியான வேஷத்தோடு வெளிவருவதில் விசேஷ சிரமமில்லை. இதுபோலவே முடிமுதல் அடிவரையில் திருநீறு பூசி உருத்திராக்க மாலையணிந்து சிவபக்திசிகாமணியாக விளங்குவதிலும் தாமத மேற்படாது. ஆனால் மனத்தில் அழுந்திக்கிடக்கும் பாபவாசனைகளை அகற்றிப் பரமேசுவரனிடத்தில் உண்மையான அன்பு கொண்டு தன்மய பவத்தை அடைவதொன்றே கஷ்ட சாத்யமும், கால விளம்பத்தில் அருமையாய்ப் பெறக் கூடியதுமாம்.

பக்தியின் வெளிவேஷங்களை வகித்துக் கொள்வதனால் மாத்திரம், ஒருவன் உண்மையான பக்தனாக ஆகிவிடமாட்டான். அநாதி கால சஞ்சிதமான பாபங்கள் கழிந்து, துர்வாசனைகள் தொலைந்து பரமபுருஷ விஷயத்தில் பரவசமான பக்தி ஏற்பட்டுத் தன்மயமாய்ப் போனால்தான் பக்தனாக முடியுமென்பதை ஒவ்வொருவரும் மனத்தில் அழுத்தவேண்டும். பக்தியின் வெளிச்சின்னங்கள் அவசியமில்லையென்று நாம் சொல்லுகின்றிலோம். அவை மிகவும் அவசியமே என்பதைப் பெரிதும் வலியுறுத்துகின்றோம். ஆனால் வெளிச்சின்னங்களைத் தரித்துக் கொள்வதனால் மாத்திரம் திருப்தியடைந்துவிடாமல், உண்மையான பக்திக்கு முயற்சி செய்யவேண்டும்.

பெரும் பெருந் தருமகாரியங்களைச் செய்கிறவனே பக்தன் என்று சிலர் நினைக்கக்கூடும். கிணறு வெட்டுவிப்பது, சத்திரம் சாவடிகள் கட்டுவிப்பது, தண்ணீர்ப் பந்தல் வைப்பது இவைபோன்ற பல வெளிப்பகட்டான காரியங்கள் செய்கிறவன் பக்தன் எனச் சிலர் நினைக்கின்றார்கள். உண்மையுரைக்குங்கால் இக்காரியங்கள் ஒருவிதத்திற் சிறந்தவைகளேயாகிலும் இவ்வகைக் காரியங்கள் செய்வதினாலேயே ஒருவன் பக்தனென்னும் வியபதேசத்திற்குப் பூர்ணபாத்திரமாய் விடமாட்டான். இவ்விதமான பெருங்காரியங்கள் செய்ய அனைவர்க்கும் இயலாது. யாரோ சிலர்தான் இவற்றைச் செய்யக்கூடும். அங்ஙனம் செய்பவர்களை

விசேஷ தனிகர்களென்று சொல்லலாமே யல்லது, பக்தர்களென்று சொல்லுவதற்கில்லை.

ஆனால் உண்மையான பக்தனுடைய அடையாளமென்னவென்று கேள்வி பிறக்க லாம். உண்மையான பக்தனைக் காண்பது அரிதேயாகினும் கண்டு பிடிப்பது கஷ்டமல்ல. எம்பெருமானிடத்தில் சுயநன்மை கருதாத அன்புடைய பக்தனிடத்தில் ஒவ்வொரு சமயத் திலும் நாம் விசேஷத்தைக் காணலாம். எந்தக் காலத்திலும் எந்தத் தேசத்திலும் எந்த நிலை மையிலும் பக்தன் பக்தனாகவேயிருப்பான். நீராடுவது உண்பது முதலிய காரியங்களைச் செய்யும்போதும், பந்து மித்திரர்களோடு பழ கும்போதும், பிணியால் வருந்தும்போதும், பலவகைக் கஷ்டநஷ்டங்கள் ஏற்படும்போதும், விசேஷமான லாபங்கள் கிடைக்கும்போதும், பக்தன் பக்தனாகவேயிருப்பான். எல்லாக் காலதேச நிலைமைகளிலும் சாதாரணமான நிலைமை மாறாமலே அவனிருப்பான். எவ்வித மான கொந்தளிப்பையும் அவனிடத்திற் காண முடியாது. எப்பொழுதும் இயற்கையான சந் தோஷத்தோடு சாந்தமூர்த்தியாக இருப்பான். எவ்வித மாறுபாடும் அவனிடத்தில் காணமுடி யாது. மகத்தான ஆபத்துக்களிலும் தன்னிலை மையிலிருந்து பிறழமாட்டான். பொறுமையும் தயையும் சாந்தியும் பரிசுத்தியும் இன்னும் இது போன்ற பல நற்குணங்களும் அவனிடத்திற் பதிந்து கிடக்கும். பக்தியின் நிலைமை முதிர முதிர இக்குணங்கள், வளர்ந்து கொண்டே வரும்.

எவன் தனது கடமையைக் குறையறச் செய்கிறானோ, மகத்தான ஆபத்துக்கள் அடைந்தபோதும், அக்கடமைகளைச் செய்வ தில் மயிரிழையும் பிசகுகிறானில்லையோ, தான் பிறர் சுற்றத்தார் மற்றையோர் மித்தி ரன் சத்துரு என்கிற பேதபாவனையின்றி அனைவரிடத்தும் ஒருபடியாக நடந்து கொள் கிறானோ, உள்ளும் புறமுமொத்த சுத்த நேரான நெறியில் நிலைநிற்கிறானோ, எவன் எம்பெருமானிடத்தில் அகங்குழைந்த அன்பு உடையவனோ, அவனே உண்மையான பக்த னாவான். பாலையும் நீரையும் பகுத்திடும் அன்னம்போல் அத்தகைய பக்தர்களை அநா யாசமாகக் கண்டறிவர் பெரியோர்.

விட்டுணுபுராணத்தில் மூன்றாவது அம் சத்தில் ஏழாமத்யாயத்தில், யமகிங்கர சம் வாதம், மகாபக்தர்களின் லட்சணத்தை யமன் தனது கிங்கரர்களுக்கு மிக விரிவாகக் கூறுவ தாய் நிபந்திக்கப்பட்டிருக்கிறது. அங்குள்ள பல சுலோகங்களுள் ஒரு சுலோகம் மாத்திரமே ஈண்டெடுத்துக் காட்டப்படுகின்றது:

'ந சலதி நிஜவர்ண தர்மதோ யஸ்
ஸமமதிராத்ம ஸுஹ்ருத் விபக்ஷபக்ஷே
ந ஹரதி ந ஹந்தி கிஞ்சிதுச்சைஸ்
ஸிதமநஸம் தமவேஸஹி விஷ்ணுபக்தம்'

என்பது கண்டபாடம் செய்யத்தக்க சுலோக ரத்னம். இதன் பொருள்தான் மேலே விவரிக் கப்பட்டது.

***

# இலக்கிய - தத்துவ - இன்பம்

''இலக்கியத்திலும், தத்துவத்திலும் விருப்ப-ஆர்வம் கொள்வது என்பது, ஒருபெரிய பேறு ஆகும். அஃது ஓர் அருமையான, கிடைத்தற்கரிய, ஒருவகைத் தனி அறிவாற்றல் ஆகும். எல்லா மனிதர் களுக்குமே இந்த அருட்பேறு வாய்ப்பதில்லை.

வண்டுகள் மட்டுமே, மலர்களில் இருந்து தேனைப் பருகுகின்றன; ஒவ்வோர் உயிரும் அவ்வாறு செய்ய முடிவதில்லை. மயில்கள் மட்டுமே மேகங்களையும் மழைபொழிதலையும் கண்டு மகிழ்ந்து, களிநடம் புரிந்து வரவேற்கின்றன; பறவைகள் அனைத்துமே அங்ஙனம் செய்வதில்லை. குயில்கள் மட்டுமே, இளவேனிற் காலம் நெருங்கும்போது, தம்முடைய மகிழ்ச்சியை வெளிப்படுத்தி, இனிய இசையினை மிழற்றுகின்றன; மற்றைய பறவைகள் அந்த நெறியைப் பின்பற்ற இயலுவதில்லை.

இங்ஙனமே, மனிதர்கள் எல்லோருமே இலக்கியங்களைப் பயின்று சுவைத்து இன்புறுதல் இயல்வ தன்று. இலக்கியங்களைக் கற்றுச் சுவைத்து நுகருந்திறம் என்பது, அவற்றைப் படைத்தளிக்கும் உரிய செயல்போன்றே, ஒரு சிறந்த அரிய செயல் ஆகும்''.

இலக்கியத்தில் தத்துவத்தில் எல்லோருக்கும் விருப்பம்என்பது இருப்ப தில்லை;
நலக்கஒரு சிலர்தமக்கே நல்லஅந்த அருட்பேறு நண்ணு கிற்கும்;
கலக்கமறும் வண்டுகள்தாம் தேன்தேடிக் களித்தருந்தும்; கவினூர்ந் தோங்கித்
துலக்கமுறும் மயில்கள்தாம் தோகைவிரித் தாடும்;குயில்தான் சூழ்ந்து பாடும்! (1)

நன்றுயர்ந்த இலக்கியநூல் தத்துவநூல் என்பவற்றை நயந்து கற்றே
இன்புறுதல் எல்லோர்க்கும் இயல்வதில்லே; இலக்கியங்கள் தம்மை ஆர்வம்
மன்பெரிதும் கொண்டுநுகி மகிழ்தல்என்பது அவைபடைக்கும் மாட்சி ஒக்கும்;
துன்பமிகும் இவ்வுலகில் தூயஇன்பம் மற்றிதுபோல் உண்டோ?சொல்லீர்! (2)

—தமிழாக்கம்: ந. ரா. முருகவேள்.

"To have interest in literature and philosophy, is a great thing. It is a very rare and precious faculty. All men are not blessed with it.

It is only bee that sucks honey from flowers, every creature cannot. Peacocks only welcome clouds and rains, all birds do not. Cuckoo alone expresses delight at the approach of spring and sings melodious notes, other birds do not follow the course.

Similarly all people cannot enjoy literature. To read literature with interest is as good as to produce it"

—MATTHEW ARNOLD.

# இறைவியின் பெருமை

கவிஞர் மனசை ப. கீரன், B.A., B.T.

## சௌந்தரிய லகரி

உலகுயிர்களுக்கெல்லாம் ஒப்பற்ற பெருந் தாயாக விளங்கும் இறைவியின் பெருமையை விளக்கும் நூல்களுள் 'சௌந்தரிய லகரி' என்பது ஒன்று. அதனை வடமொழியில் இயற்றியருளியவர் ஆதிசங்கரர். சௌந்தரியம்-அழகு. லகரி-மிகுதி. இறைவியினது அழகின் மிகுதியைச் சிறப்புற எடுத்து விளக்கிப் பாடுதலால், இது 'சௌந்தரிய லகரி' எனப் பெயர் பெற்றது. அம்பிகையின்பால் தாம் கொண்ட பேரன்பின் திறம் விளங்கச் சங்கரர் அருளிச் செய்த சௌந்தரிய லகரியானது, வடமொழியிற் பெரிதும் புகழ்வாய்ந்ததொரு நூலாகும். வடமொழியிற் சிறந்த உரை நூல்கள் பல, இதற்கு இயற்றப் பெற்றுள்ளன.

## வீரைக் கவிராச பண்டிதர்

இத்தகைய சிறந்த வடமொழி நூலினைத் தமிழிற் சுவைபெருக மொழி பெயர்த்து உதவியவர், இராமநாதபுரம் மாவட்டத்தில் வீரசோழ நல்லூரில் வாழ்ந்திருந்த கவிராச பண்டிதர் என்பவராவர். வீரசோழநல்லூர் என்பது மரூஉவாக 'வீரை' எனவும் வழங்கும். ஆதலின், இவரை வீரைக் கவிராச பண்டிதர் எனவும் தமிழறிஞர்கள் வழங்குவர். இவர் வாழ்ந்த காலமும், இவராற் செய்யப் பெற்ற வேறுபிற நூல்களும் அறியப்படவில்லை. ஆயினும், இவர் ஒரு சிறந்த தேவி பக்தர் என்பதும், தேவியின் அருள்பெற்றவர் என்பதும் மட்டும் அறியப் பெறுகின்றன.

## சைவ எல்லப்ப நாவலர்

வீரைக் கவிராச பண்டிதர் இயற்றிய சௌந்தரிய லகரியின் தமிழ்மொழி பெயர்ப்புச் செய்யுள் நூலுக்கு உரை வகுத்தவர், சைவ எல்லப்ப நாவலர் ஆவர். இவரே அருணாசலபுராணம், திருவருணைக் கலம்பகம், திருவாரூர்க் கோவை முதலிய பல நூல்களை இயற்றியவர். இத்தகைய சிறந்த பெருங்கவிஞர் உரை எழுதினமை ஒன்றே, தமிழ்ச் சௌந்தரிய லகரியின் அருமைபெருமைகளை விளக்கப் போதியதாகும். எனவே, அந்நூலின்கண்வரும் சுவைமிக்க சிறந்த செய்யுட்களுள் ஒருசிலவற்றை மட்டும் ஈண்டுக் காண்போம்:

## சிவமும் சக்தியும்

சௌந்தரிய லகரியின் முதற் செய்யுள்தானே, இறைவியின் பெருமையினைத் தொடக்கத்திலேயே தெளிவுற விளக்கிவிடுகின்றது. சந்திரனின் கதிரும் சந்திரகாந்தக் கல்லும் சேரும்பொழுது நீர் தோன்றியும், பிரியும்பொழுது நீர் இன்றியும் இருப்பதுபோல, இறைவன் இறைவியோடு சேர்ந்தக்கால் உலகைப் படைத்தல் முதலிய முத்தொழில்கள் செய்தும், இறைவியைப் பிரிந்தக்கால் எத்தொழிலும் செய்யாதும் நிற்பான். இவ்வுண்மையை மறைகளெல்லாம் முழங்குகின்றன. இறைவியை வழுத்தியே தேவர்களும் மூவர்களும் தத்தம் தொழில்களை நிகழ்த்தும் ஆற்றலைப் பெறுகின்றனர். அவ்விறைவியின் திருவடிகளைப் பணிவது முன்னைப் பிறவிகளில் தவம் செய்தவர்களுக்கேயன்றி ஏனையோர்களுக்கு இயலாது.

''சிவம்என னும்பொருளும் ஆதி சத்தியொடு
சேரின் எத்தொழிலும் வல்லதாம்
இவள்பி ரிந்திடின் இயங்கு தற்கும்அரிது
அரிதுஎனா மறை இரைக்குமால்!
நவபெரும் புவனம் எவ்வகைத் தொழில்
நடத்தி யாவரும் வழுத்துதாள்,
அவனி யின்கண் ஒரு தவம்இலார் பணியல்
ஆவதோ? பரவ லாவதோ?''

## இறைவியின் அருட்சிறப்பு

இறைவியின் திருவடிகளைத் தொழுது அவளது திருவருளைச் சிறிதாயினும் பெற்ற ஒருவன், மிகவும் கிழவனாய் இழிந்தவனாய் அருவருக்கத்தக்கவனாய் இருப்பினும், தேவமாதர்கள் அனைவரும் பின்தொடர்ந்து போற்றத் தக்க சிறப்பை அவன் அடைவான். அங்ஙனம்அவனைச் செய்யவல்ல இறைவியின் பெருமையைப் புகழ வல்லவர்கள் உண்டோ?

''அறக்கிழவன், மன்தன், விரகு இல்லாக்
கொச்சை,
அழகிருந்த ஊரில்இருந்து அறியா னேனும்,
உறக்கருநெறண கொழிக்கும்உனது அமுதவாரி
ஊடணுகின், அவரைஅர மகளிர் எல்லாம்
நறைக்குழலும் சரிந்திட, உத்தரீயம் சோர,
நாண்அழிய, வளைசிதற, உடுத்தஆடை
புறத்துவிழ, மயலொடும்பின் தொடர்வர்!
என்றால்,
பொற்கொடிநின் புதுமைஎவர் புகழ வல்
லார்!''

## இறைவியின் அருளும், கவிதைத் திறனும்

சரற் காலத்துச் சந்திரனைப் போன்ற உடம்பும், பிறையணிந்த சடையும், அபயம் வரதம்

படிகமாலை புத்தகம் என்பவை பொருந்திய நான்கு திருக்கைகளும் உடைய, இறைவியை மனத்தால் நினைத்து, வாயால் வாழ்த்தி, மெய்யால் தொழுது வணங்குபவர்கள் இனிமை மிக்க கவிதைகளைப் பொழிய வல்லவர்கள் ஆவார்கள்.

''உனதுசரற் காலமதி யனைய மெய்யும்,
உடல்குழைந்த பிறைச்சடையும், கரங்கள் நான்கும்
அவைரதம் உறும்அபய வரத ஞான
அருட்பளிங்கு வடமொடுபுத் தகமும் ஆக
நினைகிலர்முன்! வழுத்திலர்பின்! வணங்கார்! எங்ஙன்
நிறைத்தபசுந் தேனும் அடு பாலும் தூய
கனியும்என மதுரம்விளைந் தொழுகு பாடற்
கவிதைபொழி வது? கயிலைக் கடவுள் வாழ்வே!'

## இறைவியின் கண்களும், நகரங்களும்

பரத கண்டத்திற் புகழ் பெற்ற நகரங்கள் ஏழு எனக் கூறுவர். அவ்வேழு நகரங்களின் இயல்புகளும் இறைவியின் திருக்கண்களில் அமைந்துள்ளன. இறைவியின் கண்கள் விசாலமானவை யாதலால் விசாலையாகவும், மங்கல கல்யாண குணங்களை உடைமையால் கல்யாணபுரமாகவும், குவளை மலரால் வெல்லப்படாமையால் அயோத்தி நகரமாகவும், அடியார்களுக்கு மதுரம் விளைத்தலால் மதுரையாகவும், வழிபடுவோர்க்குப் போகங்களைஅருளுதலால் போகவதியாகவும், அமிழ்த தாரை போன்ற அருட்பார்வை செலுத்துதலால் தாரைநகரமாகவும், வந்தி என்னும் மலடி போலாமல் பெற்ற தாய் போலத் தண்ணருள் புரிதலால் அவந்தியாகவும் விளங்குகின்றன. இவ்வேழு நகரங்களையே யன்றி, உலக நகர்ப்புறங்களையெல்லாம் ஒருங்கே வெற்றி கொள்ளவல்ல 'சகவிசயை' யாக உள்ள அவ்விறைவி, பித்தராகிய தன் கணவரின் புரத்தில் (உடம்பில்) ஒரு புறத்தைக் கவர்ந்து கொண்டு விளங்குதல் அதிசயமோ?

''கோலநகர் விசாலையாய், நிரந்தரகல் யாணியாய்க்,
குவலயத்தால் அயோத்தியாய்க், குலமதுர தானாய்ச்,
சாலஒளிர் போகவதி யாய், அமுத தாரையாய்த்,
தண்ணளியால் அவந்தியாய்ச் சகவிசயை எனலாய்,
நீலவிழி புடைபரந்து நெடுநகரப்பெயர்கவர்ந்து
நீண்டுசேந்து அரிபரந்து நிகர்ஒழிக்கும் என்றால்
ஆலவிடம் அமுதெனக்கொண் டருந்தியஉன் மத்தர்புரம்
அதன்ஒரு புறங்கவர்தல் அதிசயமோ? தாயே?''

## இறைவியின் கண்கள், எண்வகைச் சுவைகள்

நகை அழுகை இளிவரல் மருட்கை அச்சம் பெருமிதம் வெகுளி உவகை என மெய்ப்பாடுகள் எட்டு வகையாகும் என அறிஞர்கள் கூறுவர். இவ்வெண்வகை மெய்ப்பாடுகள் அல்லது சுவைகள் யாவற்றையும் வெளியிடுதலை இறைவியின் கண்கள் சிறக்கப் படித்துத் தேர்ந்துள்ளன.

''அரனிடத்திற் பேரின்பம் அருளும்; அவன் அல்லார்பால்
அருவருக்கும்; அவன்முடிமேல் அணிநதியைச் சீறும்;
பரவுநுதல் விழியழல்முன் பார்த்திலபோல் அதிசயிக்கும்;
பணியாய பணிவெகுளப் பயந்தனபோல் ஒடுங்கும்;
விரைமுளரிப் பகைதடிந்து வீரரதம்படைக்கும்;
வினவுதுணைச் சேடியர்க்கு விருந்துநகை விளைக்கும்;
இரவுபகல் அடிபரவும் எளியனைக்கண்டு அருள் புரியும்;
இத்தனையோ படித்தன? உன் இணை விழிகள் தாயே!''

## இறைவியின் கற்புநலன்

இறைவி கற்பின் திருவுருவமாக இலங்குபவள். கற்புடைய மாதரார் அனைவரும் கண் கண்ட தெய்வமாகத் தொழத் திகழ்பவள் இறைவியே. இறைவியைத் தொழுது பணிந்து வழிபட்டு வருதல், கற்புடை மகளிர்க்கெல்லாம் தலையாய கடமையாகும். ஆதலின், அவ்விறைவியினது கற்பின் சிறப்பினைக் கலைநலந் தோன்றச் சௌந்தரிய லகரியிற் புகழ்ந்து போற்றுகின்றார் சங்கரர்! கல்விக்கு உரியவர்கள் எல்லோரிடத்தும் சேர்ந்திருத்தலால், ஒருவகையிற் கலைமகளும் பொதுமடந்தை ஆகின்றாள். செல்வத்திற்குரியவர்களின் இடத்தெல்லாம் சகடக்கால்போல மாறி மாறிச் சென்று சேர்ந்து உறைந்து வருதலால், ஒருவகையில் திருமகளும் பொதுமடந்தை போலுகின்றாள். ஆனால், இறைவியோ மகளிர்அணைய மகிழும் குரவ மரத்தினையும் அணையாமல், இறைவன் ஒருவனது திருமேனியையே புணர்ந்து மகிழ்கின்றாள். ஆதலின், மறைகளெல்லாம் கற்பின் தெய்வம் என இறைவியையே போற்றிப் புகழ்கின்றன.

''கலைமகளும் பொதுமடந்தை! கமலையும் மற்று அவளே!
மலைமகள்நீ கற்புடைய வனிதை எனப் பகரும்
குலமறைகள்! எதிர்கொடுநின் குரவினையும் அணையா
முலைகுழையப் புணர்வதுநின் முதல்வர்அலது இலையால்!''

மகளிர்தம் கற்பின் சிறப்பினாலேயே அவர்தம் கணவன்மாரின் சிறப்புக்களெல்லாம் அமைகின்றன. தத்தமது மனைவியரின் கற்பொழுக்கச் சிறப்பாற்றலினாலேயே, கணவன்மார் தாம் செய்து முடிக்கக் கருதும் செயல்களையெல்லாம் செவ்விதிற் செய்து முடித்து வெற்றி கொள்கின்றனர். மனைவியின் கற்பே, கணவனின் வாழ்நாளையும் வளர்க்க வல்லதாகும். நான்முகன் திருமால் இந்திரன் இயமன் குபேரன் முதலிய தேவர்கள் அனைவருமே ஊழிக்காலத்தில் இறந்து போகின்றார்கள். அதுபோது சிவபிரான் ஒருவன் மட்டுமே இறவா நிலையிற் சிறந்து திகழ்

கின்றான். அதற்குக் காரணம் கற்பிற் சிறந்த இறைவியினது கழுத்தில் திகழும் மங்கல நாணின் மாண்பும், காதில் ஒளிரும் பொன்னோலையின் வாசியுமே ஆகும்.

வேத ரஞ்சகன் மால்பு ரந்தரன்
வேக சண்ட குபேரனோடு
ஆதி எண்திசைபாலர் பொன்றவும்,
ஆதி அந்தம் இலாததொர்
நாதர் பொன்றிலர்! ஏது?உன் மங்கல
நாண் உறும் திறம் ஆதலால்,
நீத ழைந்தது யோகம்! அம்பிகை
நீலி என்பது பாவமே!

''பிரமன் இந்திரன் முதற்பிற தேவர்கள் ஊண் எலாம்
நரைபெ ருந்திரை அற்றநல் ஆரமு தேகொலாம்;
ஒருவர் தங்கிலர்! நின்சிவன் ஊண்விடம் வாழ்வன்! மாது
இதுபெ ருங்குழை இட்டபொன் ஓலையின் வாசியே!''

### சங்கரரும் சம்பந்தரும்

சங்கரர் தமது சௌந்தரிய லகரியில் இறைவியின் புகழை இனிதெடுத்து ஓதிப் புகழும்போது, சைவமும், தமிழும் தழைக்கத் தோன்றியருளிய நமது திருஞானசம்பந்தப் பெருமானின், ஒப்புயர்வற்ற தெய்வப் பெற்றிமை மிக்க சிறந்துயர்ந்த கவிதைத் திறனையும், மிகவும் வியந்து புகழ்ந்து வியந்து போற்றுகின்றார்! சான்றோர் பெருமை சான்றோர்க்கன்றோ தெரியும்?

''தருண மங்கலை உனது சிந்தை
தழைந்த பால்அமுதஊறினால்,
அருண கொங்கையில் அதுபெ ருங்கவி
அலைநெ டுங்கடல் ஆகுமோ?
வருண நன்குறு கவுணி யன்சிறு
மதலை அம்புயல், பருகியே
பொருள்ந யம்பெறு கவிதை என்றொரு
புனித மாரி பொழிந்ததே!''

### பயின்று ஓதிப் பயன் பெறுவோம்

இறைவியைவழிபடும் பல்வேறு முறைகளும், மந்திரங்களும், அவற்றால் நாம் அடையக்கூடிய பயன்களும் பிறவும், சௌந்தரிய லகரியின்கண் அழகுற விளக்கப்பட்டுள்ளன. வீரைக் கவிராச பண்டிதரின் பாடல்கள் மொழி பெயர்ப்பே யாயினும், முதல் நூலே என்று சொல்லத்தக்கவாறு மிகவும் சிறப்புற அமைந்துள்ளன. மொழி பெயர்ப்புக்கள் எவ்வாறு அமைதல் வேண்டும் என்பதனை விளக்குதற்கு, இந்நூல் ஒரு சிறந்த எடுத்துக்காட்டு ஆகும். இறைவியின் பெருமையினை விளக்கும் இனிய துதிநூலாகத் திகழும் இந்நூலையும், இதுபோன்ற பிற நூல்களையும், நாம் அனைவரும் பயின்று ஓதி நலம்பெற்று உய்ய முயலுவோமாக!

***

## சந்தாதாரர்கள் கவனத்திற்கு

1983 ஜனவரி முதல் ''திருக்கோயில்'' இதழின்—

ஆண்டுச் சந்தா (அ) உள்நாடு — ரூ. 24—00
(ஆ) வெளிநாடு — ரூ. 36—00

என நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

எனவே, ஏற்கனவே 1983ஆம் ஆண்டிற்குப்பழைய சந்தாத் தொகையான ரூ.15–00 அனுப்பியுள்ள உள்நாட்டுச் சந்தாதாரர்கள், மீதியுள்ள ரூ. 9-00ஐயும், 1983ஆம் ஆண்டிற்கு இந்தியப் பணம் ரூ. 25-00 முன்பே செலுத்தியுள்ள வெளிநாட்டுச் சந்தாதாரர்கள் மீதியுள்ள இந்தியப் பணம் ரூ. 11-00 ஐயும் உடனடியாகப் பண அஞ்சலில் இவ்வலுவலகத்திற்கு அனுப்பி வைத்து, 1983 ஆம் ஆண்டு முழுவதிற்கும் முழுச் சந்தாதாரராகப் பதிவு செய்து கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள்.

—ஆசிரியர்.

# தேவாரப்பாடல் பெற்ற சோழநாட்டுச் சிவத்தலங்கள்

## 1. சிதம்பரம்

இத்தலம் 'கோயில்' எனக் காரண இடு குறிப் பெயராகச் சிறப்பித்து வழங்கப்பெறும். தில்லை, பெரும்பற்றப் புலியூர் முதலிய வேறு பெயர்களும் இதற்கு உண்டு. உலகெங்கணும் உள்ள கலைஞர்களால் பெரிதும் வியந்து கொண்டாடப் பெறும் நடராசப் பெருமான் சிறப்புற எழுந்தருளி விளங்கும் தலம் இதுவே.

நடராசப்பெருமானுக்கு உரிய ஐந்து சபைகளுள், திருவாலங்காடு இரத்தினசபை; மதுரை இரசித சபை (வெள்ளியம்பலம்); திருநெல்வேலி தாமிரசபை; திருக்குற்றாலம் சித்திர சபை; சிதம்பரம் கனகசபை (பொன்னம்பலம்) எனப்படும்.

இவைகளேயன்றி, ஐந்து சபைகள் சிதம்பரத்திலும் கூட உண்டு. நடராசப் பெருமான் இருக்கும் இடம் சிற்சபை; ஆயிரக்கால் மண்டபம் இராஜசபை; சிற்சபைக்கு முன்னால் உள்ளது கனகசபை; கொடிமரத்திற்கு அருகில் உள்ளது நிருத்தசபை; பேரம்பலம் என்பது தேவசபை எனப் பெயர்பெறும்.

திருமூலட்டானேசுரர், உமையம்மை, முக்குறுணி விநாயகர், பாண்டிய நாயகம், சிவகாமியம்மை, நவலிங்கம், துர்க்கை முதலியன இங்கு மிகவும் சிறப்பாகத் திகழ்வன ஆகும்.

சிற்சபைக்குள் இறைவன் சகளம்(உருவம்), நிஷ்களம் (அருவம்), சகள நிஷ்களம் (உருவ அருவம்) என்னும் மூவகைத் திருமேனியுடன் எழுந்தருளியிருக்கின்றார். சகளத் திருமேனி நடராசர் திருவுருவம்; நிஷ்களத் திருமேனி சிதம்பர இரகசியம்; சகள நிஷ்களத் திருமேனி படிக லிங்கம் (அழகிய சிற்றம்பலம் உடையார்). இவர்களேயன்றி இரத்தின சபாபதியாகிய மரகத நடராசரும், சுவர்ண காலபைரவரும் இங்குக் காட்சியளிக்கின்றனர்.

சேக்கிழார் சுவாமிகள் பேரம்பலம், திருவணுக்கன் திருவாயில், சிற்றம்பலம், திருக்களிற்றுப்படி என்பன குறித்துப் பெரிய புராணத்திற் பாடியுள்ளார். திருவணுக்கன் திருவாயில் இறைவன் ஆடும் இடத்திற்கு அருகில் உள்ளது. பேரம்பலம் சோமாஸ்கந்தர் முதலிய உற்சவ நாயகர்கள் எப்பொழுதும் எழுந்தருளியிருக்கும் இடங்கள். சிற்றம்பலம், கூத்துடையான் ஆகிய சபாநாயகர் எழுந்தருளியிருப்பது. திருக்களிற்றுப்படி, யானைத் துதிக்கை வடிவாய் இரண்டுபுறமும் அமைந்துள்ள ஐந்துபடிகள். இவ்வைந்தையும் கடந்து கூத்தப்பெருமான் வீற்றிருக்கின்றார். யானைத் துதிக்கை பிரணவத்தையும், ஐந்து படிகள் திருவைந்தெழுத்தையும் குறிக்கும். 'திருக்களிற்றுப் படியார்' என்னும் நூற் பெயர்க் காரணம் இங்கு அறியத்தகும்.

வைணவர்கள் இதனைத் திருச்சித்திர கூடம் என வழங்குவர். பெருமான் தில்லைக் கோவிந்தராசர் எனவும், தாயார் புண்டரீக வல்லி எனவும் பெயர் பெறுவர். பெருமாள் திருமொழி, பெரிய திருமொழி என்பனவற்றில் திருமங்கையாழ்வார், குலசேகர ஆழ்வார் இருவரும் இதனைப் பாடி, மங்களா சாசனம்செய்திருக்கின்றனர்.

இறைவனுக்கு உரிய தாண்டவங்கள் ஏழு. அவை முறையே காளிகா தாண்டவம், கௌரி தாண்டவம், சந்தியா தாண்டவம், சங்கார தாண்டவம், திரிபுர தாண்டவம், ஊர்த்துவ தாண்டவம், ஆனந்த தாண்டவம் என்பன. இவற்றுள் நடராசப்பெருமான் புரிவது ஆனந்த தாண்டவம். இதனைப் பஞ்ச கிருத்தியப்பரமானந்த தாண்டவம் என்றும் கூறுவர்.

சிதம்பரத்தில் வேடன் பிள்ளையார் கோயில், செங்கழுநீர்ப் பிள்ளையார் கோயில், சேக்கிழார் கோயில், கமலீசுவரன் கோயில், தேரடிப் பிள்ளையார் போயில், மாரியம்மன் கோயில், காளியம்மன்கோயில், வீரபத்திர சுவாமிகோயில், செல்லியம்மன் கோயில், நந்தனார் கோயில், கூத்தாடும் பிள்ளையார் கோயில், இளமை யாக்கினார் கோயில், அனந்தேசுவரர் கோயில், தில்லைக் காளிகோயில், நரமுகப் பிள்ளையார் கோயில், மத்யந்தனேசுவரர் கோயில் எனப் பல கோயில்கள் உள்ளன.

இங்கு ஞானப் பிரகாசர்குளம்(தெப்போற்சவம் நடைபெறுவது), ஓமகுளம்(நந்தனார் ஓம

குண்டத்தில் மூழ்கி எழுந்த இடம்), வியாக்கிரபாத தீர்த்தம், ஆனந்த தீர்த்தம், திருப்பாற்கடல், சிவகங்கை முதலிய சிறந்த தீர்த்தங்கள் உள்ளன.

இங்குள்ள கோபுரங்களுள் கிழக்குக் கோபுரம், மதுரைச் சுந்தரபாண்டியதேவன் (கி.பி. 1250) கட்டியது. கி.பி. 1785 ஆம் ஆண்டில் காஞ்சிபுரம் பச்சையப்பமுதலியார் மனைவி விஜயாள் அம்மாளின் தாயார் சுப்பம்மாள் இக்கோபுரத்தைப் பழுதுபார்த்துச் செப்பனிட்டார்.

வடக்குக் கோபுரம் விசயநகரப் பேரரசர் ஆகியகிருஷ்ணதேவராயர் (கி.பி. 1507-1530), தம்முடைய ஒரிசா வெற்றி நினைவாகக் கட்டியது. 140 அடி உயரம் கொண்டது. தெற்குக் கோபுரம் கோப்பெருஞ்சிங்கதேவன் (கி.பி.1243) என்ற பல்லவ வேந்தனால் கட்டப்பெற்றது. மேற்குக் கோபுரமும் அவன்கட்டியதே என்பர். கிழக்கு மேற்குக் கோபுரங்களில் 108 நாட்டிய பேதங்களை அறிவிக்கும் சிற்பங்கள் அழகிய முறையில் அமைந்துள்ளன.

கிழக்குக் கோபுர வாயிலாக மணிவாசகரும், தெற்குக் கோபுர வாயிலாக ஞானசம்பந்தரும், மேற்குக் கோபுர வாயிலாக அப்பர் சுவாமிகளும், வடக்குக் கோபுரவாயிலாகச் சுந்தரமூர்த்தி சுவாமிகளும், இங்கு வந்து இறைவனை வழிபட்டனர் என்று பெரியோர்கள் கூறுவர்.

இங்குள்ள நூற்றுக்கால் மண்டபம் கட்டியவன் தொண்டை நாட்டு மணவிற் கூத்தனாகிய காலிங்கராயன் (கி.பி.1113-1150) என்பவன். இங்குள்ள ஆயிரக்கால் மண்டபம் (இராஜசபை) தான், சேக்கிழார் சுவமிகள் பெரிய புராணத்தை அரங்கேற்றிய இடம்.

பதஞ்சலி வியாக்கிரபாதர் திருமூலர் நால்வர்பெருமக்கள் முதலிய சான்றோர்கள் பலரும் வாழையடி வாழையாக வழிபட்டு வணங்கி வந்துள்ள புனிதத் தலம் இது. தலவிருட்சம் தில்லை; ஆல் என்றும் கூறுவர்.

மறைஞான சம்பந்தரின் சீடர் உமாபதி சிவம். அவர் தில்லை மூவாயிரம் தீட்சிதர்களுள் ஒருவர். கோயிற்புராணம், சேக்கிழார் சுவாமிகள் புராணம் முதலியன பாடியவர். 'சித்தாந்த அஷ்டகம்' என்னும் எட்டு நூல்களை இயற்றியவரும் இவரே. இவர் வாழ்ந்து வந்த திருமாளிகை, சிதம்பரம் மாலைகட்டித் தெருவில் திருவாவடுதுறை மடமாக இருக்கின்றது. உமாபதி சிவத்தின் சமாதிக்கோயில், அண்ணா மலைநகர் எல்லையில் கொற்றவன்குடி என்னும்பகுதியில் உள்ளது.

சிதம்பரம் கோயில் முதன் முதலில் இரணியவர்மன் என்னும் மன்னவனால் அமைக்கப் பட்டது என்பர். இக்கோயில் அண்டம் (Macrocosm) பிண்டம் (Microcosm) என்னும் இரண்டின் நுட்பங்களையும் உணர்த்தும் நிலையில் உள்ளது என்பர் பெரியோர். அண்டத்தின் ஒரு பகுதி பரதகண்டம். அதில் உள்ள இலங்கைக்கும், இமயத்திற்கும் இடையில் உள்ளது தில்லை. இலங்கை இடைகலை, இமயம் பிங்கலை, தில்லை சுழுமுனை (நடுநாடி). நான்கு கோபுரங்கள் நான்கு வேதங்கள். ஆயிரக்கால் மண்டபம் சகஸ்ராரம் என்னும் ஆயிரம் இதழ்த் தாமரை. சிவகங்கைத் தீர்த்தம் சகஸ்ராரத்தை அடுத்த அமுதவாவி. நான்கு தம்பங்கள் நான்மறைத் தேவதைகள். அடுத்துள்ள 28 நெடுமரத் தம்பங்கள் 28 ஆகமங்கள். 96 பலகணிகள் 96 தத்துவங்களைக் குறிக்கின்றன. விமானத்தின் 9 கலசங்கள் நவசக்திகளை நினைப்பிக்கின்றன. விமானத்தின் 64 கழிகள் 64 கலைகளையுணர்த்தும். கனகசபையின் பொன் ஓடுகள் 21600. அவை மனதர்களாகிய நாம் நாடோறும் விடும் சுவாசங்களின் தொகையை அறிவிக்கின்றன. அவற்றில் அடித்துள்ள ஆணிகள் 72000. அவை நம் உடம்பிலுள்ள நாடிகளைப் புலப்படுத்தும். இங்குள்ள இராஜசபை தேவசபை நிருத்தசபை கனகசபை சிற்சபை என்னும் ஐந்தும் முறையே தூலவுடல், சூக்குமவுடல, குணவுடல், கஞ்சுகவுடல், காரணவுடல் என்னும் ஐந்ததையும் சுட்டும். இங்ஙனம் பல தத்துவ நுட்பங்கள் இக்கோயில் அமைப்பில் திகழ்கின்றன.

இங்குக் கனகசபையைச் சுற்றியுள்ள பிராகாரம் விக்கிரம சோழன் திருமாளிகை; திருமூலட்டானத்தைச் சேர வருகின்ற இரண்டாம் பிராகாரம்குலோத்துங்கசோழன் திருமாளிகை; அதற்கு அடுத்துள்ள மூன்றாம் பிராகாரம் இராசாக்கள் தம்பிரான் திருமாளிகை.

தில்லை என்னும் சிதம்பரத்தில் இருந்தே திருமுறைகளை நம்பியாண்டார் நம்பிகள், முதலாம் இராசராச சோழன் (கி. பி. 985-1014) காலத்தில் கண்டெடுத்துத் தொகுத்தளித்தார். ஒரு சிலர் ஆதித்த சோழன் காலத்தில் என்றும் கூறுவர். திருமுறைகண்டவிநாயகர் இரண்டாம் பிராகாரத்து மேலை வாசலின் எதிரில் உச்சியில் இருக்கின்றார். இவரை உச்சிப்பிள்ளையார் என இக்காலத்து மக்கள் வழங்குவர்.

சைவ சித்தாந்த சந்தான ஆசிரியர்களுள் மறைஞான சம்பந்தரும், உமாபதி சிவாசாரியரும் இத்தலத்தில் வாழ்ந்தவர்கள் ஆவர். மறைஞான சம்பந்தர் சிவயோகத்தில் அமர்ந்திருந்த இடமாக மேற்குக் கோபுரத்தில் தென் பக்கத்தில் ஒரு குகை இருக்கின்றது. இவருடைய சமாதிக்கோயில் 'சிங்காரத் தோப்பு' என வழங்கும் திருக்களாஞ்சேரியில் உள்ளது.

## 2. திருவேட்களம்

சிதம்பரம் இருப்புப்பாதை நிலையத்திற்குக் கிழக்கே அருகில் இருப்பது. அண்ணா மலைப் பல்கலைக் கழகம் அமைந்துள்ள இடமே திருவேட்களம் ஆகும். அருச்சுனனுக்குச் சிவபிரான் பாசுபதம் கொடுத்த தலம். சுவாமி பாசுபதேசுவரர். அம்பிகை நல்லநாயகி. கோயிலில் அருச்சுனன் திருவுருவமும், பாசுபதம் ஏந்திய சுவாமியின் திருவுருவமும் உள்ளன. வைகாசி விசாக நாளில், இறைவன் வேடனாக வந்து அருச்சுனனுடன் போர்புரிந்து பாசுபதப் படை

நல்கும் விழா நடைபெறுகின்றது. அப்பர், சம்பந்தர், பாடல் பெற்றது.

## 3. திருநெல்வாயில்

சிதம்பரம் இருப்புப் பாதை நிலையத்தில் இருந்து தென்கிழக்கே 1.5 கல் தொலைவிலும், அண்ணாமலை நகருக்குத் தெற்கே ஒரு கல் தொலைவிலும் உள்ளது. சம்பந்தர் பாடல். சுவாமி உச்சிநாதர். அம்மை கனகாம்பிகை.

## 4. திருக்கழிப்பாலை

இத்தலம் முன்னர்க் கொள்ளிடத்தின் வட கரையில் காரைமேடு என்னும் இடத்தில்இருந்து வந்தது. கொள்ளிடத்தில் வெள்ளம் பெருகிப் பழுதுபட்டதனால் இப்போது திருநெல்வாயில் என்னும் சிவபுரியில், சிதம்பரம் இருப்புப் பாதை நிலையத்திற்குத் தென்கிழக்கிற் சுமார் 3 கல் தொலைவில், படுகைமுதலியார் குடும்பத்தில் திரு. பழநியப்ப முதலியார் என்னும் சிவ புண்ணியச் செல்வரால், புதிய கோயில் கட்டி அமைக்கப் பெற்றுள்ளது. வான்மீகி முனிவர் பூசித்த தலம். சுவாமி பால்வண்ணநாதர். அம்பிகை வேதநாயகி. தலைவனைப் பிரிந்து வருந்தும் தலைவியின் மெலிவு கண்டு, செவிலித்தாய் அல்லது நற்றாய் கூறிய துறையாக அகப் பொருட்சுவையில் திருநாவுக்கரசர் பாடியுள்ள பாடல்கள் மிகவும் சிறப்புடையவை. அப்பர், சம்பந்தர், சுந்தரர் பாடல்.

## 5. திருநல்லூர்ப் பெருமணம்

இதனை ஆச்சாள்புரம் என மக்கள் வழங்குவர். ஆச்சாரியர்கள்புரம் என்பது இங்ஙனம் மருவியதாக அறிஞர்கள் கூறுவர். இது மாயூரத்தில் இருந்து சென்னைக்குச் செல்லும் இருப்புப் பாதையில் கொள்ளிடம் என்னும் நிலையத்தில் இருந்து கிழக்கே 3 கல் தொலைவில் விளங்குகின்றது. திருஞானசம்பந்தருக்குத் திருமணம் நிகழ்ந்ததும், அவர் தம் திருமணத்தில் தம் மனைவியாரோடும், அடியார் குழாங்களோடும் இறையருளால் தோன்றிய சோதியிற் சென்று கலந்து முக்தி எய்தியதும் இத்தலமேயாகும். அதனால் இதற்கு மணவை என்றும், முத்தி புரம் என்றும் பெயர்கள் உண்டு. திருஞானசம்பந்த சுவாமிகள் திருமணத்தின்போது, அம்பிகை தோன்றி அங்குக் கூடியிருந்த அனைவருக்கும் திருவெண்ணீறு அளித்துச் சோதியுட் புகுவித்த தலம் ஆதலின் ஆயாள்புரம், ஆச்சாள் புரம் எனப் பெயர் பெற்றது என்றும் கூறுவர். அம்பிகைக்கு இங்குத் திருவெண்ணீற்று உமை என்று பெயர். வசிட்டர் விசுவாமித்திரர் முதலிய முனிவர்களுக்கு இறைவன் சிவலோகக் காட்சி யளித்தமையின், சுவாமி சிவலோகத் தியாகர் எனப்படுவார். திருஞானசம்பந்தரின் திருமணத்தில் தோன்றிய சிவசோதியைக்கண்டு அஞ்சி ஓடிய அபக்குவர்களையும்கூட, இறைவன் நந்தியம் பெருமானால் மறித்து வெருட்டித் திரும்பி வரச் செய்து, சிவசோதியுட் புகுவித்து முத்தி எய்துமாறு அருள்புரிந்தார். இதற்கு அடையாளமாக நந்தி வெருட்டி, நந்திமடு என்ற பெயர்களுடைய இடமும் மடுவும் இங்கு உள்ளன. ''காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி'' என்னும் பொது நமச்சிவாயத் திருப்பதிகம் திருஞான சம்பந்தரால் அருளிச் செய்யப்பெற்ற தலம் இதுவே. இங்குள்ள நடராசர் பண்பதைக்க ஆடும் நாயனார் எனக் கல்வெட்டுக்களில் குறிக்கப்பட்டுள்ளார். தலவிருட்சம் வில்வம். ஆச்சாமரம் என்றும் கூறுவர். கி.பி. 1749 இல் இங்கு ஆங்கிலேயருக்கும், தஞ்சை மன்னன் படைகளுக்கும் ஒரு பெரும் கடும் போர் நிகழ்ந்தது. அதுபோது லாரென்ஸ் என்னும் ஆங்கிலேயர் இக்கோயிலைக் கைப்பற்றிக் கொள்ள முயன்றபோது புனிதமான இடங்களையும் பொருள்களையும் அழிக்காமல் இருக்கும்படி வேண்டிக் கொண்டு, இங்கிருந்த கோயிலைத் திறந்து விட்டனர் என்று, தஞ்சை மாவட்டச் செய்தி நூல் தெரிவிக்கின்றது. அம்மன் கோயிலைக் கட்டியவர் 'சந்திரசேகரன் பஞ்சநதி வாணன்' எனக் கல்வெட்டுக்கள் அறிவிக்கின்றன. இது திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனத்தின் பரிபாலனத்திற்கு உட்பட்ட கோயில்களுள் ஒன்று. கொட்டையூர்ச்சிவக்கொழுந்து தேசிகர் இயற்றிய தல புராணமும், மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை பாடிய திருவெண்ணீற்றுமைபிள்ளைத் தமிழ் முதலியனவும், இத் தலத்தின் இலக்கியங்களாகும். தீர்த்தம் பஞ்சாக்கர தீர்த்தம் முதலியன சம்பந்தர் பதிகம்.

## 6. திருமயேந்திரப்பள்ளி

இது கோயிலடிப் பாளையம் என வழங்கும். மகேந்திரன் என்னும் ஓர் இந்திரன் வழிபட்ட காரணத்தால் மயேந்திரப்பள்ளி எனப் பெயர் பெற்றது. '' சந்திரன் கதிரவன் தகுபுகழ் அயனொடும் இந்திரன் வழிபடஇருந்த எம் இறையவன், மந்திரம் மறைவளர் மயேந்திரப் பள்ளியுள் அந்தமில் அழகனை அடிபணிந்துய்மினே'' என்பது சம்பந்தர் தேவாரம். சந்திரனும் சூரியனும் பிரமனும்கூட இங்குப் பூசித்துப்பேறுபெற்றனர். சுவாமி திருமேனி அழகர். அம்மை வடிவாம்பிகை. இத்தலம் ஆச்சாபுரத்துக்கு வடகிழக்கே 4 கல் தொலைவில் உள்ளது.


## 7. தென்திருமுல்லைவாயில்

இத்தலம் சீர்காழிக்குக் கிழக்கே 3 கல் தொலைவில் உள்ளது. தொண்டை நாட்டிலும் திருமுல்லைவாயில் எனஒரு தலம் இருத்தலால், இது தென்திருமுல்லைவாயில் எனப்பட்டது. இங்கு உமாதேவியார் தவம் இருந்து பூசித்துத் தட்சிணாமூர்த்தியினிடம் திருவைந்துஎழுத்து உபதேசம் பெற்றனர். அதனை ''அணி கொண்ட கோதையவள் என்றும் ஏத்த அருள் செய்த எந்தை'' எனவரும் சம்பந்தரின் திருக் கடைக்காப்புப் பாடல் கொண்டு உணரலாம். தேவேந்திரன் சுதர்மன் முதலானோர் பூசித்தனர். சுவாமி முல்லைவனநாதர். தேவி கோதையம்மை.

...தொடரும்.




திருவரங்கம் அருள்மிகு அரங்கநாதசுவாமி திருக்கோயிலின் இராயகோபுரம் ஏழாம் நிலைத் துவக்க விழாவில், அறநிலைய அமைச்சர் மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் அவர்கள் உரை நிகழ்த்துதல்.



திருவேற்காடு சீலத்திரு ஐயப்ப சுவாமிகள் திருமடம் அறக்கட்டளையின் சார்பில், தவத்திரு ஐயப்ப சுவாமிகள் அவர்களுக்கும் "சீருந்து" வழங்கும் பெருவிழா நிகழ்ந்த பொழுது, தமிழக நிதியமைச்சர் மாண்புமிகு டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன், M.A. D.Litt., அறநிலைய அமைச்சர் மாண்புமிகு இராம. வீரப்பன், ஆணையர் திரு. ஆர் ஷண்முகசிகாமணி, I.A.S., மயிலைத் தொகுதிச் சட்டமன்ற உறுப்பினர் திரு T. K. கபாலி, M.L.A., ஆகிய பெருமக்கள் பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



திருவேற்காடு சீலத்திரு ஐயப்ப சுவாமிகள் திருமடம் அறக்கட்டளையின் சார்பில், தவத்திரு ஐயப்ப சுவாமிகள் அவர்களுக்குச் ''சீருந்து'' வழங்கும் பெருவிழா நிகழ்ந்த பொழுது, தமிழக நிதியமைச்சர் மாண்புமிகு டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன், M.A. D.Litt., அறநிலைய அமைச்சர் மாண்புமிகு இராம. வீரப்பன், ஆணையர் திரு. ஆர் ஷண்முகசிகாமணி, I.A.S., மயிலைத் தொகுதிச் சட்டமன்ற உறுப்பினர் திரு T. K. கபாலி, M.L.A., ஆகிய பெருமக்கள் பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



வெளியிடுபவர் : ஆணையர், தமிழ்நாடு அரசு இந்து சமய அறநில்லய ஆட்சித் துறை, சென்னை-600 034.
ஆசிரியர் : ந. ரா. முருகவேள், எம்.ஏ.,எம்.ஓ,எல்.
அச்சிடுவோர் : தமிழரசு அச்சகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002.